படைப்பு

ஊற்று-5 | நதி-2 | ஜூன்-2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

## தகவும் நானும்...

## 50வது இதழ்

படைப்பு **தகவு**

கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-5 | நதி-2 | ஜூன் 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575



நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.


## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **தகவும் நானும்** -பக். 05
- **வானவில் வண்ண மின்னல்**
  - ஆதிரன் -பக். 17
- **“ஆத்தா ஒஞ்சேல...”**
  - கவிஞர் ஏகாதசி -பக். 29
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 33
- **தத்தளிக்கும் மானுடம்**
  - கவிஜி -பக். 39
- **தீ சூழலியல்**
  - கோ.லீலா -பக். 43
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 56
- **ஒரு மிடறு அடர் வெண்மை கவிதையின்வழி சமூகநிலை**
  - வே.செவ்வந்தி -பக். 59

## சிறுகதைகள்


- **மகேஸ்வரி @ மரியம்**
  – குடந்தை அனிதா –பக். 23

- **குருத்து அகம் விரித்து**
  – நெய்வேலி பாரதிகுமார் –பக். 48


## கவிதைகள்


- **பூங்கோதை கனகராஜன்** –பக். 14
- **இளையவன் சிவா** –பக். 14
- **மழைக்குருவி** –பக். 14
- **அகதா** –பக். 15
- **ச.ஆனந்தகுமார்** –பக். 15
- **ரிஸ்கா முக்தார்** –பக். 16
- **நிலவை பார்த்திபன்** –பக். 16
- **ஐ.தர்மசிங்** –பக். 16
- **மகேஷ் சிபி** –பக். 16
- **தி.கலையரசி** –பக். 42
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 21**
  – ஜின்னா அஸ்மி –பக். 63

# தலையங்கம்

**வணக்கம்.**

வணக்கம். படைப்பு 'தகவு' ஐம்பதாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

ஐம்பதாவது இதழ்வழி நண்பர்களைச் சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சி. 2018 மே மாதம் துவங்கிய இதழ். கரடுமுரடான பாதையிலே ஓர் இனிய பயணம்.

ஐம்பது இதழ்களிலும் படைப்புகளை நல்கிய படைப்பாளிகளுக்கு மனம் நெகிழ்ந்த நன்றிகள். நம் இதழ் இலவசமாய் வெளிவரும் மாத மின்னிதழ். லாப நோக்கமற்று இலக்கியப் பகிர்தலுக்கென வெளிவரும் சூழலில் தம் படைப்புகளை மகிழ்வுடன் அனுப்பித்தரும் நண்பர்களால்தான் இதழின் பக்கங்களை உருவாக்கமுடிகிறது. படைப்புகளின் தரம்தான் இதழின் தரம். கதை, கவிதை, கட்டுரை எனத் தரமான படைப்புகளை அளித்துத் தரமான இதழாய்த் தகவு மிளிரக் காரணமான தமிழின் உன்னத படைப்பாளர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இதழின் உயிர்நாடிகளாக இதழுக்குரிய படைப்புகளைச் சேகரிக்கும் நண்பர்களுக்கு அன்பின் நன்றிகள். தரமான எழுத்துக்களை இனங்கண்டு அடையாளப்படுத்துவதில் உடனுழைக்கும் நண்பர்களுக்குப் பெரும் பங்குண்டு. ஒவ்வொரு மாதமும் இறுதிக்கட்டப் பணிகள் வரை உற்சாகமாய்ச் செயல்படும் அந்த முன்னணிப் படை பின்னணியில் இயங்குவதால்தான் தகவைச் சிறப்பாக வெளிக்கொணர இயலுகிறது. அவர்கள் எந்தப் பிரதிபலனும் நோக்காதவர்கள். அவர்கள் சேகரித்துத் தரும் பல படைப்புகள் படைப்பாளிகளின் பெயருடன்தான் வரும். பயன்நோக்கா இலக்கியப் பணியாற்றும் அந்நண்பர்களுக்கு நன்றிகள்.

உங்கள் வாசிப்புதான் இதழின் இலக்கு. இதழை வாசித்தும் விமர்சித்தும் பலவிதப் பின்னூட்டங்கள் அளித்தும் இதழ் வரத் தாமதமானால் விசாரித்தும் மிகுந்த அன்புடன் ஆதரவளித்துவருகிற வாசக நண்பர்கள் அனைவருக்கும் நன்றி. நண்பர்களின் பகிர்தல்தான் இதழின் பரவல். நண்பர்களின் பரிந்துரையே இதழுக்கான விளம்பரம். தமிழ் வழங்கும் நிலம் முழுமைக்கும் இதழைக் கொண்டு சென்ற படைப்பு நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

வடிவமைப்புப் பணி, இணையப் பணி மேற்கொண்டுவரும் நண்பர்கள், முகநூல் படைப்புக் குழும நண்பர்கள் அனைவருக்கும் தகவு மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. இன்னுமின்னும் உங்கள் வாழ்த்துக்களையும் ஆதரவினையும் எதிர்பார்த்துப் பயணத்தைத் தொடர்கிறது.

இம்மாதத் தகவின் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர். ■

# தகவும் நானும்...

**தகவு தொடங்கிய காலந்தொட்டுத் தகவுடன் பயணித்த நண்பர்கள் தகவுடனான தங்கள் பிணைப்பு குறித்துப் பகிர்ந்துகொண்டவை..**

எழுத்தாளர் ஓவியர்

## அடி. இரஜினிகாந்தன்

தகவு..

எனக்குள் இருந்த திறமைகளை

மட்டுமல்ல



தனக்குள்ளே

பூட்டி வைத்திருந்த

எல்லோரது திறமைகளுக்கும்

தாள் திறந்த

கதவு...!

தகவு இதழில்

நான்

முதல் வரியை

எழுதத் தொடங்கிய

பிறகுதான்

எனக்கு

முகவரி

கிடைத்தது.....!

எனது

கிறுக்கல்களையும்

பிதற்றல்களையும்

ஓவியமென்றும்

காவியமென்றும்

அங்கீகரித்து

ஆவணப்படுத்திய

காப்பகம்

இதோ

ஐம்பதாவது இதழாக

மலர்ந்திருக்கிறது..

இந்த

இலக்கியவாதிகளின்

வேடந்தாங்கல்

முதல் இதழ் தொடங்கி

ஐம்பதாவது இதழ்வரை

எனது பங்களிப்பையும்

எனக்கான அங்கீகாரத்தையும்

எள்ளளவும் குறையாமல்

கொண்டாடிக்கொண்டிருக்கிறது.!

எழுத்தாளர்

## கவிஜி

படைப்புக்கு முன் படைப்புக்குப் பின் என்று இந்தக் கவிஜியைப் பிரிக்கலாம்.

படைப்பின் படைப்பு "தகவு" இதழ் தரமான இலக்கிய வரம் என்றே சொல்லலாம். கவிதை கதை கட்டுரை நேர்காணல் நூல் அறிமுகம் என்று தொடர்ந்து வாசகப் பரப்பில் சிந்தனையைக் கிளை விட்டுப் பரப்பிக்கொண்டே போவது பேரழகு. இலக்கியச் சாயங்களின் மத்தியில் அசல் வண்ணத்தில் வானம் காட்டுவது தகவு. மாதாமாதம் தொடர்ந்து படிக்கும் வாசகன் நான். அறிவுக்குத் தீனி போடும் ஒவ்வொரு பக்கத்திலும் இலக்கிய சாமரம் வீசக் காண்கிறேன்.



ஓர் எழுத்தாளனாக எனது உலக சினிமா தொடர்.. தொடர்ந்து தகவில் வந்துகொண்டிருப்பது ஆகச் சிறந்த அனுபவமாக இருக்கிறது. கற்றலும் அதன் வழியே பெற்றதுமாகத் தகவு ஒரு இலக்கியக் களஞ்சியம்.

எத்தனையோ அறிமுகக் கவிஞர்களுக்குத் தாய் வீடாகத் தகவு இருக்கிறது. நல்ல விதை எதுவாக இருப்பினும் நீரூற்றித் தென்றல் காட்ட தகவு தவறுவதில்லை. இன்றைய தேதியில் தமிழ்நாட்டில் இருக்கும் பெரிய பத்திரிகைகளுக்குச் சமமாகத் தகவு தன்னை நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறது. வலிமையாய்... தரமாய் இருப்பின் யாரின் படைப்பும் அச்சில் ஏறும். வேண்டியவர் வேண்டாதார் என்ற எந்தப் பாகுபாடும் தகவுக்கு இல்லை.


தகவு இலக்கியத்தின் பெரும் கதவு. திறமை உள்ள கைகள் தட்டக் கூட வேண்டாம். தொட்டாலே திறந்துகொள்ளும். அந்த வகையில் தகவோடு நான் எழுத்தாளனாகவும் வாசகனாகவும் ஒரு சேரப் பயணம் செய்வதைப் பெருமையாகவே கருதுகிறேன். பெருமை இருக்கும் அதே அளவு பேரன்பும் தகவோடு இருப்பதுதான் தகவு சாதித்திருப்பது. தொடரட்டும். வாழ்த்துகிறேன்.

●●

எழுத்தாளர்

## எம். எம். தீன்

இதழ் என்பது வரலாறு. யாரெல்லாம் இதழ்களில் பணிபுரிந்தார்களோ அவர்கள் எல்லாம் நீள் புகழ் பெறுவார்கள். காந்தி, பாரதி, பெரியார், அண்ணா, கலைஞர், கல்கி, சோ என்று சொல்லிக்கொண்டே போகலாம்.



தகவு பொன் விழாவைத் தொடுகிறது என்று சொன்னால் அதற்குப் பெரும் வாழ்வு வாழ்ந்த சிறப்பு இருக்கிறது என்று பொருள்.

நதியைப் போலப் பாவிப் போகிற தகவு இதழின் கரையோரத்தில் நின்றிருந்த நான் குளிர்ந்த நீருக்குள் இறங்கிக் குளித்திருப்பது எத்தனை மகிழ்வாய் இருக்கிறது. கொள்ளை கொள்ளும் அதன் பூ மரங்கள் உதிர்க்கும் பாட்டோலைகள், கவிதை மலர்கள், காவியக் கிளைகளோடு போகிற நதியை வாசித்துப் பூரித்திருக்கிறேன்.

அத்தனை சிறப்பான நேர்காணல்களை அழகான புகைப்படங்களோடு பதிவிட்டு எனக்கு மட்டுமல்ல இன்றைய சமகால எழுத்தாளர்களை இந்த இலக்கியப் பூமிக்கு அறிமுகப்படுத்திப் பெருமை சேர்க்கிறது தகவு.

ஒவ்வொரு கட்டுரை, கதை, கவிதை என எல்லாவற்றையும் அலசிப் பார்த்துச் சிறந்ததை வெளியிடுவது அபூர்வமானது. அதைவிடவும் கவிதை, சிறுகதைப் போட்டிகள் அறிவித்துப் பரிசு வழங்கிக் கவுரவிக்கும் தங்கள் இதழின் மேன்மையான செயல்கள் ஆச்சரியப்பட வைக்கின்றன. இன்னும் இன்னும் அதிகமான படைப்புகளை உங்கள் படைப்பு குழுமம் உருவாக்கும் என்பதும் அதில் எவ்வித சமரசமும் செய்ய மாட்டீர்கள் என்பதும்தான் உங்கள் இதழின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் அக்மார்க் சான்று. தொடரட்டும் தூய பணி.

நானும் இந்தத் தகவின் உலகத்தில் சிறுகதைகள், நேர்காணல் எனக் கலந்து கொண்டிருப்பது உவகை தருவதாக இருக்கிறது.

இத்தனை எழுத்தாளர்கள் தமிழில் இன்று எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டியமை மிகவும் சிறப்பானது. இன்னும் சீரிய எழுத்தாளுமைகளை அடையாளம் கண்டு இன்னும் இதழ் சிறந்தோங்க என்றும் விரும்புகிறேன். வேண்டுகிறேன். நன்றி.

●●

எழுத்தாளர்

## கண்மணி ராசா

இது மின் ஊடகங்களின் காலம்.

எளிதில் கிடைப்பது... விரைவாகக் கிடைப்பது என்பன மின்னூடகங்களைப் பரவலாக்கியுள்ளன. அதிகமாக்கியுள்ளன. ஆனால் எது செழுமையான படைப்புகளைத் தாங்கியுள்ளதோ அது நிலைக்கிறது. வெல்கிறது.



அப்படியான இதழாகத் தகவு இதழைக் கருதுகிறேன்.

புதிய புதிய எழுத்துக்களுக்கு இடம்தரும் அதே நேரத்தில் அவை நேர்த்தியானதாக.. காத்திரமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதில் தகவு காட்டும் அக்கறை குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே வடிவமைப்பு மிகக் கவனமாக... அவ்வளவு அழகாகச் செய்யப்பட்டுள்ளதையும் கூறவேண்டும்.

தகவு இதழில் வரும் நேர்காணல்கள் தனி நூலாகத் தொகுக்க வேண்டிய அளவு முக்கியமுடையவை. 50வது இதழ் என்கிற சாதனைக்குப் பின்னுள்ள உழைப்பு பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

எழுத்தாளர்

## முகமது பாட்சா

படைப்பு குழுமத்தின் குடும்ப உறவுகளில் நானும் ஒருவன் என்ற வகையில் தகவு இணைய இலக்கியச் சிற்றிதழ் தற்போது தனது 50வது இதழைத் தனிப் பொலிவுடன் கொண்டுவருவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த இதழுக்குப் பெயர் வைப்பதற்கான கலந்தாய்விலிருந்தே அதனுடன் தொடர்பிலிருந்து வந்திருக்கிறேன் என்பதே மிகவும் பெருமையான மகிழ்விற்குரிய செய்தியாகும்.



2018 மே மாதம் அது தன் முதல் இதழை வெளிப்படுத்தியபோதே சிரத்தன்மையும் ஒழுங்கும் அதனிலிருந்து வெளிப்பட்டன. என் பங்களிப்பாக முதல் இதழிலிருந்து ‘பாஷோவின் பழைய குளம்’ என்ற தொடர்க் கட்டுரை ‘அகழ்வும் நிகழ்வும்’ என்ற உள்ளடக்கத்தில் தொடர்ந்து 21 இதழ்களாக வெளிவந்தது.

இதழின் தரத்தில் சற்றும் விட்டுக்கொடுத்தல் எதுவும் இல்லாமல், எந்தவித இலாப நோக்கமும் இல்லாமல் இலக்கிய இதழ்களில் தனித்தன்மையுடன் வெளிவரும் தகவு சிற்றிதழ் தமிழ் ஆர்வலர்களின் இணைய இதழ்களின் சேமிப்பாகவே என்றும் திகழும்..

எழுத்தாளர்

## கோ.லீலா

தகவின் மிளிர்வு தமிழின் நிமிர்வு.

படைப்பு குழுமத்தின் வெளியீடான *தகவு* மின்னிதழ் 50வது மாதத்தில் அடியெடுத்துவைக்கிறது.

தகவு பிறப்பதற்கு முன்பிருந்தே படைப்பில் இணைந்து பயணிப்பதில் பெருமைகொள்கிறேன்.



தக்கார் என்ற சொல்லை *நடுநிலை* என்ற பொருளில் வள்ளுவர் பயன்படுத்துகிறார். தகவு என்றால் நடுநிலைதான்.

வளர்ந்த படைப்பாளிகளின் படைப்புகளை வெளியிட பல இதழ்கள் இருந்தாலும் வளரும் படைப்பாளர்களின் தாய்மடி தகவு.

தரமான படைப்புகளை நடுநிலையோடு தேர்வுசெய்து வெளியிடுவது தகவின் மேன்மை.

ஒவ்வொரு மனிதனும் ஒரு பல்கலைக்கழகம். அதிலும் ஆளுமைகள் எனில் எத்தனை எத்தனை அனுபவங்கள். அத்தனையையும் வாசகருக்குத் துய்க்கத் தந்து சிந்தித்து வாழ்வைச் சீராக்கிக்கொள்ள நல்லதொரு நேர்காணலைத் தரும் தகவு. சராசரி கேள்விகளைக் கேட்பதில்லை என்பதே சிறப்பு.

நேர்காணல், கட்டுரைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புக் கதைகள், சூழலியல், இசை, கவிதை, கவிதை ஆய்வுக்கட்டுரைகள், கடித இலக்கியம், ஹைக்கூ, கஸல், திரைப்படம் என இலக்கியத்தின் அத்தனை வடிவத்தையும் சுவைக்கத் தரும் தகவின் அட்டைப்படம் என்றும் மிகச் சிறப்பானதாக இருக்கும்.

வடிவமைப்பு, மிக நேர்த்தியாக, கையில் ஒரு புத்தகத்தை வைத்து வாசிப்பது போன்றதொரு உணர்வை வாசகர்களுக்குக் கடத்தும். கண்ணை உறுத்தாத வண்ணம் மென்மையாகவும் இருப்பது தகவின் கூடுதல் சிறப்பு. புத்தகத்தைத் திருப்புவது போன்றே திருப்பவும் வரும் ஒலி இசைக்குறிப்பு!

தகவில் தமிழிசைக் கருவிகள் என்ற தொடரை எழுதினேன். தற்போது பச்சைய பாத்திரம் எழுதுகிறேன். தொடர் எழுதுகின்ற எழுத்தாளர்களிடம் கனிவுடன் அதைப் பெறும் தன்மை போற்றுதலுக்குரியது.

இலக்கியம், கலை யாவும் ஒரு மனிதனின் ஆயுளை நீட்டிக்கக்கூடியவை. தகவு வாசகர்களின் இன்னுயிரை நீட்டிக்கும் தமிழமுது.

50 இதழ் என்பது சாதாரண விடயமல்ல. தொடர் அர்ப்பணிப்பும், ஆர்வமும் வேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும்
என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்.

- திருக்குறள்.

வள்ளுவரின் மொழிக்கு ஏற்ப யாரிடம் எதைக் கொடுத்தால் சிறக்கும் என்பதறிந்து செயல்படும் தகவின் மிளிர்வு தமிழின் நிமிர்வு.

தமிழ் தொண்டாற்றும் தகவு

வாழிய பல்லாண்டு.

எழுத்தாளர்

## அமுதா தமிழ்நாடன்

வளரும் படைப்பாளர்களை எந்த எதிர்பார்ப்புமின்றி ஊக்கப்படுத்தும் இலக்கியத் தளம் படைப்பு.



கதை, கவிதை, கட்டுரை என வெளிவருகிற படைப்புகளில் மாதந்தோறும் சிறந்த படைப்புகளைத் தேர்வு செய்து வெளியிட்டுப் படைப்பாளிகளை ஆனந்த அதிர்ச்சி தந்து மகிழ்விப்பதில் “தகவு”க்கு ஈடேதுமில்லை.

தொடர்ந்து கவிக்கோ போன்ற ஆளுமைகளின் பெயரில் போட்டிகளை அறிவித்து வாசகர்களின் இலக்கிய ஆர்வத்திற்குத் தொடர்ந்து ஊக்கமளித்துவருகிறது.

எனது கவிதை, கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுப் பல்வேறு பணிச்சூழல்களுக்கிடையில் இயங்கிக்கொண்டிருக்கும் என்னையும் என் இலக்கிய ஆர்வத்தையும் ஈரம் காயாமல் உயிர்ப்போடு வைத்திருக்கும் தகவு மின்னிதழுக்கு என் அன்பும் வாழ்த்துகளும்...

எழுத்தாளர்

## கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

நெடுங்காலமாய் வாசித்துக்கொண்டிருக்கும் எவரும் என்றாவது ஒருநாள் எழுதத்தொடங்கிவிடுவார்கள். அப்படி எழுதுகிறபோதுதான் அதுவரையிலும் பிறரது படைப்புகளை மதிப்பீடு செய்தும் விமர்சித்துக்கொண்டும் இருந்தவர்களுக்கும் ஒரு வாசகரோ, ஒரு விமர்சகரோ அல்லது குறைந்தபட்சம் தான் எழுதியதைப் பொறுமையாகப் படித்து நிறைகுறைகளைச் சொல்லவாவது ஒருவர் தேவைப்படுவார். அப்படியான நிலையில் நான் எழுதத்தொடங்கியபோது, தகவு என்னை வாஞ்சையோடு அணைத்துக்கொண்டது. முதன்முதலில் எனது கட்டுரையை வெளியிட்டதும், தொடர்ந்து எனக்கான வழிகாட்டலை வழங்கிக்கொண்டிருப்பதும் தகவே.

படைப்பிலக்கியங்களில் கவிதைகள்

என் களமல்ல... கட்டுரை என்ற வடிவத்தையே அதிகம் வாசித்திருக்கிறேன் என்பதை எனக்கு உணர்த்திய சிறப்பும் தகவுக்கே உரியது.



மிகப்பெரும் நிறுவனங்களின் வாயிலாக வெளிவரும் இதழ்களுக்குச் சற்றும் தரத்திலும் வடிவமைப்பிலும் உழைப்பிலும் குறையாத வகையில், தரமுடைய இதழாக வெளிவருவதோடு மட்டுமன்றி வாசிப்புலகிற்கு வழித்துணையாய் அமைந்து, அறிவுத்தளத்தில் வாசகர்களைத் தரமுயர்த்தும் பணியைச் செவ்வனே செய்துவரும் இதழ் தகவு.

மாணவர் பக்கம், தகவின் தனித்த அடையாளங்களுள் ஒன்று. மாணவர்களின் படைப்பூக்கத்தை வளர்த்தெடுப்பதிலும், அவர்களின் வெற்றியைத் தன் வெற்றியாகக் கொண்டாடுவதிலும் தகவு ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை.


தலையங்கம் பகுதி தனிச்சிறப்புக்குரியது. அதில் முதன்முதலாக எழுதிய ஒரு வாசகருக்கும் இடமுண்டு, படைப்பிலக்கிய உச்சத்திற்கும் இடமுண்டு. எல்லோருக்கும் சமமான வாய்ப்பை, சமமான இடத்தைத் தகவு வழங்குவதை ஒருபோதும் தவிர்த்ததில்லை.

தகவின் எல்லாப் பக்கங்களையும் முழுமையான சுதந்திரத்தோடு வாசிக்கவும் விமர்சிக்கவும் செய்யும்பொழுது ஏற்படும் அனுபவம் அலாதியானது.

எழுத்தாளர்

## பிரேமபிரபா

படைப்பு தகவில் இதுவரை இரண்டு தலைப்புகளில் தொடர்கள் எழுதியிருக்கிறேன். “உலக அதிசயங்களும் உடன் வந்த கதைகளும்” என்ற தொடருக்கு அடுத்து “நட்ட கல்லும் பேசுமோ” என்ற தொடர் பிரசுரமானது.



ஒவ்வொரு திங்களும் எதிர்பார்ப்புடன் தகவில் என் படைப்புகளைப் பார்க்கும்போது கதையின் வடிவமைப்பும், வரையோவியங்களும் என் படைப்பிற்குக் கூடுதல் மெருகூட்ட எனக்குப் படைப்பாளி என்ற நிறைவைக் கொடுத்தது.

“நட்ட கல்லும் பேசுமோ” என்ற தொடரை அழகான புத்தக வடிவில் வெளியிட்டுச் சிறப்பித்து எனக்கு மகுடம் சூட்டி மகிழ்ந்த படைப்பு தகவிற்கு என்றும் என் அன்பும் உளமார்ந்த நன்றிகளும்.

எழுத்தாளர்

## கனகா பாலன்

“எல்லாச் சாதனைகளின் தொடக்கமும் ஆசைதான்.”

- நெப்போலியன் ஹில்

நம் செயல்கள் சாதனையை நோக்கிச் செல்லத்தக்க ஊக்கமும் வழிகாட்டலும் மிக அவசியம். அந்த வகையில் சமூக வலைதளம் உருவாக்கி வைத்திருக்கும் எண்ணற்ற எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் அவர்தம் சாதனைகளின் முதற்படியாகப் படைப்புக் குழுமத்தின் தகவு மின்னிதழில் அச்சேறவேண்டுமென்ற ஆசை ஒவ்வொருவருக்கும் உரித்தானது.

சிறப்பான ஓவியங்களோடு அழகாக வடிவமைக்கப்பட்டு அச்சிலேற்றப்பட்டு மின்னிதழாக நம் உள்ளங்கையில் விழிகள் விரிய கற்றுக்கொள்ளக் கிடைத்த களமாகத் தகவு மின்னிதழ் கிடைக்கப்பெறும்... எத்தனை பெரிய வரம்.

தினம் பல்கிப் பெருகும் படைப்புகளில் தேடியெடுத்த முத்துக்களின் கோர்ப்பாகத்தான் ஒவ்வொரு பக்கமும்.

சிலநேரத் திருப்பங்கள், நேஹா அக்கா, வரட்டூர் வாசிகள் என்ற எனது மூன்று சிறுகதைகளையும் கவிதைகள் மற்றும் நூலறிமுகங்களையும் அச்சிலேற்றி உலகறியப் பெருமை செய்த படைப்பு தகவுக்கு நன்றி.



படைப்புலகின் முன்னோடிகளை அட்டைப்படத்தில் பெருமைப்படுத்தி, இவர்களைத் தொடருங்கள் இன்னும் கற்றுக்கொள்ளலாமென்று வளர்ந்துவரும் கலைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்து தமிழ் பணியாற்றிக்கொண்டிருக்கும் தகவு எண்ணிக்கையில் ஐம்பதாகிறது என்று எண்ணும்போதே பேருவகை கொள்கிறது மனம்.

எழுத்தாளர்

## மதுரா

முகமறியாமல் எழுதிக்கொண்டிருக்கும் எத்தனையோ படைப்பாளிகளுக்கு முகவரி தருவது படைப்பு முகநூல் குழுமம். அதன் மணிமுடியில் மின்னும் வைரக்கிரீடம் ‘தகவு’ மின்னிதழ் என்றால் மிகையாகாது.

நேர்த்தியான வடிவமைப்புடனும் திருத்தமான எழுத்துருவுடனும்

வாசிக்க எளிதாக.. அதே சமயம் தரமான படைப்புகளுடன் மிளிரும் தகவில் எழுத்தாளுமைகளின் நேர்காணல், கவிதைகள், கட்டுரைகள் மற்றும் சிறுகதைகள்... நான் விரும்பிப் படிப்பவை.



தகவில் என் படைப்புகள் வெளியாகும் தருணங்கள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பவை. இலக்கியக் களத்தில் தனக்கான இடத்தைத் தகவமைத்துக்கொண்டுள்ள “தகவு” தன்னுடைய பொன்விழா இதழை வெளியிடும் இத்தருணத்தில் தகவுடன் இணைந்திருப்பதைப் பெருமையாகக் கொள்கிறேன்.

எழுத்தாளர்

## வீரசோழன் க.சோ.திருமாவளவன்

இதயத்தில் சுமப்பதை எழுத்தாக்கி அச்சு இதழில் கண்கள்வழி ரசிப்பது பெரும் தவம். இளைய தலைமுறையின் கனவுகளை நனவாக்கவும், அவர்களின் படைப்புகளைக் கொண்டாடவும் பெரும் களமாகப் படைப்பு - தகவு இருக்கிறது என்பதில் பெருமை. அந்தப் பெருமையின் ஒரு மைல்கல்தான் ஒரு லட்சத்திற்கும் மேலான வாசகர்களைக் கொண்டு பெரும்பங்காற்றுகிறது.

ஒவ்வொரு மாதமும் வரும் இலக்கியச் சாதனையாளர்களின் நேர்காணல்கள் படைப்பு - தகவின் அட்டைப்படத்தையும், முதன்மையான பக்கங்களையும் அலங்கரிக்கும். சிறுகதைகள், கட்டுரைகள், மனநிலைக்குறிப்புகள், கசல் என ஒவ்வொரு பக்கமும் சுவாரஸ்யமான புத்தம் புது செய்திகளோடு நம்மைக் கவர்ந்திழுக்கும்.



இலக்கியம்தான் மனித மனங்களின் பெரும் சொத்து. மனித ஆன்மாக்களை இயங்க வைக்கும் பெரும் காரணியாகச் செயல்படுகிறது. அப்படியான இலக்கியத்திற்கு அணிகலனாகப் படைப்பு - தகவு முக்கிய பங்கு வகிக்கிறது.

காலத்தின் பெருவெளியில் நாளைய நாட்களிலும் தகவு பேசப்படும். வரலாற்றின் மனங்களில் காலமெல்லாம் “தகவு” நேற்றைய செய்தியாகவும் நாளைய வரலாறாகவும் இருக்கும்.

வனத்தையழித்து
வயலாக்கி

வயலிலிருந்த செடிகளை
வீட்டுத் தோட்டத்தில் வைத்தேன்

தோட்டத்தில் வைத்த செடிகளை
வீட்டிற்குள் வைத்து
பசுந்தளிர் பார்த்து
ஆனந்தம் கொள்கையில்

தொட்டிக்குள் குறுகப் பிடிக்காமல்
இன்னும் வேர் விட
மண் தேடி
சூரிய ஒளி தேடி
செடிகள்
புழுங்குபவைகளாகவே மனதில் படுகிறது

இந்தச் செடிகளை ஒருநாள்
மண்ணில் விட்டாலும் விட்டுவிடுவேன்
கூண்டிலடைத்த பறவைகளை
திறந்து வானில்
விடுவதைப் போல.

– பூங்கோதை கனகராஜன்

•

உண்ண அமர்கிறேன்
எனக்கு முன்பே
பணியாற்றிக்கொண்டது நாசி.
எழுத்தை நெய்கிறேன்
கண்களுக்கு விருந்து படைக்கிறது
சொற்களின் ஆடை.

வாசலை நிறைக்கிறேன்
கோலங்களுக்குள்
வயிற்றை நிரப்பும் எறும்புகள்.
கையளவு அன்னத்தில்

ஆகாயத்தை அழைக்கிறேன்
பறவையாய் வந்து
வனத்தை விழுங்குகிறது.
காற்றை இழுத்தபின்
இலையை உயிர்ப்பிக்கிறேன்
உலகைச் சுவாசிக்க வைக்கிறது மரம்.
உணரா அறிவிலிருந்து
உணரத் தொடங்குகிறது
உயிரின் பயணம்.

– இளையவன் சிவா

•

சீக்கிரம் முடிக்க முடியாது என்று
தெரிந்திருந்தும்
சீக்கிரம் முடியுங்கள் என்பார் அதிகாரி

சீக்கிரம் முடிக்க முடியாது என்று
தெரிந்திருந்தும்
சீக்கிரம் முடிக்கிறேன் சார் என்பேன் நான்

தொழிற்சாலை வாழ்வென்பது
இதற்கு மேல் ஒன்றும் இல்லை.

– மழைக்குருவி

கணக்கு நோட்டு பார்த்தாலே
ராணி டீச்சர் ஞாபகம் வந்துவிடும்

அதிலிருக்கும் சிவப்புநிறக் கோடுகள்
டீச்சர் விரலில் இருக்கும்
நைல் பாலிஷ் போன்று இருப்பது
எனக்கு மட்டும்தான்

டீச்சர் எப்போதும் சிரித்தது இல்லை
கணக்கு தப்பு என்றால்
மர ஸ்கேலில் அடித்து வெளுப்பார்
என்னை எப்போதும் அடித்தது இல்லை
ராணி டீச்சர் போன்று
கணக்கும் எனக்கு அழகாகத் தோன்றும்
சின்ன தவறுக்காக
என்னை அடித்தது
எப்போதும் வலித்ததில்லை
கணக்குப் பாடத்தைப் போன்று
அவரும் சரியாகவே இருப்பார்

மேற்படிப்பு முடித்து
இப்போதுதான் ஊருக்கு வருகிறேன்
குடித்துவிட்டு
ராணி டீச்சரை
ரோட்டிலேயே அடிக்கும்
அவளது கணவனைப் பார்த்த
அன்றிலிருந்து
பிடிக்காத பாடம்
கணக்குப் பாடமாகப் போய்விட்டது

– அகதா

•

மின்கம்பிக்கு இடைஞ்சல் என
வெட்டப்பட்ட
மரத்தைச் சுற்றி
சத்தமிட்டு வட்டமிடுகிறது
பறவைகள்..

தேநீர் தந்த சிறுவனிடம்
சர்க்கரை குறைவென
தலையில் குட்டி
கூட்டம் பலமாய்ச் சிரிக்க
வெளிவரும் கண்ணீரை
பல்கடித்து மறைக்கும் சிறுவன்..

விடாமல் சுற்றி அலுக்காமல்
வாடிக்கையாய்ப் பிச்சை கேட்கும்
கூட்டம் என
எதுவும் பாதிக்கவில்லை..

என் கவலையெல்லாம்..
எப்போதும் சரியாக வருகிற
ஆறு மணி பேருந்து
இன்னும் வரவில்லை..
என்பதுதான்..

– ச.ஆனந்தகுமார்

•

முன்பிருந்ததுபோல இப்போது நமக்குள்
புரிதல் இல்லை
முன்பிருந்ததுபோல இப்போது நமக்குள்
நெருக்கம் இல்லை
முன்பிருந்ததுபோல இப்போது நமக்குள்
நீண்ட உரையாடல்கள் இல்லை
முன்பிருந்ததுபோல இப்போது நமக்குள்
ஒத்துப்போவதில்லை
முன்பிருந்ததுபோல இப்போது நமக்குள்
இனிய தருணங்களென எதுவுமில்லை

உண்மையில்
இப்போதெல்லாம்
நமக்கு
முன்பிருந்ததுபோல நேரமில்லை
முன்பிருந்ததுபோல சூழலில்லை
முன்பிருந்ததுபோல பொறுமையில்லை
முன்பிருந்ததுபோல நம்பிக்கையில்லை
முன்பிருந்ததுபோல குழந்தைத்தனங்கள்
ஏதுமில்லை

எனினும்
மாறி மாறிக் கேட்டுக்கொள்கிறோம்
“முன்புபோல நீ ஏன் இல்லை?”
என

“முன்பிருந்ததுபோல
இப்போதும் ஏன் இருக்க வேண்டும்?”
என
ஆதங்கம் தீர
ஒருவராவது கேட்டிருக்கலாம்

இருந்தும்
உண்மையில்
முன்பிருந்ததுபோல இல்லை நீ என
அவ்வளவு எளிதாய்
குற்றம்சாட்டுபவர்கள்தான்
பெரும்பாலும்
முன்பிருந்த நம்மை மாற்றியவர்களாக
இருக்கிறார்கள்
இல்லையா?

– ரிஸ்கா முக்தார்

•

பலநூறு வாகனங்களின்
பந்தயக் களமாய்
பரபரத்துக் கிடக்கும் அந்தப்
பகல் நேரச் சாலையை
பயமின்றிக் கடந்து செல்கிறது
பறவை ஒன்றின் நிழல்!

– நிலவை பார்த்திபன்

•

நுழையும் அரவம்
சருகுகளால் கலைகிறது
பாதசாரியின் மௌனம்...

– ஐ.தர்மசிங்

•

கிளிக் செய்வதற்கு முன்
ஸ்மைல் ப்ளீஸ் என்கிறார்கள்
தயாராகிவிடுகிறது
எதார்த்தம் செத்த புகைப்படம்

– மகேஷ் சிபி

தொடர் 1

ஆதிரன்



# வானவில் வண்ண மின்னல்

**எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்**

*- குறள் 666.*

நண்பர்களே, பதின்பருவத்தில் வாழ்க்கை பற்றிய சரியான புரிதலுக்கு நிறையப் புத்தகங்களின் உதவியை நாடினேன். நூற்றுக்கணக்கான புத்தகங்கள் கிடைத்தன. ஆனால் நான் எதிர்பார்த்தது போல் எந்தப் புத்தகமும் இல்லை. ஒருபுறம் மிகவும் அடிப்படையான பழைய நம்பிக்கைகள் சார்ந்து கிடைத்த புத்தகங்கள் என்றால் மறுபுறம் எல்லாமும் மிக ஆழமாகவும் தீவிரமான தத்துவ விசாரங்களுமாய் இருப்பதாகப்பட்டன. எனக்குப் புரியும்படியாக ஒருவகையில் அனைத்து விசயங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அடிப்படைப் புரிதல்களை உருவாக்க ஒரு வழிகாட்டியாக எந்தப் புத்தகமும் எனக்குக் கிடைக்கவில்லை. இன்றளவும் எனக்கு அந்தச் சிக்கல் உண்டு. அப்படிப்பட்ட புத்தகம் எப்படி இருக்க வேண்டும் என்கிற எனது கற்பனையின் வடிவம்தான் இந்தத் தொடர்.

என்னைப் பொறுத்தவரை வாழ்வியலைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு மூன்று விடயங்களைப் பற்றிய அடிப்படையும் விரிவும் ஆழமுமான அறிவை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவேன். வெற்றி, வரலாறு மற்றும் பொறுப்புணர்வு ஆகிய மூன்றுதான் அவை. கூடவே குறிச்சொற்கள் (Key words) என்ற தலைப்பில் பல வரலாற்று விசயங்களையும் பற்றிய அறிவியல்பூர்வமான அறிவும் சேர்ந்துவிட்டால் சரியான சிந்தனைப்போக்கை, வாழ்வியல் முறைமையைப் பற்றிய புரிதலைக் கட்டமைத்துக்கொள்ள இயலும். குறிச்சொல்

பட்டியல் சற்று நீளமானது. ஆனால் அதன் அவசியத் தேவையை நீங்கள் போகப்போகப் புரிந்துகொள்வீர்கள். மொத்தமாக இந்தத் தொடரின் நோக்கம் அகமும் புறமுமாக நமது சிந்தனையின் தன்மையை ஒழுங்குசெய்து உறுதிப்படுத்த வழிசெய்வதே ஆகும்.

நண்பர்களே... எதிர்காலம் என்பது கற்பனை அல்ல. அது கடந்தகால அவலட்சணங்களிலிருந்து முகிழ்ந்தெழும் மிகப்பெரிய நிகழ்கால நம்பிக்கை. மரணத்தைப் போலவே எதிர்காலமும் சாத்திய உறுதி கொண்டது. வெளிப்படையானது. இந்தத் தொடர் கட்டுரைகள், குறிச்சொற்கள், வெற்றி, வரலாறு மற்றும் பொறுப்புணர்வு ஆகிய நான்கு பத்திகளாக இருக்கும்.

மூன்று அறிவுகளில் முதலில் குறிப்பிட்ட வெற்றி எனப்படுவது எந்தவிதமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்பதை நோக்கிய சிந்தனையாக இருக்கும். `எதிர்காலத்தை வெல்ல கடந்தகாலத்தை வெல்ல வேண்டும், கடந்தகாலத்தை வெல்ல நிகழ்காலத்தை வெல்ல வேண்டும்' என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். ஆக நாம் வெல்ல வேண்டும். வெற்றி என்பதுதான் வாழ்வின் குறிக்கோள் என்ற ஒரு பொதுவான கருதுகோள் மக்களிடையே இருக்கிறது. போலவே, ஏன் வெல்ல வேண்டும், யாரை வெல்ல வேண்டும், வெற்றியின் விளைவுகள் என்ன என்பது போன்ற துணைக் கேள்விகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக இவற்றைப் புரிந்துகொள்ள நமக்குத் தேவை சமுதாயம் பற்றிய சரியான அடிப்படை அறிவு. (சரியான அறிவு என்றால் என்ன என்பது மற்றொரு துணைக் கேள்வி. இந்தக் கேள்விக்கு அனேகமாக இந்தத் தொடர் முடியும்போது உங்களுக்கு ஒரு பதில் கிடைக்கலாம்).

இரண்டாவதாக, வரலாறு. இதில் மனிதர்களாகிய நாம் யார் என்கிற வரலாற்று அறிவு அடிப்படையானது. சுவரிருந்தால்தான் சித்திரம் என்பது போலச் சமுதாயம் பற்றிய ஒட்டுமொத்தமானதொரு அடிப்படை அறிவு இருந்தால்தான் வெற்றி என்பதைப் பற்றிய சிந்தனைக்குள் நம்மால் போக முடியும். வாழ்வின் இயங்கு வெளியான மனித சமுதாயம் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ளும் வழிமுறையை இந்தத் தொடரில் என்னால் இயன்றவரை கூற முயல்வேன்.

மூன்றாவதாக, பொறுப்புணர்வு. நமது சமுதாயம் பொறுப்புணர்வற்ற ஒரு மண்ணாந்தைச் சமூகமாகக் கற்பனை செய்யமுடியாத வேகத்தில் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. பொறுப்புணர்வு பற்றிய வரலாறு மற்றும் உளவியல் அடிப்படையிலான புரிதல் இருந்தால் மட்டுமே மேற்சொன்ன வரலாறு, வெற்றி ஆகியவற்றின் முழுமையான வீச்சை நாம் புரிந்துகொள்ள முடியும். எனவே என்னைப் பொறுத்தவரை பொறுப்புணர்வே அனைத்திற்குமான அடிப்படை.

**குறிச்சொல்: பயம் (Fear)**

'பயம் என்பது கனவுகளின் திருடன்' - ப்ரையன் க்ரான்ஸ் (Brian Krans).

பயம் என்கிற உணர்வை மனிதர்கள் ஒவ்வொருவரும் சரியாகப் புரிந்துகொள்வது அவசியம். ஏனெனில், அடிப்படை உணர்வுகள் ஏழில் `பயம்' மட்டுமே அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வியல் ஆதாரமாக இருக்கிறது. நுண்ணுயிரிகள் முதல் மனிதர்கள் வரை – தாவரங்கள் உள்ளிட்டு – அனைத்து உயிருக்கும் பொதுவான உணர்வு பயம். ஒரே வித்தியாசம் மனிதருக்குப் பயம் என்றால் என்னவென்று தெரியும். அவ்வளவே.

பயத்தை வென்றவன் ஞானியாவான் என்பது அறிவியல் உண்மை. `மூடநம்பிக்கையின் மூலாதாரம் பயம்... மேலும், குரூரத்திற்கும் பயம் மூலாதாரங்களில் ஒன்றாகும்...' என்கிற பெர்ட்ராண்ட் ரஸ்ஸலின் வார்த்தைகளை இங்கு நினைவுகூர்தல் சரியாக இருக்கும். அறிவியலடிப்படையில் பயம் நான்கு வகைகளில் உருவாகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

1. உள்ளுணர்வு (instinct): குறிப்பிட்ட வகை பயம் என்பது அடிப்படை உள்ளுணர்வால் உருவாகிறது. எடுத்துக்காட்டாக, வலி ஏற்படுதல் பற்றிய பயம். காயம் பட்டால் வலிக்கும் என்பது உள்ளுணர்வு சார்ந்தது.



பொதுவானது. (தமிழ் ஆசிரியர் எவ்வளவு கோபப்பட்டாலும் அடிச்சார்னா வலிக்கவே வலிக்காது. ஆனா கணக்கு ஆசிரியர் அடிச்சா பயங்கரமா வலிக்கும்).

2. கற்றுக்கொள்ளுதல்: (learned) பயத்தை ஒருவகையில் நமக்கு நாமே கற்றுக்கொள்கிறோம். வளர்கிற போக்கில் சில பயங்களை நாம் கற்றுக்கொள்கிறோம். இளங்கன்று பயமறியாது. ஆனால், தண்ணீரில் விழுந்தால் மூழ்கிவிடுவோம் என்று தெரிய வரும்போது அந்த பயம் நம்மிடத்தில் நிரந்தரமாகத் தங்கிவிடுகிறது.

3. கற்பிக்கப்படுதல் (taught): சிலவகை பயங்கள் நமக்கு மற்றவர்களால் கற்பிக்கப்படுகிறது. `சாமி கண்ணைக் குத்தும் அல்லது அவன் முகமே சரியில்ல அவன் உன்னை அழிச்சுருவான் அல்லது அந்த மரத்துல பேய் இருக்கு' போன்றவை இவ்வகையில் அடங்கும்.

4. கற்பனை (imagined): இது முழுக்க முழுக்க ஒருவரது சுய கற்பனையால் உருவாகும் பயம். ஏதாவது தவறானது நடந்துவிடுமோ என்கிற கற்பனையில் அல்லது எதிர்மறை எண்ணங்களால் உருவாகும் பயம் இது.

மனிதர்கள்தான் பூமி என்கிற இந்தக் கிரகத்தில் மிக அதிகமாகப் பயப்படும் உயிரி என்று நரம்பியல் விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். ஏனென்றால் மனிதனின் கற்கும் திறன் மற்றும் சிந்தனை ஆகியவை மூளையில் பயத்தை உருவாக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்ற உயிரினங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லும்படியான பயம் என்று ஒன்று இல்லை. ஒரு குறிப்பிட்ட வகையில் அறியாமைதான்

பயத்தின் காரணி என்று சொல்லலாம். ஆனால் அறியாமை என்பது தனிப்பட்ட முறையில் ஆழமாகவும் விரிவாகவும் தெரிந்துகொள்ள வேண்டிய விசயம்.

இங்கு நாம் பயத்தின் கூறுகளைக் கொண்ட மன அழுத்தம் *(mental stress)* மற்றும் பதட்டம் *(anxiety)* ஆகியவற்றின் அடிப்படைகளைத் தெரிந்துகொள்ளலாம். மனஅழுத்தம் *(mental stress)* என்பதை விளக்குவது என்பது எளிமையான காரியம் இல்லை. சூழ்நிலைகளும், அவை சார்ந்த நிகழ்வுகளும் நமக்கு மனஅழுத்தத்தைக் கொடுக்கலாம். அல்லது நாம் எடுக்கிற முடிவுகளால் நாம் மன அழுத்தத்திற்கு ஆளாகலாம். அதாவது ஒரு பணிச் சூழலில் கடுமையான வேலைப் பளுவாலோ அல்லது வேலை சார்ந்து நாம் செய்யும் முடிவுகள் சரியானபடி பயனடையாமல் போகும்போதோ நாம் மன அழுத்தத்திற்கு உள்ளாகலாம். இவை நூற்றுக்கணக்கான காரணிகளில் இரண்டு மட்டுமே.

மன அழுத்தம் ஏற்பட இன்ன காரணம்தான் என்றில்லை. ஒவ்வொரு மனிதரின் சுய-புரிதல் *(self-understanding)* தன்மையிலும் இது மாறுபடும். சூழல் சார்ந்த அழுத்தம் என்பது வாழ்வின் ஒரு பகுதியாகும். வாழ்வில் எல்லோரும் ஏதோ ஒரு வகையான அழுத்தத்திற்கு உள்ளாக நேர்வது இயற்கை. அவ்வகையில் அந்த அழுத்தம் நம்மைச் செயல்பட வைத்து ஏதாவது ஒரு முடிவை மேற்கொள்ளவைக்கிறது. அவ்வகையில் அந்தப் பொதுவான சூழ்நிலை அழுத்தத்திலிருந்து வெளியேற முடியாமல் தவிப்பவர்கள் `மன அழுத்த' நோயினால் அவதியுறுகிறார்கள். மன அழுத்தம் உளவியல் சிக்கலை உருவாக்கும் அல்லது உளவியல் சிக்கல்கள் மன அழுத்தத்தை உருவாக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். (மனச்சோர்வு/மன அழுத்தம் குறித்து விரிவாக `வெற்றி' என்ற பத்தியில் எழுதுகிறேன்).

மாறாக, பதட்டம் *(anxiety)* என்பது ஒரு உடனடி பய உணர்வு. ஏதாவது எதிர்மறையான நிகழ்வுகள் நடந்துவிடுமோ என்கிற கற்பனையின் விளைவு. உறவினர் ஒருவர் விபத்தில் சிக்கியுள்ளார் என்கிற ஒரு தகவல் கிடைக்கும்போது நமக்கு ஏற்படும் பதட்டம் இவ்வகையானது.

பதட்டம் உருவாகும்போது அந்த நிலையைச் சமாளிக்க உடம்பில் கோர்டிசோல் மற்றும் அட்ரெனலின் *(cortisol and adrenaline)* ஆகிய திரவங்கள் சுரந்து நம்மை மேலும் எச்சரிக்கை உணர்வுடனும் வேகமாகவும் செயல்பட உதவியாக இருக்கிறது. பதட்ட நிலை அதிகரிக்கும்போதோ அல்லது தணியும்போதோ சிலர் மயங்கிவிடுவதற்கு இந்த உடல் மாற்றம்தான் காரணமாகிறது. இது பொதுவான ஒரு செயல்பாடாகும். பதட்டத்தின்போது ஏற்படும் இந்தச் செயல்வினைக்கு, *'fight, flight or freeze'* response என்று பெயர். எனவே மறுபடியும் சொல்கிறேன்; பயம், மன அழுத்தம் மற்றும் பதட்டம் ஆகியவற்றைப் பற்றிய சரியான அறிவியல் புரிதலை நமக்குள் உருவாக்கிக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

பயம் தொடர்பான சில புத்தகங்கள்.

1. *Fear: understanding and accepting the insecurities of life - Osho*

2. *Mastering the fear - Brandon Webb and John David Mann*

3. *PHOBIAS The Psychology of Irrational Fear - Irena Milosevic and Randi E. McCabe, Editors*

4. *FEAR (ESSENTIAL WISDOM FOR GETTING THROUGH THE STORM) - THICH NHAT HANH*

5. *fear of intimacy - Joyce Catlett and Robert W. Firestone*

6. *PSYCHOLOGY OF FEAR - Allen D. Gervaise*

7. *THE GIFT OF FEAR (SURVIVAL SIGNALS THAT PROTECT US FROM VIOLENCE) Gavin de Becker*

(இந்தத் தொடரில் நான் குறிப்பிடப்போகும் அனைத்துப் புத்தகங்களையும் pdfdrive.com மற்றும் https://z-lib.org ஆகிய இணையத்தில் இலவசமாகத் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்).

•

## வெற்றி

வெற்றி என்ற சொல்லின் வேர்ச்சொல் குறித்தும் அதனிலிருந்து உருவாகும் பலவகையான அர்த்தங்கள் குறித்தும் மிகச் சுருக்கமாக ஆராய்வதன் மூலம் இந்தப் பத்தியைத் தொடங்கலாம். 'வெ' அல்லது 'வே' என்ற ஒற்றைச் சொல்லுக்குப் பொதுவாக மறைவு என்கிற அர்த்தத்திலேயே ஆதித்தமிழ் பொருள் கூறுகிறது.

வேட்டை என்ற சொல்லிலிருந்து இது உருவாகியிருக்கலாம் என்று எனக்குப் படுகிறது. வேட்டைக்கான ஆயுதம் வேல். வேல் கொண்டவன் வேலவன். ஆங்கிலத்தில் *valour* என்ற சொல்லுக்குத் தீரமிக்க செயல்புரியும் வீரர் என்றே அர்த்தம் இருக்கிறது. போலவே *victory* என்ற சொல்லின் உச்சரிப்பும் கவனத்தில் கொள்ளலாம். வேட்டையில் மறைந்திருந்து தாக்குவது வாகை சூடுவது போன்ற செயலிலிருந்து வந்திருக்கலாம். காட்டை உழுநிலமாக/ வெற்றிடமாக மாற்றுவதன் பொருளிலும் வெற்று/ வெற்றி என்கிற பதம் உருவாகியிருக்கலாம். வாகைசூடுதல் என்ற சொல்வழக்கு இன்றளவும் இருக்கிறது அல்லவா? வெற்றிடத்தை உருவாக்கி வாகை மரம் நடுதல் மூலம் விவசாய முறைமை உருவாகி இருந்திருக்கலாம். அது பின்னாளில் அரசர்களின் போர்களில் வெற்றித் திணையாக மருவியிருக்கலாம்.

அடிப்படையில் நிலத்தைக் கைப்பற்றி வெல்வது என்பதன் வினைச்சொல்தான் வெற்றி என்பது எனது கருத்து. இன்றளவும் நிலத்திற்காகவும் ஆநிரைகளுக்காகவும்தான் *(property)* போர்கள் உருவாக்கப்படுகின்றன. ஆக வெற்றி என்பது அதன் அர்த்தத்தில் ஒவ்வொரு மனிதரும் நிலம் / சொத்து சேர்த்தல் என்கிற பொருளையே தருகிறது. எனவே, ஒரு தனிமனிதனின் வெற்றி என்பது அவன் பொருள் சேர்த்தலில் உள்ளது.

ஆனால் இன்றைய சூழலில் வெற்றியின் அர்த்தமும் அதன் உளவியலும் மிகப்பெரிய பொருளாதார நிகழ்வுப்போக்காக உள்ளது. 'வெற்றியின் ரகசியம்' உலகச் சந்தையில் வெற்றிகரமான ஒரு பண்டமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பண்டத்தை நாம் சரியாகப் புரிந்துகொண்டால் வெற்றியின் ரகசியம் என்ற ஒன்று இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஒரு சொல்லை நாம் புரிந்துகொள்ள சரியான வழி என்னவென்றால் அதன் எதிர்ச்சொல்லைச் சரியாகப் புரிந்துகொள்வது என்கிறது உளவியல். வெற்றி என்ற சொல்லின் எதிர்ப்பதம் தோல்வி. தோல்வியை எப்படி புரிந்துகொள்வது என்று பார்த்தால் நாம் தோல்வியின் விளைவான துக்கம் அல்லது மனச்சோர்வை *(Melancholy)* பிரதான சொல்லாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆக மனச்சோர்வு என்றால் என்ன? இது அடிப்படையான கேள்வி மட்டுமல்ல மிக ஆழமான கேள்வியும் கூட. சங்க இலக்கியத்தில் பிரதான மனச்சோர்வாகத் தலைவனின் பிரிவு குறிப்பிடப்படுகிறது. போலவே, பாணர்களுக்கு வறுமைத் துயரம். ஆண்களுக்குப் பொருளீட்டும் துயரம். அரசர்களுக்கு உருவாகும் மனச்சோர்வுகள் பற்றிய தெளிவான அறிவைத் திருக்குறள் நமக்குத் தருகிறது. மொத்தத்தில், கார் நாற்பது, களவழி நாற்பது, இனியவை நாற்பது, இன்னா நாற்பது என்று அற்புதங்களின் பட்டியலாக நீளும் தமிழ் மரபின் அனைத்து நீதி நூல்களும் நமது துயரம் போக்கும் வழிகளைப் போதிக்கின்றன.

ஏன் உலகின் அனைத்து அறிவுரைகளும் துயரத்தைப் போக்க போதிக்கின்றன? ஒரு குழந்தை தான் மிகப்பாதுகாப்பாக உணரும் தாயின் கருவறையிலிருந்து வெளியேற்றப்படுவதைத் தனது முதல் துயரமாக உணர்கிறது என்று எழுதுகிறார் உளவியலாளர் *Melanie Klein*. உலகில் சிறந்த கலைஞர்கள் ஓவியர்கள் தலைவர்கள் தத்துவவியலாளர்கள் எனச் சொல்லிக்கொள்பவர்கள் எல்லாம் ஏன் துயரமுடையவர்களாக உள்ளார்கள் எனக் கேள்வி எழுப்புகிறார் அரிஸ்டாட்டில்.

துயரமும் ஏக்கமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். ஏக்கத்தால் துயரம் உருவாகிறதா அல்லது துயரத்தால் ஏக்கம் உருவாகிறதா என்பதை வரைமுறை செய்வது கடினம். நான் குழந்தையாகவே

இருந்திருக்கக்கூடாதா என்ற எண்ணம் ஏக்கமா துயரமா? ஆனால் இந்த ஏக்கமும் துயரமும் உருவாக்குவதுதான் மனச்சோர்வு.

நடைமுறை வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு விசயமும் ஒருகணம் நம்மைத் துயரத்திலோ அல்லது ஏக்கத்திலோ ஆழ்த்திவிடுகிறது. காட்டாக, ஞாயிற்றுக்கிழமை மாலை என்பது ஏக்கம். திங்கட்கிழமை காலை என்பது துயரம். இவ்வாறு அனைத்துச் சிறுபொழுதுகளும் பெரும்பொழுதுகளும் துயரத்தின் பிரதி என்கிறார்கள் உளவியலாளர்கள். இது எதிர்மறை எண்ணம் அல்ல. மாறாக மகிழ்ச்சி/ நிம்மதி ஆகியவற்றை உருவாக்கும் உந்துசக்தி. ஏனென்றால் வாழ்வு என்பது மனமகிழ்ச்சியற்ற நிகழ்வு.

மகிழ்ச்சியின் உற்பத்தியே நிம்மதியான வாழ்வு. பிரபஞ்சம் இருளில் இருக்கிறது. கோடிகோடிக்கணக்கான விண்மீன்கள் வெளிச்சம் தருகின்றன. வாழ்வின் அடிநாதம் சோர்வு, அதன் தீர்வாக உற்சாகம் என்று சில அறிவியலாளர்கள் வரையறுக்கிறார்கள். ஆக மனச்சோர்வின் உளவியல் குறித்ததொரு ஆழமான பார்வை நமக்குத் தேவைப்படுகிறது. அது சமூகத்தின் அலகான குடும்ப அமைப்பில் உள்ள மனிதர்களுக்குள் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் புறச்சூழலிலிருந்து தனிமனித மனஅழுத்தம் *(depression)* எவ்வாறு உருவாக்கப்படுகின்றது என்பதையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

முதலில் மனச் சோர்வுக்கும் மன அழுத்தத்திற்கும் இடையிலான பிரச்சனைகளைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வது அவசியம் என்று கருதுகிறேன். பொதுவாக, குடும்பப் பின்னணியில் மனச்சோர்வு என்பது ஒரு தொற்று நோய் போல சக மனிதர்களுக்குப் பரவக்கூடியது. மனச்சோர்வு என்பது ஒருவகையான இயல்பான மற்றும் நிலையற்றதொரு சோக உணர்வு. தன்னுணர்வினால் இதை மாற்றிக்கொள்ள இயலும். சோர்வை எளிமையாக எடுத்துக்கொண்டால் தினசரி வாழ்வைப் பாதிக்காது. சோக உணர்வு என்பது இயல்பான ஒன்று என்று புரிந்துகொண்டால் மட்டும் போதும்.

மாறாக, மன அழுத்தம் என்பது உணர்வு அல்ல. அது ஒருவகையான மனநிலை. நாம் மனஅழுத்தத்தை உணர மாட்டோம். நம்மால் உடனடியாக இதிலிருந்து வெளியேறிவிடவும் முடியாது. நமது மனம் நம்பிக்கையிழந்து, தனிமையில் வாடி எதற்கும் நாம் தகுதியில்லை என்று எண்ணத் தொடங்கிவிடும் எதிர்மறை நிலை இது. வாழ்வின் பிடியை இழந்துவிட்டதாக உணருவதும் அனைத்தும் மிகக் கடினமானதாகவும் இருண்ட நிலையில், சிந்தனையைக் குழப்பிவிடுவதாகவுமான மனநிலையாய் அமைந்துவிடும். இவ்வகையான எதிர்மறை எண்ணத்திலிருந்து வெளியேற நாம் மருத்துவரீதியான சிகிச்சைக்கு உட்பட வேண்டியிருக்கும்.

மன அழுத்த நோய்க்கு வருடக்கணக்காக சிகிச்சை பெறும் மனிதர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். அதுபோல, சோர்வுடன் சேர்ந்த மன அழுத்தம் *(Melancholic depression)* நம்மை வலுவற்ற எதற்கும் லாயக்கற்றவராக உணரவைத்து வாழ்விற்கும் நமக்குமிடையேயான தூரத்தை அதிகரித்து ஸ்தம்பிக்கச் செய்துவிடும். *Melancholic depression* பற்றிய உளவியல்பூர்வமான விளக்கத்தை அடுத்த கட்டுரையில் சொல்கிறேன்.

வெற்றி தொடர்பான அறிவியல் அடிப்படையிலான ஆய்வாக இது இருக்கும் என்று முதலிலேயே சொன்னேன். என்னால் இயன்றவரை பல்வேறு பண்பாட்டு அசைவுகளில் வெற்றியின் தன்மை குறித்த ஆய்வாய் இது இருக்கும்.

வெற்றியைப் புரிந்துகொள்ள நமக்குத் தோல்வி தேவைப்படுகிறது. தோல்வியைப் புரிந்துகொள்ள நாம் மனச்சோர்வைப் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு அனைத்துக்குமான அடிப்படையான ‘பயம்’ என்ற குறிச்சொல் குறித்து மிகச்சுருக்கமான அறிமுகத்தை மேலே எழுதியுள்ளேன். தொடரலாம்.

- தொடரும் ■

அம்மையார் ஹைறுான் பீவி சிறுகதைப் போட்டி

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

குடந்தை அனிதா

ஓவியம் : திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்

# மகேஸ்வரி @ மரியம்



மகேஸ்வரி @ மரியம் இரவு சென்னையில் ரயில் ஏறியவள் விடிகாலை அவள் பிறந்த ஊரான கும்பகோணத்திற்கு வந்து சேர்ந்தாள். இரயில் நிலையத்தில் பயணியர் விடுதியில் குளித்து உடை மாற்றிக்கொண்டு ஸ்டேசன் எதிரிலே இருந்த ஐயர் கடையில் இட்லி வடை காஃபி சாப்பிட்டதும்.. ஆஹா பேஷ் பேஷ் சொல்ல மனமில்லை. வயிறு நிறைந்தது அவ்வளவுதான். உணர்வுப்பூர்வமான சில நினைவுகளில் முழ்கியிருக்கும்போது சுயமிழந்துதான் செயல்படுவோம். காசு கொடுத்துவிட்டு வெளியே வந்த மகேஸ்வரிக்கு அன்றைய தினம் அவள் விடும் மூச்சுக் காற்று கூட சற்று முன்னே பின்னேயும் சில சமயம் இலகுவாகத்தான் வெளியேறும்.. சொந்த ஊரின் சுவாசத்தால்.

30 வருடத்திற்குப் பின் இன்றுதான் கும்பகோணத்திற்கு வருகிறாள். 10 வயது வரை சொந்த ஊரானது, இன்று அந்நியமாகிப் போயிருந்தது. இரயில் நிலையத்திலிருந்து இடது புறம் நடக்கும் தொலைவுதான் மகாமகக்

குளம் என்று தெரிந்தும் ஏனோ உடன் போகத் தயங்கின கால்கள். மினி பஸ் ஒன்று உரசியபடி நின்று பஸ் ஸ்டாண்ட் என்று கண்டெக்டர் குரல் கேட்டதும் யோசிக்காமல் ஏறிக்கொண்டாள்.

வாழ்க்கையை அதன் போக்கில் வாழ்ந்தால் இப்படித்தான். காலம்தான் முடிவு செய்கிறது என்று அலுத்துக்கொள்ளாமல் வாழ்ந்துவிடுவார்கள்.

காலை நேரமாதலால் பஸ் முழுதும் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் நிறைந்திருந்தார்கள். சில நிமிடங்களில் பஸ் நிலையம் வந்துவிட்டோம். பக்கத்திலேயே திருவையாறு பஸ் நின்றிருந்தது. தியாக பிரம்மம் தியாகராஜ ஆராதனை போன்ற செய்திகள் கேட்டிருந்ததோடு சரி வேறு ஒன்றும் தெரியாது. போய்த்தான் பார்ப்போமே என்று மகேஸ்வரி இறங்கி பஸ் மாறி அமர்ந்தாள். அவளுக்கு இன்றைய ஒரு நாள் இங்கு இரவு வரை பொழுதுபோக வேண்டும்.

ஓட்டுனர், நடத்துனர் யாருமில்லை. பஸ் சத்தமாகப் பாடிக்கொண்டு இருந்தது. மாங்குயிலே பூங்குயிலே சேதி ஒன்னு கேளு! கேட்பவர்களைக் கரகமில்லாமலேயே அடவு பிடிக்கச் செய்யும் மந்திரக்காரன் ராஜா ராஜாதான். கரகாட்டக்காரன் படத்தைக் கங்கைஅமரன்தான் எழுதி இயக்கினார். எல்லாப் பாடலும் அவரே எழுதினார் என்றும் டைட்டில் சாங் மட்டும் இளையராஜா எழுதியது என்றும் சம்பந்தமில்லாமல் இப்போது நினைவுக்கு வருகின்றன.

பேருந்து நிலையத்தை விட்டு பஸ் கிளம்பிவிட்டது. "ஏதோ நினைவுதான் உன்ன சுத்திப் பறக்குது. என்னோட மனசுதான் கண்டபடி தவிக்கிது. ஒத்த வழி என் வழி தானே மானே.." அது எப்படி அவளுக்கென்றே அடுத்த பாடல் பாடியது என்று தெரியவில்லை.

நினைவுகளைப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துவிட்டு ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்க, அதற்குள் பஸ் மேலக்காவேரி தாண்டியிருந்தது. அந்த ஸ்டாப்பில் மூன்று பேர் ஏறினார்கள். இருபது வயதுதான் இருக்கும் அந்தப் பெண்ணுக்கு. கையில் ஒரு குழந்தையும் வயதான தாய் தந்தையும் உடனிருந்தனர். அந்தம்மா சத்தமாகப் பேசிக்கொண்டு வந்தார்.

"இந்த பாரு ஆயி.. இன்னொரு வாட்டி இப்புடி பொசுக்குன்னு புள்ளைய தூக்கிட்டு இங்க வந்த எங்கள உசுரோட பாக்கமாட்ட. ஆமா சொல்லிட்டேன்."

போதும் என்று வந்த பெண்ணை மீண்டும் கணவனிடமே கொண்டுபோய் விடுகிறார்கள் போல. இன்றும் கிராமங்கள் எவ்வளவு முன்னேறினாலும் ஏழ்மை மனிதர்களை மாறவேவிடாது போல.

அவள் கக்கத்திலும் பெண் குழந்தைதான். இன்னும் பதினைந்து வருடம்தான். இதே வார்த்தையை அவளும் பிரயோகிக்கக்கூடும். மனம் கனத்தது. பாடல் பக்கம் கவனம் சென்றதும் இதய துடிப்பு அதிகமானது. கண்களில் நீர் முட்டியது.

`பிள்ளையார்பட்டி ஹீரோ நீதான்ப்பா கணேசா நீ கருணை வச்சா நானும்...` 12 ஜனவரி 1996 பொங்கலுக்கு வந்த படம். ஜீசஸ்.. வலது கையால் குருசு வரைந்து முத்தமிட்டுக்கொண்டாள்.

பஸ் சுவாமிமலை ஸ்டாப்பில் நின்றதும், சட்டென இறங்கிவிட்டாள். கால்கள் தன்னாலே கோவில் பக்கம் சென்றன. சுவாமிமலை ஒரு மலைக்கோயில். இரண்டு குன்றுகளை இணைத்துப் படிகளின் வழி ஏறிச் செல்ல வடிவமைக்கப்பட்டு இருக்கும். ஒவ்வொரு படியிலும் தமிழ் வருடம் பிரபவ தொடங்கி அட்சய வரை 60 ஆண்டுகளும் படிகளின் பக்கவாட்டில் குறிப்பிட்டிருப்பது சிறப்பு.

ஒரு குடும்பம் அந்தப் படிகளுக்கு மஞ்சள் குங்குமம் வைத்துக்கொண்டு இருந்தார்கள். எப்படி தாண்டிப் போவது என்று குழப்பமாகப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

அதைப் பார்த்த பெரியவர் ஒருவர் `இந்தா பெரியாயி, இந்த ஆயி பொட்டு



இல்லாம நிக்குது பாரு. அதுக்குப் பொட்டு வைச்சி விடு` என்றதும், `ஏன் ஆயி ஸ்டிக்கர் பொட்டு விழுந்துடிச்சா` என வாஞ்சையோடு கேட்டுக்கொண்டே கையிலிருக்கும் குங்குமத்தை வைத்துவிட்டார்.

அன்னிச்சையாகக் கழுத்தில் போட்டிருந்த ஜப மாலையை சுடிதார் உள்ளே தூக்கிப்போட்டாள் மகேஸ்வரி என்கிற மரியம். நன்றி சொல்லிவிட்டுக் கிடுகிடுவெனப் படி ஏறத் தொடங்கினாள்.

பிரகாரம் சுற்றி முருகனைத் தரிசித்துவிட்டுக் கீழே இறங்கினாள். இன்னமும் அவர்கள் படிக்குப் பொட்டு வைத்துக்கொண்டுதான் இருந்தார்கள். இப்போது விபூதியும் பூசியிருந்தாள் மகேஸ்வரி. முறையாகக் கீழ் பிரகாரத்தையும் சுற்றி வந்தாள்.

ஏதோ ஒரு உணர்வு!! இழந்ததைப் பெற்றோமா!! இல்லை பெற்றதை இழந்தோமா!! என்று கலவையான உணர்வு. பிரசாதம் விற்கும் கடையில் எதாவது வாங்கிச் சாப்பிடலாம் என்று பார்த்தாள். சர்க்கரைப் பொங்கல் இருந்தது. ஆசையாகக் கையில் எடுத்துக்கொண்டு எவ்வளவு எனக் கேட்டாள்.

ஒரு தொன்னை பத்து ரூபாய் என்றார்கள். பர்ஸில் அவளிடம் 500 ரூபாய் நோட்டாக இருந்தது.

இங்கு வரும் வரை சில்லறை இல்லை என்ற கவனம் இல்லை. கடைக்காரரிடமும் சில்லறை இல்லை. `பரவாயில்லை காசு வேண்டாம். சாப்பிடுமா` என்கிறார். அப்பா சொன்னது போல் இருந்தது. இருந்தும் மகேஸ்வரிக்கு மனம் ஒப்பவில்லை.

`இல்லைங்க. வெளிய கடைல போய் மாத்திக்கிட்டு வரேன்` என்றவளைச் `சாப்பிட்டுவிட்டுப் போ மா` என்று அன்புக் கட்டளையிட்டார். ஒருவித சங்கடத்துடனே சாப்பிட்டுவிட்டுச் செருப்பும் பையும் வைத்திருந்த பூக்கடையில் `500 ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா?` எனக் கேட்டாள். `யாவாரமே இல்லம்மா. இதோ பாரு`ன்னு கல்லாவைத் திறக்கிறார்.

பூக்காரம்மா, நடை பாதை வியாபாரி, டீக்கடை, இளநீர் விக்கும் தாத்தா. அத்தனை சிறிய வியாபாரிகளுக்கும் 500 ரூபாய் கூட இன்னும் மிச்சமாகும் அளவிற்குப் புழக்கத்திற்கே வரவில்லை. இதில்

இந்தியாவில் அனைவருக்கும் வங்கிக் கணக்கு உள்ளது என்று சொல்வதை டிஜிட்டல்வாசிகள் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

டூரிஸ்ட் பஸ் ஒன்று வந்தது. அதிலிருந்த ஒருவரிடம் கேட்டுப் பார்க்க 5 நூறு ரூபாய் தாள்களாகக் கொடுத்தார். சில்லறையாக இருந்தால் செலவாகிவிடுகிறது என்று வேறு சலித்துக்கொண்டு. ஒவ்வொருவருக்கும் தேவைகள் மாறுபடுகின்றன.

தாகமாக இருந்தது. இளநீர் குடிக்கலாம் என்று நினைத்தவளாக இளநீர் பருகினாள். இளநீர் வெட்டும் தாத்தாவிற்கு எழுபது வயதிருக்கும். வாழ்வதற்கு அர்த்தம் வேண்டுமா. அதற்குச் சாகும் வரை உழைக்க வேண்டும். அவரின் உழைப்பு பார்க்க மகிழ்ச்சி அளித்தது. இளநீர் காசு போக நூறு ரூபாய்க்குச் சில்லறையும் கிடைத்தது.

கோவிலில் மீண்டும் பிரவேசித்தாள். இப்போது பிரசாதம் கடை கூட்டமாக இருந்தது. பொங்கல் கொடுத்த அப்பாவைக் காணவில்லை. பெண் ஒருவர் இருந்தார். 20 ரூபாய் எடுத்துக் குடுத்தாள். `என்ன சாதம் வேணும் அக்கா?` என்றார். `நான்தான் 10ரூவா தரணும். அதான்` என்றாள்.

சிரித்துக்கொண்டே `புரியலையே` என்றாள். பொங்கல் சாப்பிட்டதைச் சொன்னாள். `அப்பாவா பணம் கேட்டார்?` என்று ஆச்சரியமாகக் கேட்டாள். `இல்லை நான்தான் வந்து தரேன்னு சொன்னேன்` என்றபடி அப்பா மகள் உறவை வெகுவாக ரசித்தபடியே வெளியே வந்தாள்.

நேரம் 11 மணியை நெருங்கியிருந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தபோதே கும்பகோணம் பஸ் வந்தது. வழி பட்டீஸ்வரம். பார்த்ததும் ஏறிக்கொண்டாள். நல்லவேளை பாட்டு போட்டிருக்கவில்லை. ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து சோழ சாம்ராஜ்யம் வாழ்ந்து மடிந்த தடங்களை உள்வாங்கியவாறே பயணப்பட்டாள்.

சோழ மன்னர் பரம்பரை முழுவதற்கும் பட்டீஸ்வர துர்க்கைதான் குலதெய்வமாக விளங்கிவந்தாள். பாண்டியனை மணந்த சோழ அரசியான மங்கையர்க்கரசி தேவியாரும், ராஜராஜ சோழனுக்கு மதியூகி ஆலோசகராக விளங்கிய குந்தவைப் பிராட்டியாரும் பட்டீஸ்வர துர்க்கை மீது அபார பக்தி செலுத்தியவர்கள்தான். அவர்கள் கால் தடம் பதிந்த மண்ணில் இன்று தானும் நிற்பதை நினைத்ததும் சிலிர்த்தது மகேஸ்வரிக்கு.

இது சமயம் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கோயில் உள் சென்றிருந்தாள். ஆகம விதிக்கென்று ஏதோ ஒரு சக்தி இருக்கத்தான் செய்கிறது. மற்ற இடங்களைப் போலல்லாமல் துர்க்கையம்மன் இங்கு ஸ்வரூபிணியாகக் காட்சி தருகிறாள். தன்னைச் சரண் அடையும் பக்தர்களுக்கு உடனே அருள்புரிய காலை எடுத்து வைத்துப் புறப்படுகிற தோற்றத்தில் துர்க்கை நிற்பது சிறப்பு.

எதிர்பார்ப்பு இல்லாத தெய்வ தரிசனத்திற்கு இரண்டு நிமிடம் கூட ஆகாது. நீதானே என்னை அழைத்தாய் காண்பதற்கு, பார்த்துக்கொள் என்ற மனநிலை நிறைய மனிதருக்கு உண்டு. அவர்கள் எதுவும் வேண்டிக் கேட்பதில்லை. கை கூப்பி வணங்குவதுடன் சரி.

இந்நேரத்தில் மகேஸ்வரி கும்பகோணம் பஸ் ஏறி அமர்ந்துவிட்டாள். இரண்டாவது பேருந்து நிறுத்தத்திலேயே கும்பேஸ்வரர் கோயில் மொட்டைக் கோபுர வாசல் பார்த்ததும் உணர்ச்சி மிகுதியால் இறங்கிக்கொண்டாள்.

அந்த இடம் நிறைய மாறியிருந்தது. ஏ.ஆர். ஆர் வளைவு அப்படியே இருந்தது. `இந்த வழியே கொஞ்ச தூரம் உள்ளே போனால் என் வீடு வரும்` என்று பள்ளித் தோழிகளிடம் சொன்னது இன்னும் நினைவில் இருக்கிறது.

அப்பா அம்மா பூர்வீகம் எல்லாம் எங்கே என்று தெரியாது. திருமண கேட்ரிங் செய்யும் ஐயர் ஒருவருக்கு மேல் வேலையாள் வேண்டும் என்று மளிகைச் சாமான் போட வந்த அப்பாவை `உதவிக்குக் கூடவே இருக்கியா?`

எனக் கேட்டதும் சரி என்று கூடவே இருந்துவிட்டதாகச் சொல்வார்.

நினைவுகளை அசை போட்டபடியே உச்சிப்பிள்ளையார் கோவில் வரை நடந்தே வந்தாள். மண்டையைப் பிளக்கும் உச்சி வெய்யில் இருந்தும் செரிக்காத நினைவின் முன் வெய்யில் ஒன்றும் கடினமாகத் தெரியவில்லை. மதியம் ஒரு மணியைக் கடந்தும் பசி தெரியவில்லை.

அம்மாவும் நல்ல உழைப்பாளி. ஆம் சைக்கிளில் சென்று பூ விற்கும் புதுமைப்பெண். எத்தனை நாள் சைக்கிளின் முன் பாரில் உட்காரவைத்துப் பூ வியாபாரத்திற்கு அழைத்துப் போயிருக்கிறாள். பின் கேரியரில் பூக்கூடை இருக்கும். `யம்மா முன்னாடி உக்காந்தா வலிக்குதுமா. கேரியர்ல உக்காத்தி வைம்மா` என்று சொன்னால் பூக்கூடை சுமக்கும் சும்மாட்டை வைத்து அதன் மேல் உட்காரச் சொல்வாள்.

'வலிய தாங்கிக்க பழகணும் பாப்பா. அப்பதான் தைரியம் வரும். புரியுதா?' என்பாள். அவள் சொல்லிக்கொடுத்த தைரியத்தை விட காலம் கற்பித்த வலி அதிகம்.

நினைவின் ஊடே நடந்து வந்துகொண்டிருந்த மகேஸ்வரிக்கு மகாமகக் குளம் அருகே வந்ததும் கண்களில் நீர் முட்டியது. தன்னைப் பத்து வயது சிறுமியாக உணர்ந்தாள். உடல் நடுங்கத் தொடங்கியது. அன்றைய தினம் 12 வருடத்திற்கு ஒருமுறை வரும் பெரிய மாமாங்கம் திருவிழா கண் முன்னே காட்சியாக விரிந்தது.

'திருவிழாவை முன்னிட்டு மகாமகத்துக்கு வரும் பக்தர்களுக்குக் குளத்தின் அருகே இருந்த சத்திரத்தில் இலவச உணவு சமைக்கும் பொறுப்பு ஐயர்க்குக் கிடைத்திருந்தது.' அப்பா நிறைய நாட்கள் வீட்டிற்குக் கூட வராமல் அங்கேயே இருந்தார். அம்மாவோ சைக்கிளில் அங்கேயே நின்று பூ விற்றுக்கொண்டிருந்தார். கூட்டத்தில் நான் தொலைந்துவிடாமல் இருக்க வீட்டு விலாசம் எழுதிய பேப்பரைச்சட்டையில் ஊக்கு குத்திவிட்டிருந்தார் அப்பா.

அந்தக் குறிப்பிட்ட நாளில் மகாமக தினத்தன்று அதாவது 1992ஆம் வருடம் பிப்ரவரி 26ம் தேதி காலையில் பக்தர்கள் புனித நீராடலுக்குத் தயாராகக் குவியத் தொடங்கினர். காலையில் கூட்டம் சற்று குறைவாகவே இருந்தது. ஆனால் 10 மணி போலக் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. அந்தச் சமயத்தில்தான் அன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் வரவிருந்தார். குளிக்க வந்த பக்தர்கள் அவரைப் பார்க்கும் ஆவலில் கலையாமல் நின்றுவிட்டனர். இதனால் கூட்டம் அதிகரிக்க ஆரம்பித்தது.

அத்தனை வேலை நடுவிலும் மண்டபத்தின் மேல் அறைக்கு என்னை அழைத்துப் போய் அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுக் கீழே சென்றுவிட்டார் அப்பா. ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தேன். குளம் நிறைய மனிதத் தலைதான்.

எனக்கு அருகாமையில் கருடன் பறந்தது தெரிந்தது. நான் அதையே பார்த்துக்கொண்டு இருந்தேன். அந்நேரம் கீழே சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து கூட்ட நெரிசலில் ஒரே களேபரம். ரொம்ப நேரமாக அம்மா அப்பாவைக் காணோமே. அம்மா வந்தா சைக்கிளில் முன்னாடி உக்காரணும், நடந்து வீட்டிற்குப் போய்விடலாம் என்று நினைத்துக் கீழே வந்துவிட்டேன்.

அன்று அப்போது வரைதான் நினைத்ததைச் செய்தேன். அதற்குப் பின் நடப்பதைத்தான் நினைத்துக்கொள்கிறேன். பின்னொரு நாள் செய்தித்தாள் படித்துத் தெரிந்துகொண்டது. (கட்டிடச் சுவர் இடிந்து விபத்து. முற்பகல் 11.30 மணியளவில் சசிகலாவுடன் குளிக்க வந்தார் ஜெயலலிதா. குளக்கரைக்கு வந்த அவர் படிக்கட்டில் நின்றபடி பக்தர்களை நோக்கிக் கை அசைத்தார். இதனால் கூட்டத்தினர் ஆரவாரத்துடன் முண்டியடித்தனர். அந்த சமயம், பாங்கூர் தர்மசாலா கட்டிடத்தின் வெளிப்புறம்

இருந்த கிரில் வைத்த கட்டைச் சுவர் மீது பலர் ஏறி ஜெயலலிதாவைப் பார்க்க முயன்றனர். அதில் இரும்பு கிரில் சுவரோடு சாய்ந்தது. அங்கேயே சிலர் நசுங்கி இறந்தனர். இந்த கோர சம்பவத்தில் 60 பேர் வரை உயிரிழந்திருக்கக் கூடும்).

அடுத்த இரண்டு நாள் வரை எங்கிருந்தேன் என்ற விபரமெல்லாம் என் வாழ்வில் எழுதாத விதி போல ஒன்றும் ஞாபகமில்லை. மண்டபத்தின் கீழே வந்ததும் கூட்டத்தின் நடுவில் எங்கு செல்கிறோம் என்று தெரியாமல் போய்க்கொண்டே இருந்தேன். அழுதழுது நா வறண்டு குரல் எழவில்லை.

அம்மா, அப்பா இன்று இருந்தால் தலை நரைத்த வயோதிகர்களாக இருந்திருக்கக் கூடும். அவர்கள் புகைப்படம் கூட இல்லை. இரண்டு மணி வெய்யில் வெறிச்சோடிய சாலையில் அன்று கூட்டத்தில் தொலைத்ததை இன்று தேடி வந்திருக்கின்றேன். கிடைக்காது என்று தெரிந்தே!!'

எப்படியோ தன்னைச் சமாளித்துக்கொண்டு இரயில் நிலையம் அருகில் உள்ள செயிண்ட் மேரீஸ் கத்தீட்ரல் சர்ச் வந்து சேர்ந்தாள். சர்ச்சின் உள்ளே யாரோ பிரசங்கம் செய்துகொண்டிருந்தது தெளிவாகக் கேட்டது.

"எரிந்த சாம்பலில் இருந்து அருள் வாழ்வு அரும்புகிறது. நம் நெற்றியில் இடப்படும் தூய சாம்பல் மன மாற்றத்திற்கு அழைக்கும் தூய குறியீடு. திரும்பி வரவும் திருந்தி வரவும் இறைவன் கொடுக்கும் அழைப்பிதழ்."

அன்னிச்சையாக ஜப மாலையைச் சூடிதார் உள் போட்ட கை இப்போது நெற்றியில் மீதமிருந்த குங்குமம் திருநீறைச் சுவடு தெரியாமல் துடைத்தது. சர்ச்சுக்கு எதிரில் இருக்கும் செயிண்ட் ஜோசப் பள்ளிக்கு அருகில் பத்து வயதே ஆன மகேஸ்வரி, அன்று சத்தம் எழுப்ப முடியாமல் பேச வார்த்தை வராமல் மலங்க மலங்க இங்கு வந்துதான் கடைசியாக நின்றிருந்தாள்.

அன்றைய நாளில் யார் என்ன பேசினாலும் புரியாமல், அதிர்ச்சியில் பேசும், கேட்கும் திறனும் இழந்து, அங்கிருந்து எப்போது சென்னை வந்தாள், யார் வைத்தியம் பார்த்துப் பேசத் தொடங்கினாள் என்றெல்லாம் நினைவில்லை. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் கர்த்தரே காப்பாற்றும். வழி தவறிய ஆடு நான், என்னை ரட்சிப்பீராக ஆமென். இதைப் பயிற்சித்த ரோஸி சிஸ்டர் முகம் மட்டுமே இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. ஏன் சிவன் கோவிலிலோ பெருமாள் கோவிலிலோ தன்னை யாரும் எடுத்து வளர்க்கவில்லை என்ற கேள்வி அவ்வப்போது எழும்.

கைப்பேசி அழைத்தது. பாதர் பெர்னாண்டஸ்தான் அழைக்கிறார். ஃபோனை எடுத்து `தோத்ரம் பாதர்` என்றாள்.

`இப்போதும் எப்போதும் போல் கர்த்தரின் அருளால் நலமுடன் இருப்பாயாக. ஏம்மா ஃபோன் ஸ்விட்ச் ஆப் லயே இருந்தது,` என்று மென்மையாக விசாரித்தார். மரியம் என்ற நான் மகேஸ்வரியாக சில மணி நேரமாவது வாழ்ந்து பார்க்கப் போனேன் என்று எப்படி சொல்வது. உள்ளே சென்று கர்த்தரிடம் பாவ மன்னிப்பு கேட்டுக்கொள்ளலாம் என்று சமாதானப்படுத்திக்கொண்டு ஏதோ ஒரு காரணத்தைச் சொன்னாள்.

கிருஸ்தவ சபையின் ஆதரவற்றோர் இல்லத்தில் வளர்ந்த மரியம், டீச்சர் ட்ரெய்னிங் படித்து முடித்துக் காது கேட்காத வாய் பேச முடியாத குழந்தைகளுக்குப் பேச்சுத் திறன் ஊக்குவிக்கும் ஆசிரியையாக சென்னையில் வேலை பார்த்து வருகிறாள். அது சம்பந்தமான சில விஷயங்கள் பேசவே ஃபாதர் பெர்னாண்டஸ் அழைத்திருந்தார். இங்கிருக்கும் கர்த்தரும் இவளை ஒருமுறை பார்க்க விரும்பியிருப்பார் போல! தேவாலயத்தில் இரவு உணவு உண்டதும் 10 மணி சென்னை ரயிலுக்குக் கிளம்பிவிட்டாள் மரியம் என்ற மரிய சிஸ்டர்.

■

கவிஞர் ஏகாதசி

# ‘ஆத்தா ஓஞ்சேல...’



நான் சார்ந்த தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் கலை இரவு மேடைகளில் 1995 காலகட்டத்தில் “ஆசப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம் அம்மாவ வாங்க முடியுமா” என்கிற தோழர் பரிணாமன் எழுதிய பாடலைக் கரிசல் குயில் கிருஷ்ணசாமி பாடக் கேட்டு லயித்திருக்கிறேன். அதுவரை திரைப்பாடல்கள் மட்டுமே கேட்டிருந்த என்னை, தாய்மைப் பூக்களை அள்ளித் தொடுத்தாற் போன்ற இந்தப் பாடலின் வரிகளும் தேன் குடித்த குயிலின் குரலும் உருக்கின. மேடையின் எதிரே ஒரு பார்வையாளனாக அந்தப் பாடலைக் கேட்ட எத்தனையோ நாட்கள் கண்ணீர்த்துளிகள் அந்த மெல்லிய காற்றுக்கு உடைந்து சிதறியிருக்கின்றன. அப்படியொரு நிமிடங்களைப் போல் இனி வாய்க்கப்பெறுவேனா எனத் தெரியவில்லை.

எனது 18 வயதில் “முதல் தூறல்” எனும் கவிதை நூல் வெளியானது. அதில் எத்தனையோ கவிதைகள் இருந்தாலும் அம்மாவைப் பற்றி எழுதிய ஒரு நீள் கவிதையே அன்றைய நாளில் பிரபலம். யார் வாசிக்க நேரினும் அழுதுவிடுவர். எந்த மேடையில் அதை நான் படித்தாலும் கேட்பவரெல்லாம் கலங்கிப்போவர். மதுரை மாவட்டம் செக்கானூரணியில் ஒரு மாதர் சங்கக் கூட்டத்தில் வாசித்தபோது அத்தனை பேரும் அழுதது இன்னும் ஈரம் காயாமல் இருக்கிறது.

காரணம் ஒரு ஆண், குழந்தையாக இருக்கிறான், சிறுவனாக இருக்கிறான், அண்ணனாக, தம்பியாக மொத்தமாக இளைஞனாக இருக்கிறான். பின் தந்தையாக, தாத்தனாகவென எல்லாக் கதாபாத்திரங்களாகவும் அந்தந்த வயதின் சுதந்திரத்தோடு வாழ்ந்துவிடுகிறான். ஆனால் பெண் என்பவள் அப்படி அல்ல. தன் எல்லா வயதிலும் தாயாகவே இருக்கிறாள். எப்போதுமே தனக்கான வாழ்வை அவள் வாழ்வதே இல்லை. ஒவ்வொரு ஆணின் சுதந்திரத் திரிதலுக்கும் ஒரு பெண் தன் சிறகைக் கருக்கிக்கொள்கிறாள் அல்லது கருக்கிக்கொள்ளப்படுகிறாள். இப்படி சாம்பலாகிப்போகும் பெண் சமூகம் கண்டு வெம்பும் மனங்கள்தான் பெண்ணடிமைக்கு

எதிரான அல்லது பெண்ணைப் புரிந்துகொள்ளும் விதமான படைப்புகளை உருவாக்குகின்றன.

எனக்கும் என் அம்மாவுக்குமான பயணம் வெகு நெடியது. தனது பத்து வயதில் கிணற்று மண் சுமக்க ஆரம்பித்தவள் இப்போதும் மண் சுமந்துகொண்டே இருக்கிறாள். வயது 65 எனில் 55 வருட உழைப்பு எத்தகையது என்பதை நான் உணர்வேன். என் அம்மா பாடல் பாடிக் கேட்டதில்லை நான். பாடுபடத் தெரிந்தவளுக்குப் பாடத் தெரியவில்லை அல்லது பாடுபட்டுக்கொண்டே இருப்பதால் பாட நேரமில்லை. அதனால்தான் அம்மாவைப் பற்றி நான் பாடிக்கொண்டே இருக்கிறேன். என் ஒரு வயதில் என் அம்மாவைப் பிரிந்து வேறு திருமணம் செய்துகொள்கிறார் என் அப்பா. மீண்டும் தன் தாய் வீட்டிற்கே வந்து சேர்ந்தவளுக்காகக் காத்திருந்தது அதே சுமைகள். என் அம்மாவுடன் பிறந்தவர்கள் பத்துப்பேர். மூத்தவளாக இருந்துகொண்டு குடும்பத்தின் அத்தனை துயரங்களையும் சுமந்திருக்கிறாள். அத்தனை பேரின் வயிற்றின் பசியையும் போக்கும் பொறுப்பு இவளுடையதாய் இருந்திருக்கிறது.

மீண்டும் மண் சுமந்திருக்கிறாள், நடவு நட்டிருக்கிறாள், களை எடுத்திருக்கிறாள் மற்றும் கதிறுத்திருக்கிறாள்.

என் அம்மா என்னோடு பேசிய நாட்களை விட அழுத நாட்களே அதிகம். அவளது சொற்கள் கண்ணீராலானவை. எத்தனை புறக்கணிப்பை எத்தனை அவமானங்களைத் தாங்கிக்கொண்டு என்னை வளர்த்திருப்பாள். அவள் கால் பாதங்கள் முள் தைத்து முள் தைத்துப் பொத்தல்கள் நிறைந்து காணப்படும். உலக்கை பிடித்தே அவள் கைகள் காய்த்திருக்கும். நெல்லை உரலில் குத்தித்தான் அத்தனை பேருக்கும் பொங்கிப் போடுவாள். கூழ் களிக்குக் கம்பும் சோளமும் உரலில் இடித்துத்தான்.

எங்கள் வீட்டு வாசலில் இரண்டு உரல்கள் இருக்கும். ஒன்று குத்துரல் இன்னொன்று தீட்டுரல். குத்துரலில் என் அம்மா நெல் குத்தும்போது உரலைச் சுற்றிலும் கோழிகள் சுற்றிக்கொள்ளும். சிந்துவதைப் பொறுக்கினால் பரவாயில்லை, சில கோழிகள் உரலுக்குள் கழுத்தை நீட்டிக்கொண்டு நெல்லைக் கொத்த வரும். அதற்காகவே அம்மா கால்களில் அவற்றைப் பத்திக்கொண்டும், `ச்சோ.. ச்சோ..` வெனக் கத்திக்கொண்டும் நெல்லைக் குத்திப் புடைத்து அரிசியாக்குவாள். கடைசியாகத் தீட்டுரலில் போட்டு அரிசியைப் பாலீஸ் செய்யும் விதமாகத் தீட்டுவாள். அப்படித் தீட்டிப் பின் சுளகில் புடைத்தெடுக்கையில் தவிடு வரும். அந்தத் தவிடு அத்தனை ருசியாக இருக்கும். அம்மா எனக்குத் திங்கக் கொடுப்பாள். `அவித்த நெல் காய்கையில் கோழிகளிடமிருந்து நெல்லைக் காவல் காத்ததிற்குத்தான் இந்தக் கூலி` என்பாள் சிரித்தபடியாக.

சாப்பிடும்போது ஒவ்வொரு நாளும் நெஞ்சில் அடித்துக் கத்தி ஊரைக் கூட்டுவாள். தட்டில் போட்ட சோற்றில் நான்கு வாய் வைத்துவிட்டு நான் எழும்போதுதான் இந்தக் கூத்து நடக்கும். `ஆக்கிற சோத்தையெல்லாம் நானே கொட்டிக்கிறேனே.. இந்தப் பாவிப்பய மகன் இப்படி நாலு பருக்கைய தின்னுட்டு எந்திரிச்சா எப்படி ஆளு பெருக்கிறதாம். இப்படி முள்ளா நெஞ்சுக்கூடு வத்தித் திரிஞ்சா.. பொம்பள வளப்பு இப்படித்தான் இருக்குமுன்னு நாலு கழுத நாலு சொல்லிப்பிருமே` என்பாள். அவள் அழுவதையும் கத்துவதையும் தாங்கிக்கொள்ள முடியாமல் வாய் நிறைய சோற்றை வைத்துக்கொண்டு முழித்துக்கொண்டிருப்பேன்.

இன்றும் எனக்கு அம்மாவே ஆகச் சிறந்த உலகம். இரு மாதத்திற்கு ஒரு முறையேனும் அம்மாவோடு சேர்ந்து எங்கள் ஒட்டு வீட்டில் சாப்பிடுகிறேன். என்னதான்டா சாப்பிடுற என அம்மா இன்னும் என்னைத் திட்டுகிறாள். அம்மா எப்படியெல்லாம் சமைப்பாளோ அப்படியே நானும் சமைக்கக் கற்றுக்கொண்டேன். அம்மா எப்படி வீடு வாசல் பெருக்குவாளோ அப்படியே பெருக்கக் கற்றுக்கொண்டேன். வீடு திண்ணை மெழுகி அடுப்படியில் போடுகிற சங்குக் கோலம் எனக்கு அவ்வளவு பிடிக்கும். அதை இப்போது நானும் போடுகிறேன். இவை எல்லாவற்றுக்குள்ளும் என் அம்மாவின் வாசனை இருந்துகொண்டே இருக்கிறது.

பத்து புளியமரங்கள், மூன்று முருங்கை மரங்கள், இரண்டு வேப்பம் மரங்கள்,




நாற்பது ஐம்பது வெள்ளாடுகள் இவை அத்தனைக்கும் என் அம்மா மந்தைக் கிணற்றில் நீர் இறைத்து இடுப்பில் ஒரு பானை தலையில் ஒரு பானையெனக் கொண்டு வந்து வளர்த்திருக்கிறார்.

இன்று அந்த ஆடுகள் இல்லை, ஆனால் மரங்கள் ஒன்றிரண்டு போக மீதம் இருக்கின்றன. அந்த மரங்களின் பூக்களில் என் அம்மாவின் மனதைப் பார்க்க முடிகின்றது.

தன் மகன் ஒரு திரைப்படப் பாடலாசிரியர் என்பது உட்பட இத்தனையை உருவாக்கியவள் எந்தக் கர்வமும் இன்றி, புளியமரத்தடியில் உதிர் பழங்களையும் வேம்படியில் முத்துக்களையும் பொறுக்கியபடி இருக்கிறாள். ஆனால் இப்படி ஒரு தாயிக்கு மகனாகப் பிறந்த கர்வம் எனக்கு எப்போதும் உண்டு.

ஒரு குடிசையில் அம்மாவைத் தனியே விட்டுட்டு வந்துட்டோமே என 23 ஆண்டுகளுக்கு முன் சென்னை வந்து இறங்கியபோது என் பாதங்கள் நடுங்கின. காடுகளையும் மிருகங்களையும் கண்டு அஞ்சியதில்லை நான். ஆனால் சென்னை நகரம் ஒருவித பயத்தைத் தந்தது.

போரூர் ஆர். ஈ. நகர் 6 வது தெருவில் ஒரு சிற்றறையில் தங்கினேன். தூக்கம் வரவில்லை. அம்மாவின் சேலை வாசனை அற்ற முதல் படுக்கை அது. அம்மாவின் சேலையில் உள்ள பூக்களுக்கும் வாசனை உண்டு என்று நம்பப் பிடிக்கும் எனக்கு. பணியில் சேர்ந்து பயணமானேன். வருடங்கள் சில ஓடின. என் மனைவியின் வீடிருக்கும் தெருவான வடபழனி, ராஜாங்கம் மத்திய வீதியில் நான் நண்பர்களோடு தங்கியிருந்தபோதுதான் “ஆத்தா ஒஞ்சேல” பாடலை எழுதத் தொடங்கினேன். நாம் இன்று பார்த்து அதிசயிக்கும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஒரே மூச்சில் கட்டப்பட்டதில்லை எனவும், அது இருநூறு வருடங்களில் வேறு வேறு அரசர்களால் வெவ்வேறு காலகட்டங்களில் உருவாகி உருப்பெற்றதெனவும் காவல் கோட்டம் நாவலில் எழுத்தாளர் சு. வெங்கடேசன் எழுதியிருப்பார். அதுபோலத்தான் இந்தப் பாடல் ஒரே நாளில் எழுதப்பட்டதில்லை. குறைந்தது 15 நாட்களாவது செலவு செய்திருப்பேன். எழுதிமுடித்த நாளில் நான் எனது கடந்த கால் நூற்றாண்டுக் காலத்திற்குப் போய் வந்ததாய் உணர்ந்தேன்.

உணர்வுகளை நழுவவிடாமல் கவித்துவம் குன்றாத எளிய சொற்களால் பாட்டுக் கட்டுவதே என் பாணி. அது நூறு சதவீதம் இந்தப் பாடலுக்கு வாய்த்தது. பாடலை எழுதி முடித்த கையோடு என் நண்பர் கரிசல் கருணாநிதியைச்

செக்கானூரணியில் அவரது வீட்டில் சந்தித்துக் கொடுத்தேன். கொஞ்ச நேரத்தில் தபேலாவில் விரல்களைப் படர விட்டு மெட்டொன்றைப் பிடித்துக் குரல் வழியே என் எழுத்துக் குழந்தைகளைக் கூட்டிவந்தபோது என் நெஞ்சம் நனைந்தது.

**பல்லவி**

ஆத்தா ஒஞ்சேல – அந்த

ஆகாயத்தப் போல

தொட்டிகட்டித் தூங்க

தூளிகட்டி ஆட

ஆத்துல மீன் பிடிக்க

அப்பனுக்குத் தல தொவட்ட

பாத்தாலே சேத்தணைக்கத் தோணும் – நான்

செத்தாலும் என்னப் போத்த வேணும்

**சரணம் – 1**

இடுப்புல கட்டிக்கிட்டு நீச்சல் அடிச்சதுவும்

ஒஞ்சேல தானே வண்ணப் பூஞ்சோல தானே

தூங்குகிற நேரமெல்லாம் தலையணை ஆனதெல்லாம்

ஒஞ்சேல தானே வண்ணப் பூஞ்சோல தானே

முந்தான முடிச்சுலதான் துன்னூறு இருக்கும் – நீ

கட்டிருக்கும் சேலையில கண்ணீரு மணக்கும்

கஞ்சி கொண்டு போகும்போது சும்மாடா இருக்கும் – ஓ

சேல கட்டி எரைச்ச தண்ணி சக்கரையா இனிக்கும்

**சரணம் – 2**

அக்கா கட்டிப் பழகினதும் ஆடு கட்டி மேய்ச்சதுவும்

ஒஞ்சேல தானே வண்ணப் பூஞ்சோல தானே

கண்ணில் ஒரு தூசு பட்டா ஒத்தடம் கொடுத்ததுவும்

ஒஞ்சேல தானே வண்ணப் பூஞ்சோல தானே

பெட்டிகுள்ள மடிச்சு வச்சா அழகு முத்து மால

காயம்பட்ட விரல்களுக்கு கட்டுப் போடும் சேல


மயிலிறகா ஒஞ்சேல மனசுக்குள்ள விரியும் – ஓ

வெளுத்த சேலத் திரி வெளக்குப் போட்டா எரியும்

இந்தப் பாடலை எழுதிச் சரியாக இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. எழுதிய நாள் தொடங்கி இன்றுவரை உலகின் எந்தத் திசையிலிருந்தாவது ஒருவர் என்னைத் தொடர்புகொண்டு கண் கசிந்துகொண்டே இருக்கிறார். உலகத் தமிழ் மனங்களிலெல்லாம் இப்பாடல் நீங்கா இடம் பெற்றிருக்கிறது. மறைந்த தோழர் திருவுடையான் இப்பாடலை அவரது பாணியில் மிகச் சிறிய மாற்றம் செய்து பாடினதும் சிறப்பளித்தது. கலை இரவு மேடைகளில் பாடப்பட்டு வந்த இந்தப் பாடலைத் தம்பி செந்தில் கணேஷ் விஜய் டிவியில் பாடியபோது பாடல் மொத்தக் காற்றையும் குத்தகைக்கு எடுத்துக் கலந்தது. அந்த நிகழ்ச்சியில் செந்தில் கணேஷ் என் பெயரைக் கூறவில்லை என்று என் நண்பர்களும் தோழர்களும் பொங்கி எழுந்தனர். அந்தச் சூழலில் செந்தில் கணேஷ் என் பெயர் கூற மறந்திருக்கலாம் அல்லது அவர் கூறியிருந்து எடிட்டிங்கிலும் போயிருக்கலாம் எதுவாயினும் ஒன்றுமில்லை. அந்தப் பாடலை எழுதும்போது எனக்குப் பெயர் கிடைக்கும் என எழுதவில்லை, பாடலைக் கேட்பவர்கள் தாயன்பை நினைத்துப்பார்க்கும் தருணங்களுக்காகத்தான். அதே நேரம் இந்தப் பாடலைக் கரிசல் கருணாநிதி, திருவுடையான், செந்தில் கணேஷ், வேல்முருகன், ஜெயமூர்த்தி, சின்னப்பொன்னு, மகாலிங்கம், சித்தன் குணா போன்றவர்கள் மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணி மகத்தானது. நான் திரைப்படத்தில் எத்தனையோ புகழ்பெற்ற பாடல்களை எழுதியிருந்தாலும் எனக்கு “ஆத்தா ஒஞ்சேல” பாடலால் கிடைத்த மனநிறைவுக்கு நிகரில்லை.

- தொடரும்

மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

1980களின் இறுதியில் தமுஎச-வின் புதுக்கோட்டை மாவட்ட மாநாடொன்று நடைபெற்றது. நண்பர்களோடு சேர்ந்து நான் நடத்திக்கொண்டிருந்த 'விடியல்' இதழுக்கும் மாநாட்டு அழைப்பு வந்தது.

மாநாட்டு நிகழ்வுகளைப் பற்றி இதழில் எழுதுவதென முடிவு செய்து, ஆளுக்கொரு பொறுப்பை எடுத்துக்கொண்டோம். மாநாட்டில் நடைபெற்ற கவியரங்கைப் பற்றி நான் எழுதினேன். கவியரங்கில் தெறித்த பல நல்ல வரிகளைப் பாராட்டிவிட்டு, 'முருங்கை இலக்கியம்' எனும் தலைப்பிற்கு மட்டும் ஒரு குட்டு வைத்திருந்தேன்.

இதழில் வெளியான மாநாட்டு விமர்சனக் கட்டுரையைப் படித்துவிட்டு, தமுஎச புதுக்கோட்டை மாவட்டத் தலைவராக இருந்த கவிஞர் கந்தர்வன் கேட்ட கேள்வி... "கவியரங்க நிகழ்வு பற்றி எழுதியது யார்?" என்று. அடுத்த நாளே அவர் பணியாற்றிய மாவட்டக் கருவூல அலுவலகத்திற்கு நேரில் போய் நின்றேன். என்னை வரவேற்றபடி, இருக்கை விட்டு எழுந்து வெளியே வந்தார் கந்தர்வன்.

'விடியல்' இதழ் பற்றியும், இதழுக்கான பொருளாதாரம் பற்றியும், இலக்கிய வாசிப்பு பற்றியும் கேட்டுக்கொண்டும் பேசிக்கொண்டும் நடந்து வந்தார் கந்தர்வன். எதிரேயிருந்த தேநீர் கடைக்குச் சென்று, சூடாகத் தேநீர் அருந்தினோம். அப்போதும் பேச்சு தொடர்ந்தது. திரும்பி அலுவலகம் வருகையில் என் தோள்மீது அவரது கை படர்ந்திருந்தது. வாழ்வின் மறக்கமுடியாக் கணங்களுள் அதுவுமொன்று.

அடுத்த நாள், தமுஎச மாவட்டச் செயலாளர் கவிஞர் நா.முத்துநிலவனைச் சந்திக்க, பேருந்து நிலையம் அருகிலிருந்த அரசுக்குடியிருப்புக்குச் சென்றேன். மலர்ந்த புன்னகையோடு வரவேற்றவர், 'விடியல்' இதழின் ஒவ்வொரு பகுதி பற்றியும் தனது ஆழமான மதிப்பீட்டைப் பகிர்ந்தார்.

நாங்கள் பேசிக்கொண்டிருந்த அறையிலிருந்த இரு ஷெல்ஃபுகளிலும் புத்தகங்கள். மேலேயிருந்த அட்டைப்பெட்டியிலும் புத்தகங்கள். கீழே மேசையில், சோபாவில் என எங்கெங்கும் புத்தகங்களே நிறைந்திருந்தன. பசியோடிருப்பவன் பிரியாணி கடையைப் பார்ப்பதுபோல் புத்தகங்களையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

என் பார்வையைப் புரிந்துகொண்ட கவிஞர், "ஏதாவது புத்தகம் வேணும்னா எடுத்துட்டுப்போயி படிச்சிட்டுக் கொடுங்க..." என்றார். அங்கிருந்த மொத்தப் புத்தகங்களுக்கும் நானே உரிமையாளன் ஆனதுபோல் உணர்ந்தேன். என் வாசிப்பின் எல்லையை விரித்ததில் கவிஞர் நா.முத்துநிலவன் வீட்டு நூல்களுக்கு முக்கிய இடமுண்டு. அரசுக் கிளை நூலகத்திற்கு அடுத்து, நான் அதிகம் படித்த நூல்கள் கவிஞரது வீட்டிலிருந்த நூல்களே.

ஒவ்வொரு முறையும் எத்தனை நூல்களை எடுத்தாலும் எதுவுமே சொல்ல மாட்டார். படித்துவிட்டு மறக்காமல் நூல்களைத் திரும்பக் கொண்டுபோய்க் கொடுத்துவிடுவேன். அவர் வீட்டில் இல்லாதபோதுகூட, படித்த நூல்களைக் கொண்டுபோய் வைத்துவிட்டு, வேறு நூல்களை எடுத்துக்கொண்டு வருமளவுக்கு அவரது மனமும் நூலகமும் எனக்காகத் திறந்தேயிருந்தன.

முதல்முறையாக நான் வாசிக்க எடுத்துவந்த ஐந்து நூல்களுள் ஒன்று 'ஒளிப்பறவை'. தலைப்பே என்னைச் சுண்டியிழுத்தது. அதிலும் நூலின் தலைப்பே ஒரு பறவையின் சிறகடிப்பைப்போல எழுத்தாக விரிந்திருந்தது அழகாக இருந்தது.

1971இல் சிவகங்கை அன்னம் வெளியீடாக வந்த அந்நூலின் ஆசிரியர் கவிஞர் சிற்பி. முன்னரே சிற்பியின் சில கவிதைகளை இதழ்களில் வாசித்திருந்தாலும், கவிஞரின் முதல் தொகுப்பாக நான் வாசித்தது 'ஒளிப்பறவை' தான்.


கவிஞர் சிற்பியின் லாவகமான மொழி ஆளுமையும், கவிதைகளில் தோய்ந்திருந்த கவித்துவமும் வாசித்த என்னையும் 'கவிப்பறவை'யாக்கியது. அன்றிலிருந்தே சிற்பியின் வாசகர்களுள் நானும் ஒருவனானேன்.

திசையெங்கும் வலம்வரும் அந்த 'ஒளிப்பறவை'யின் கவிதைப் பயணம், வானமளக்கும் அளவுக்கு இன்று உயர்ந்திருக்கிறது. வாசிப்பவர் மனங்களிலெல்லாம் நிறைந்திருக்கிறது.

•

தமிழ்க்கவியுலகில் சிற்பி என எல்லோராலும் அறியப்பட்ட கவிஞரின் இயற்பெயர் பாலசுப்பிரமணியம் என்பதாகும். 1936ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் தேதியன்று பொள்ளாச்சி அருகேயுள்ள ஆத்துப்பொள்ளாச்சி எனும் கிராமத்தில் கி.பொன்னுச்சாமி – கண்டியம்மாள் தம்பதியினரின் மகனாகப் பிறந்தவர் சிற்பி. கேரள மாநிலம் பாலக்காட்டிலுள்ள தத்தமங்கலம் சீலி நினைவு உயர்நிலைப்பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை முடித்தார். பள்ளிப்படிப்பு மலையாள மொழி வழி அமைந்ததால், சிறுவயதில் தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வமேதும் உண்டாகவில்லை. ஆனாலும், கல்லூரி படிக்கையில் தமிழ் இலக்கியத்தைப் பயிற்றுவித்த அப்துல் கபூரின் வகுப்பும், தமிழறிஞர்கள் கி.ஆ.பெ.விசுவநாதம், சி.என். அண்ணாத்துரை, ம.பொ.சிவஞானம், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் ஆகியோரின் உரைகளுமே தமிழிலக்கியத்தின் மீதான காதலைக் கவிஞருக்குள் தூண்டின.

திருச்சியிலுள்ள ஜமால் முகம்மது கல்லூரியில் இடைநிலைக் கல்வியை(1953) முடித்து, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் பயின்றார். பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராக 1958இல் பணியில் சேர்ந்து, பின்னர்



பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவராகப் பணி உயர்வுபெற்றார். 1989இல் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று, 1997இல் பணி ஓய்வுபெற்றார்.

எழுத்து, பேச்சு, செயல் என்ற மூன்றும் ஒரு முக்கோண வடிவம் போன்றது. இவற்றுள் பலருக்கு ஏதேனும் ஒன்று, சிலருக்கு ஏதேனும் இரண்டு வாய்க்கப்பெறும். ஆனால், இந்த மூன்றும் கைவரப்பெற்ற முப்பரிமாண ஆளுமை என்று கவிஞர் சிற்பியைக் கூறுவது மிகப் பொருத்தமானது.

கவிதை, கவிதை நாடகம், சிறுவர் இலக்கியம், உரைநடை, மலையாள மொழிபெயர்ப்பு, பதிப்பாக்கம், தொகுப்பு நூல், ஆங்கில நூல்கள் என எந்தப் படைப்பையும் செய்நேர்த்தியோடு வெளிப்படுத்தும் எழுத்துக்குச் சொந்தக்காரரான சிற்பி, பேச்சிலும் வல்லவர்.

'உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்


வாக்கினிலே ஒளியுண்டாகும்'

- எனும் மகாகவி பாரதியின் வாக்கு மெய்ப்படும் அழகினைச் சிற்பி ஆற்றும் உரைகளின்வழி கண்டுணரலாம். தடையற்ற – தெளிவான – அழுத்தமான – தீர்க்கமான – அனைவரையும் ஈர்க்கும் வகையிலான குரலில் பேசும் ஆற்றல் சிற்பியின் தனிச்சிறப்பாகும். சிற்பியின் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளே கம்பனில் மானுடம் (2002), இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை (2006), பாரதிதாசனுக்குள் பாரதி (2011) என மூன்று நூல்களாக வெளிவந்துள்ளன.

சிற்பியின் முதல் கவிதை நூல் 'நிலவுப் பூ'(1963) கோலம் வெளியீடாகப் பூத்தது. பின்னர், சிரித்த முத்துக்கள்(1966), சர்ப்ப யாகம்(1976), புன்னகை பூக்கும் பூனைகள்(1982), சூரிய நிழல்(1990), ஒரு கிராமத்து நதி (1998), பூஜ்யங்களின் சங்கிலி(1999) உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள், ஆதிரை(1992) கவிதை நாடகம், சிற்பி தரும் ஆத்திசூடி(1993), வண்ணப்பூக்கள்(1994) என இரு சிறுவர் நூல்கள், உரைநடை, வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு, உரை நூல், இலக்கிய வரலாறு, பதிப்பித்த நூல்கள் என ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழ்க்கூறும் நல்லுலகுக்குத் தந்த மகத்தான தமிழ்ப் படைப்பாளியாக உயர்ந்து நிற்கிறார் கவிஞர் சிற்பி.

மற்ற கவிஞர்களிடத்து இல்லாத இன்னொரு முக்கிய பண்பு கவிஞர் சிற்பியிடம் உண்டு. அது பல்வேறு அமைப்புகளில், இதழ்களில் தலைமைப் பொறுப்பேற்று, பலரையும் இணைத்துக்கொண்டு செயலாற்றும் திறனாகும். சலிப்பில்லாமல் தொடர்ந்து செயல்படுவதற்குப் படைப்பு மனம் மட்டுமின்றி, கூட்டுச் சிந்தனையும் உறுதியான திட்டமிடலும் அவசியம் வேண்டும். அப்படியான கூட்டுச் சிந்தனை படைத்தவராக இருப்பதினால்தான் 15க்கும் மேற்பட்ட அமைப்புகளில் பொறுப்பேற்று, தனது பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார் சிற்பி.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் தேர்வுக்குழு உறுப்பினராகக் காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகங்களிலும், சாகித்திய அகாதெமி பொதுக்குழு உறுப்பினராகி, பின்னர் தமிழ்




ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் (1993-1998), சாகித்திய அகாதெமி தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளராகவும் (2018-2022) திறம்படச் செயலாற்றி வருகிறார்.

இவற்றோடு, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் செயற்குழு மற்றும் விருதுக்குழு உறுப்பினராகவும், ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு மன்றத்தின் தலைவராகவும், பொள்ளாச்சி இலக்கியக் கழகத்தின் செயலாளராகவும், பாரதிய வித்யா பவன் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பலப்பல பொறுப்புகளில் செயல்பட்டு, தனது நிறைவான பங்களிப்பினை ஆற்றி வருகிறார்.

அரை நூற்றாண்டுகளுக்கு முன் கோவையில் தொடங்கிய வானம்பாடி கவிதை இயக்கத்தின் தலைமகன்களில் ஒருவராக இருந்து 'வானம்பாடி' கவிதை இதழினைக் கொண்டுவந்ததும், அன்னம் விடு தூது, வள்ளுவம், கவிக்கோ, கணையாழி ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றிருந்ததும் சிற்பியின் செயல்பாடுகளுக்கான இலக்கியத் தளங்களாக விரிந்து கிடக்கின்றன.

நான் கவிஞரது முதல் நூலாக வாசித்த 'ஒளிப்பறவை'யில் -

**'வாழ்க்கைப் புத்தகம்**

**விரிந்து கிடந்தது**

**வரிக்கு வரி படித்தேன்'**

- என்றெழுதியிருக்கும் சிற்பியின் கவிதை நூலினைக் கையிலெடுத்துவிட்டால், கவிதைகளில் பொதிந்திருக்கும் வாழ்க்கையை வரிக்கு வரி வாசிக்கலாம். கவிஞரது கவிதை நூல்கள் அனைத்துமே என் சேகரிப்பில் உள்ளன.

மகாகவி பாரதியைத் தனது ஞானகுருவாக ஏற்றுக்கொண்டவர் கவிஞர் சிற்பி. அதனால்தான்,

**'எனக்கவனே குரு**

**அவன் எழுத்தே வேதம்**

**வார்த்தை சட்டம்**

**கவிதை சத்தியம்'** *(பாரதி - கைதி எண்:253)*

- என்று சூளுரைக்கிறார்.

காந்தியின் மீதும் அளவற்ற நேசம் கொண்ட கவிஞர், மகாத்மா(2006) எனும் கவிதை நூலினையும் படைத்துள்ளார்.

**'ஏவுகணைகள்**

**யுகத்தினிலும்**

**இன்னும் உயிர்க்கும்**

**தத்துவம் நீ'**

- என்று காந்தியின் புகழினைப் போற்றுகிறார்.

சிற்பியின் கவிதை வானத்தில் என்றென்றும் நட்சத்திரங்களே மிளிர்கின்றன. கவித்துவப் பூமாலையைப் பொழிகின்றன. பகட்டான ஜொலிப்புகளின்றி, எளிமையின் கம்பீரத்தில் மக்களைப் பற்றிப் பாடுகிற தமிழ் மண்ணின் வானம்பாடியாக வலம்வருகிறார் சிற்பி.

**‘நியூட்ரான் குண்டுகளோடும்**

**அன்று ஏவுகணைகளோடும்**

**பீரங்கிகள் டாங்கிகள்**

**போர்க்கப்பல்களோடும்**

**இன்று**

**ஏழை தேசங்களும் கூட**

**பட்டினி வயிறுகளின் மேல்**

**பவனி வருகின்றன’** (கவிதை வானம்)

- என்றெழுதுகையில் இவர் மக்களுக்கான கவிஞராகச் சிகரம் தொடுகிறார்.

‘ஈழம்’ எனும் தலைப்பில் சிற்பி எழுதிய 13 சிறு கவிதைகளைக் கவிஞர் வேனில் கிருஷ்ணமூர்த்தி சிறுநூலாக வெளியிட்டார். சிறுகவிதை என்றாலும் அமிலத் துளிகளாய் அவை நம் மனதை அரிக்கின்றன. உங்களுக்காக அதிலொரு துளி;

**‘கண்டியில்**

**படுத்திருந்தார் புத்தர்**

**கோரைப் பற்களுடன்**

**சிங்கள பிக்குகள்**

**ஊதுவத்தி கொளுத்தி**

**வழிபடலாயினர்**

**“புத்தம் சரணம் கச்சாமி**

**தமிழர் மரணம் கச்சாமி” ’**

இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் இயக்கத்தில் 1978இல் வெளியான ‘கிழக்கே போகும் ரயில்’ திரைப்படத்தில் கவிஞர் சிற்பி, ஒரு பாடலை எழுதினார்.

**‘மலர்களே நாதஸ்வரங்கள்**


**மங்கலத் தேரில் மணக்கோலம்**


**வண்ண ஜாலம் வானிலே...’**


இப்பாடல் திரைப்படத்தில் இடம்பெறாவிட்டாலும், ஒலிநாடாவில் இடம்பெற்று, உலகம் சுற்றிய புகழ்பெற்றது.

‘அக்கினி சாட்சி’ நாவலை மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தமைக்காக 2001ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமின் மொழிபெயர்ப்பு விருதினையும் 2003ஆம் ஆண்டு ‘ஒரு கிராமத்து நதி’ கவிதை நூலுக்காகச் சாகித்திய அகாதெமியின் படைப்பிலக்கிய விருதினையும் பெற்றிருக்கிறார். தனது படைப்புகளுக்காக இதுவரை 40க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ள கவிஞர் சிற்பிக்கு 2022ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருதினை வழங்கிக் கௌரவித்தது.

1996இல் நடைபெற்ற கவிஞர் சிற்பியின் மணி விழாவின்போது ‘சிற்பி அறக்கட்டளை’ தொடங்கப்பட்டு, ஆண்டுதோறும் மூத்த கவிஞருக்கு ‘சிற்பி இலக்கிய விருது’ம், இளைய கவிஞருக்கு ‘இலக்கியப் பரிசு’ம் வழங்கி வருவது பாராட்டுக்குரியது. கவிஞர் சிற்பி






குறித்த 10 ஆய்வு நூல்கள் தமிழிலும், 3 ஆங்கில நூல்களும் வெளிவந்துள்ளன.

சிற்பியின் பல கவிதைகளுக்குள் கதைக்கருவும் உருப்பெற்று விளங்குகின்றன. காட்சி வர்ணனைகளோடு நீளும் கவிதைகள் சில நேரங்களில் ஒரு கதைக்கான முத்தாய்ப்போடு முடிவதையும் பார்க்க முடிகிறது. ஆனாலும் ஒரு கதையையே ஒரு முழு நீளக் கவிதையாக்கிக் கவிஞர் எழுதியிருக்கும் தொகுப்பே 'மௌன மயக்கங்கள்' (1982). இந்நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றது இன்னொரு சிறப்பு.

'என் இனிய நண்பனின் அந்தரங்கமான வாழ்க்கைக் கதை. பலப்பல ஆண்டுகளாக இந்தக் கதை என் மனதுக்குள் அலைமோதிக்கொண்டிருந்தது. கவிதைச் சிறகுகள் தந்து இப்போது நான் அதனைப் பறக்கவிடுகின்றேன். கதைக் கவிதைகள் பலவற்றை நான் முன்னர் எழுதியிருந்த போதிலும் உணர்ச்சி தரங்கமிடும் காதல் கதையைப் புதுக்கவிதையில் ஆக்கும் முயற்சியில் கடும் சோதனைகளுக்கு உள்ளானேன்' என்று என்னுரையில் சிற்பி குறிப்பிட்டுள்ளார்.

**'உனக்கும் எனக்கும்**

**ஏற்பட்ட உறவுக்கு**

**உலகம் அறிய**

**நான் பெயர் சொல்ல முடியாது'**

- என்பதாகத் தொடங்கும் இந்தக் காதல் க(வி)தையில் அவனும் அவளுமே நாயகன் - நாயகி. இந்தக் கவிதையெங்கும் கொட்டிக்கிடக்கும் சிறுசிறு வரிகளில் நம் மனதைச் சிறைப்பிடித்து விடுகிறார் சிற்பி.

இதோ... ஒரு சான்று;

**'அம்மா நகைகளை விற்றாள்**

**அப்புறம் காய்கறி விற்றாள்**

**தலையில் சுமந்து விறகு விற்றாள்**

**பிறகு?**

**கற்பை விற்றாள்!**

**எங்களுக்கு**

**கால் வயிறு நிரம்பியது...'**

இந்நூலில் நம்மைக் கலங்கடிக்கும் வரிகள், வரிசைகட்டி நிற்கின்றன. 54 கவிதை மலர்களால் பின்னப்பட்ட இந்தக் கதை மாலையைப் பற்றி, 'சுருக்'கெனச் சொல்ல வேண்டுமானால் கவிஞர் மீராவின் வார்த்தைகளைத்தான் இரவல் பெற வேண்டும்.

'கிப்ரானின் முறிந்த சிறகுகளைப் போல் என் தாய்மொழியில் ஒரு வசன காவியத்தை – அமர காவியத்தைப் படைக்க வேண்டும் என்று பல நாட்கள் பரபரத்திருக்கிறேன்... ஒரு நாள் ஆசையாய்ப் படைத்தும் பார்த்தேன்.

இதோ... சிற்பி ஊனுருக உயிருருக 'மௌன மயக்கங்களை'ப் படைத்துவிட்டார்... சிற்பி ஜெயித்துவிட்டார்' என்கிற மீராவின் பகிர்வே, சரியான சாசன வரிகளாகின்றன.

நாடறிந்த கவிஞர், சிறந்த மொழிபெயர்ப்பாளர், போற்றுதலுக்குரிய பேராசிரியர், இனிய தமிழ் உரையாளர், சாகித்திய அகாதெமியின் இலக்கியச் செயல்பாடுகளை மக்கள் மன்றங்களுக்கு அழைத்துவந்த இலக்கியவாதி எனப் பன்முகப்பட்ட திறனாளுமையாகத் திகழும் கவிஞர் சிற்பி, வரும் ஜூலை 29 அன்று தனது 87ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கிறார்.

கவிஞரை வாழ்த்தி வணங்குவதில் பேருவகை கொள்கிறேன்.

- இன்னும் சொல்வேன்... ■

உலக சினிமா

தொடர் - 29

● கவிஜி

# தத்தளிக்கும் மானுடம்






**திரைப்படம் : The Shadow in My Eye (The Bombardment)**

எந்தச் சூழலிலும் போர் நாசத்தைத்தான் ஏற்படுத்தும். ஏற்படுத்தி இருக்கிறது. இன்றும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் வேறு ஒரு பக்கம் போட வேண்டிய வெடிகுண்டை இடம் மாற்றி ஒரு பள்ளி மீது போட்டுவிடுகிறார்கள். உள்ளே நடந்துகொண்டிருக்கும் நாடக ஒத்திகையில் ஈவிரக்கமின்றித் துர்மரணம் அரங்கேறுகிறது. யார் உள்ளே... யார் வெளியே.. யார் உயிரோடு.. யார் தப்பித்தார்கள் என்ற பதைபதைப்போடு கடைசி அரை மணி நேரம் நம் கண்கள் அறுபடுவதை உணர்கிறோம். மிக மெல்லிய கோட்டில் மானுட விசாரணைகள்... மனதுக்குள் நடத்தும் போராட்டங்கள்... போர்க்களங்களை விட மோசமான அனுபவங்களைத் தருபவை.

அழகான டென்மார்க் காட்டுப்பகுதி வெகு நேர்த்தியாக விரியத் துவங்க... ஹென்றி சைக்கிளைத் தள்ளிக்கொண்டு விசில் அடித்துக்கொண்டே செல்லும் முதல் காட்சியே கண்களை மலரச் செய்யும் அட்டகாசத்தை நமக்குள் கடத்தத் துவங்கும். அதே நேரம் ஒரு குடும்பம் ஒரு திருமணத்துக்குக் கிளம்பிக்கொண்டிருக்கும். அதைத் தொடர்ந்து அவர்களின் பயணத்தில் நிகழும் வன்மம்... அதைக் கண்ட சிறுவன் ஹென்றிக்கு நித்திரை இழக்கச் செய்கிறது. நிதானமும் அவனைக் கைவிடுகிறது.

போர்க்கால வன்மங்கள் கூட்டு முயற்சியில் கிளர்ந்து எழும் தனிமனித அயர்ச்சியாக அவனை ஊமையாக்கிவிடும்.

நிஜமாக நடந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம் என்று இணையம் சொல்கிறது. இதயம் இடிபடும் சம்பவங்கள் படத்தில் ஏராளம். போர்ச்சூழல் யாரையும்... யாரையும் ஒருபோதும் நிம்மதியாக இருக்க விடாது. அதிர்வில் மாட்டிக்கொண்ட ஹென்றி படம் முடியும் வரையில் வானம் பார்க்க அச்சப்படுகிறான். பேச்சு போய்விடுகிறது. மூச்சில் ஒவ்வொரு நொடியும் பயமும் பயங்கரமும்தான். ஹென்றியுடன் சேர்ந்து மூன்று சிறுமிகளின் வாழ்வும் தினமும் நம் முன்னே அச்சத்தோடு விரிகையில் ஜெர்மனியின் கட்டுப்பாட்டில்

இருக்கும் டென்மார்க் குடிமக்களின் மொத்த வாழ்க்கையும் நம் முன்னே கட்டுப்பாடுகளோடு ஒளிந்து ஒளிந்து விரிகிறது.

ஒரு போர் விமானம் தவறுதலாகப் பள்ளிக் கட்டிடத்தின் மீது முட்டி விழுந்துவிட... பின்னால் பறந்துகொண்டிருந்த மற்ற போர் விமானத்தில் இருந்தவர்கள் அந்தக் கட்டிடம்தான் நாஜி படையின் ஹெட் கோட்டர்ஸ் (டார்கெட்) என்று தவறுதலாக முடிவுக்கு வந்து குண்டு போட ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால் அது பள்ளிக்கூடம் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. போர்களின் கண்களில் எப்போது குருடு விழும் என்று எப்போதும் யாருக்கும் தெரியாது என்பதற்கு இதுதான் உதாரணம்.

நல்ல தேவையோ.... கள்ளத் தேவையோ... என்ன தேவையோ... அது எந்தத் தேவையின் அடிப்படையிலோ டென்மார்க்கில் இருக்கும் ஜெர்மனி நாஜி படையை நாசம் செய்யும் சித்து வேலையில் இறங்கும் பிரிட்டிஷ் குறி தவறி நிகழும் விபத்து ஒரு பள்ளியில் ஏற்படுவதுதான் கதை. நிஜமும்.

டென்மார்க்கை ஆக்கிரமித்த ஜெர்மனி அரசின் ஹெட் கோட்டர்சைப் போட்டுத் தாக்க வேண்டும் என்று வான்வெளி தாக்குதலில் ஈடுபடுகிறார்கள் பிரிட்டிஷ் ப்ளக்கர்ஸ்.

குறி தவறுதல் இயல்புதானே. ஆனால் தவறிய குறி எங்கு சென்று விழுகிறது என்று ஒன்று இருக்கிறதே. அது பள்ளிக்கூடம். உள்ளே இருக்கும் ஒவ்வொரு குழந்தையும்... அது எந்த நாட்டுக் குழந்தையாய் இருந்தால் என்ன... பலி ஆவதைப் போர் கால சகஜம் என்றா எடுத்துக்கொள்ள முடியும்? குண்டு வீச்சில் சிதிலமடைந்த கட்டிடம் என்னாகும்.. எப்படி நொறுங்கிக் கிடக்கும்.. உள்ளே இருந்தோர் மாட்டிக்கொண்டு உடல் நசுங்கிப் பேச்சிழந்து கை கால்கள் இழந்து மூச்சுக்குத் தவித்து இதில் வெளியே இருந்த பைப் உடைந்து நீர் உள்ளே சென்று என்று ஏக காலத்தில் எல்லாச் சாத்தான் வேலையும் அரங்கேறுகையில் நாம் கண்கள் பிசைந்து பார்த்துக்கொண்டிருப்போம். செய்வதறியாது எல்லாமும் நிகழ்த்திவிட்ட போர் வெறுமனே விட்டேத்தி மன்னிப்பைப் பிறகு கோரும். ஆனாலும் உள்ளே இறங்கிக் காப்பாற்ற முயற்சிக்கும் ஒரு போர்வீரன்... கடவுளாக நமக்குக் காட்சி அளிக்கிறான். உள்ளே குழந்தைகளோடு மாட்டிக்கொண்ட சிஸ்டர் தெரசா ஒரு டீச்சராகப் படும் வேதனையும் ஒரு சக மனுஷியாகக் கொள்ளும் பரிதவிப்பும் சக உயிர்களுக்குக் கொடுக்கும் நம்பிக்கையும் நம்மைப் போட்டுத் தாக்குகின்றன. உள்ளே மாட்டிக்கொண்ட ஒவ்வொரு குழந்தையும் தெரசா தெரசா.. என்று அழுதுகொண்டே கத்துவதை வார்த்தையில் சரியாகப் பொருத்திவிட முடியாது. அது உயிர் நோக்கும் உள் நோக்கிய படபடப்பு.

கிட்டத்தட்ட கதையின் நாயகி, அந்த சிஸ்டர் தெரசா ஒரு நன்னாக இருக்கும் ரிபெல் என்றுதான் புரிந்துகொள்கிறோம். அன்பைப் போதிக்கும் அவளின் அருகாமை எப்போதும் காதலால் நிரம்பி இருக்கிறது. இறுதியில் அவள் எடுக்கும் முடிவு கடவுளின் பிள்ளையில் இருந்து கடவுளாகவே அவளைக் காலம் ஆக்குகிறது. கடவுளைத் தேடிக்கொண்டே இருக்கும் அவளைக் கடவுளே கண்டடைவது என்று அந்தப் பாத்திரம் பாதி தேவதையாகவும் மீதி தாயாகவும் மாறிவிடுகிறது.

விபத்தில் இருந்து தப்பித்துக்கொண்ட ஹென்றி.. கட்டிடத் துகள்கள் உடலில் அப்பியபடி அங்கும் இங்கும் ஓடி அடிபட்டவர்களின் பெயர்களைச் சேகரிக்கையில் கண்ணீரை உதிர்த்துக்கொண்டே இருக்கும் அவன் கண்களில் ஆயிரம் வார்த்தைகள்.. லட்சம் கேள்விகள். அவன் பேசாமொழி பேசும் மொழியாக மாறுகையில் மொழியின் சூட்சுமம் வெடிகுண்டுகளால் நிரம்பி இருக்கிறது. ஏன் பேசுவதை நிறுத்திவிட்டுச் சண்டையிட ஆரம்பித்தோம் என்று ஏதேதோ கேள்விகள் சிதிலமடைந்த பூச்சுப் பவுடர்களின் தூசுப் படலத்தில் இருந்து எழுவதாகவே நம்புகிறேன்.

தங்கள் குழந்தை எப்படியாவது வெளியே வந்துவிடாதா என்று தப்பி வெளியே வரும் ஒவ்வொரு குழந்தையாகப் பார்த்துப் பரிதவிக்கும் அம்மா அப்பாக்கள் இதயங்களில் தொடர் குண்டுகள் வெடித்துக்கொண்டே இருப்பதாக நாம் உணர்கிறோம். நமக்குள்ளும்

வெடிச் சத்தம் மௌனமாய் எழும்புகிறது. குருதி தோய்ந்த ஒற்றைக்கல் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கிடக்கும் காட்சி... திரும்பத் திரும்பப் போரின் மூர்க்கத்தை மொத்தமாய்த் துப்புகிறது. அடிபட்டு இறந்து கிடப்பது தன் குழந்தையாக இருக்குமோ என்று பார்த்துப் பதட்டப்படும் 'ரிமோ'ரின் அம்மாவும் அப்பாவும் அது அவள் இல்லை என்று தெரிந்ததும் மெல்ல ஆசுவாசமடைந்து ஆனால் அதே நேரம் மீண்டும் அச்சத்துள் அடங்குவது செய்வதறியாத சிந்தனையின் வலி.

உள்ளே மாட்டிக்கொண்ட சிஸ்டர் தெரசாவோடு துக்கமும் துயரமுமாக மானுடமும் தத்தளித்துக்கொண்டிருப்பதாகத் தான் தோன்றுகிறது.


பசியின் பொருட்டு ஈவா பள்ளியை விட்டு வெளியேறிட ஏதேச்சையாக வராண்டா தாண்டிக்கொண்டிருக்கிறாள். அந்தத் தருணத்தில்தான் அந்தத் தவறான முதல் வெடிப்பு நிகழ்கிறது. அவளுக்குப் பின் சற்று தூரத்தில் நிகழும் அந்த வெடிப்பில் அவள் மாட்டிக்கொள்வதில்லை. மயிரிழையில் தப்பித்த அவள் மீது கட்டிடப் பூச்சுத் துகள்கள். அதிர்ச்சியா அசரீரியா ஒன்றும் தோன்றாத மனநிலையா.. இல்லை முன்பே வந்துவிட்ட பசியா? அங்கு என்னவோ நடக்கப்போகிறது என்பதைத் தவறாக வந்து மோதிய முதல் வெடிப்பிலேயே உணர்ந்துகொள்கிறாள். உணர்ந்துகொண்டாளா.. அப்படியே வீடு நோக்கி நடக்க ஆரம்பித்துவிடுகிறாள். இறுதிக்கும் இறுதியாக... விபத்தின் ஆரம்பத்திலேயே வெளியேறிவிட்ட அந்தச் சிறுமியின் பசி அவளை வீடு நோக்கித் தள்ளிவிட்டிருப்பதை உணர்கையில் படம் முடிந்துவிடுகிறது. ஆனால் பாதிப்பு இன்னமும் முடியவில்லை. அது தீராச் சோகத்தை ஒவ்வொரு வீட்டிலும் வளர்த்துக்கொண்டுதான் இருக்கிறது. ஈவாவின் அதிர்வுகள்.. நடந்துகொண்டிருப்பது என்ன என்று புரியாமல் அவள் பாடும் பாடலின் அலைவரிசை என்று அவளே இந்தக் கதையின் அந்தியும் ஆதியுமாக இருக்கிறாள்.

பசி கொண்ட சிறுமி ஈவா பாதியில் வெளியேறியது குறித்தான தெளிவு வேண்டி... அப்படியா அது அப்படி இருந்தால்... இருக்க வேண்டுமே.. என இறுதிக் காட்சியில் அந்தத் தாயின் நடையும் ஓட்டமும் கேமரா பின்னோக்கியே வீடு வரை நகர, நாம் அந்தத் தாய்க்கு முன்பாக ஓடிக்கொண்டிருப்போம். அழுகையும் சிரிப்புமாக புள்ள உயிரோடதான் இருக்கு போல... என்பதாக மனதில் பிசைந்து உருளும் உயிரைப் பிடித்துக்கொண்டு ஈவாவின் தாய் வீடடைகையில் நமக்கும் மூச்சு வாங்குகிறது. இந்த நெடு நீண்ட ஷாட்டின் இறுதியில் வெடித்து அழும் அந்தத் தாயின் கண்ணீரில் அப்பப்பா நமக்கும் கூட ஆசுவாசம்.

எரியும் கட்டிடத்துக்கு முன் செய்வதறியாமல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கும் பெற்றோர்கள்... இந்தப் போர்களின் சாட்சி. அவர்கள் தலையுமற்ற வாலுமற்ற நிர்பந்தங்கள். சொற்கள் அற்ற பெரும் துயரம் மரணங்களை வெகு சுலபமாக நிகழ்த்திவிடுகிறது. மாண்டவர் போக மீண்டவரின் மனதுக்குள் அனுதினமும் வெடிக்காத அணுகுண்டுகள். புழுதி படிந்த முகத்தோடு வானத்தை வெறித்துப் பார்க்கும் ஈவா இந்தக் கதையின் மொத்தக் குறியீடு. முட்டாள்தனமான போரின் அடையாளம் என்றும் சொல்லலாம்.

குழந்தைகளைப் பலி கொடுப்பதும் பறி கொடுப்பதும் போலொரு குற்ற உணர்ச்சிக்குள்ளாகும் செயல் உலகில் வேறுண்டோ. அதுவும் யாரோ செய்யும் என்னவோ கோமாளித்தனத்திற்கு... அது விபத்தென்றாலும் தன் பிள்ளையைச் சாகக் கொடுக்க யாருக்கு மனசு வரும்? வெறி ஏறிய அழுகையின் ஆற்றாமையைக் காலம் காலமாகப் போர்கள் நிகழ்த்திக்கொண்டே இருப்பதை எப்படி பார்ப்பது..

போரின் ஆரம்பம் வேண்டுமானால் அதிகார வர்க்கத்தின் அட்டாசிட்டியில் ஆரம்பிக்கலாம். அதன் முடிவு சாதாரண மனிதனின் வீதியில் ஒரு சொரணையற்ற நாயாகவே செத்துக் கிடக்கும். அது தொடர் துயரத்தின் ஆகிருதி.



**இயக்குநர் : Ole Bornedal**
**ஆண்டு : 2021**
**மொழி : டேனிஷ்**

தி.கலையரசி

மதில் மேல் பூனையாகி
ஏன் நிற்கிறாய்?
உன்னைச் சுற்றிலும் நான்தானே
சூழ்ந்திருக்கிறேன்
**
உன் முகம் பதித்த
என் மனக்கண்ணாடியை
போட்டுடைத்துவிட்டாய்
சில்லுகளில் பெருகியிருக்கும்
உன் பிம்பங்களை
என்ன செய்யப்போகிறாய்?
*




நீ பாடலில் ஒளிந்திருக்கிறாய்
எந்த ராகம்
உன் திறவுகோல்?
*
உன் நினைவுகள் சருகானது
அதில் கூடுகட்டி வசிக்கிறேன் நான்
*
என் கடவுள் நம்பிக்கையோடு
சாத்தான்
சண்டையிடும்போதெல்லாம்
உன்னைக் காதலிக்கத்
தொடங்கிவிடுகிறேன்.
*
என் பாவ புண்ணியக் கணக்குகள்
பிழையாகும்போது
காதலை வைத்துக்
கரையேறிக்கொள்கிறான்
காலதேவன்
*
தூரிகை நீ என்பதற்காக
நிறங்களைப் பறித்துக்கொள்வது
சரியா?
*
எரிகின்ற காதலில்
கண்ணீரை ஊற்றாதே
மேலும் பற்றி எரிவேன் நான்
*
கடற்கரையிலும் பாலைவனத்திலும்
பதியும் என் தடங்கள்
ஒரே மாதிரியாகத்தான்
தெரிகிறதா உனக்கு?
*
என் சரியை நீ ரசி
உன் பிழையை நான் ரசிக்கிறேன்
முரண்களின் சம்மதம்
இந்தக் காதல்

தொடர் - 4

பச்சைய பாத்திரம்

● கோ.லீலா



# தீ சூழலியல்

பச்சைய பாத்திரம் அய்ந்து பூதங்களால் ஆனது... ஆம் இதோ தொல்காப்பியப் பாடல் சொல்வதைப் படியுங்களேன்.

நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்

திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்

நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் ஆகிய அய்ந்து பூதங்களால் ஆனதுதான் பூமியெனும் பச்சைய பாத்திரம்.

இந்த அய்ந்தில் ஒன்று சீர்குலைந்தாலும் பச்சைய பாத்திரம் உருக்குலையும்... மனிதர்களின் வாழ்வும் கேள்விக்குறியாகும்.

நீர், நிலம் பற்றி அதிகம் பேசுகிறோம். ஆனால் தீ, காற்று, ஆகாயம் பற்றி அதிகம் பொதுமக்களிடையே விவாதம் இல்லை. எனினும் துறை சார்ந்த நிபுணர்களும், சூழலியலாளர்களும் தொடர்ந்து காலநிலை மாற்றத்திற்குக் காரணமான தீ, காற்று, ஆகாயம் பற்றிய விவாதம், ஆராய்ச்சியென மேற்கொண்டு வருகிறார்கள்.

இன்று, தீ சூழலியல், தீயினால் ஏற்படும் மாசு, தீர்வுகள் பற்றித்தான் பார்க்கப் போகிறோம்.

தீ சூழலியல் என்றால் என்ன?

தீ சூழலியல் என்பது சுற்றுச்சூழலின் ஒரு பிரிவாகும். இது காட்டுத் தீயின் தோற்றம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலுடனான உறவு, உயிருள்ள மற்றும் உயிரற்ற இரண்டிலும் கவனம் செலுத்துகிறது.

ஒரு காட்டுத் தீ என்பது இயற்கையான சூழலில் எரியும் தீ என வரையறுக்கப்படுகிறது.

தீ சூழலியல் வல்லுநர்கள் தீ என்பது ஒரு இயற்கையான செயல்முறை என்பதை அங்கீகரிக்கிறார்கள். மேலும் அது அடிக்கடி ஏற்படும் சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகச் செயல்படுகிறது.

தீ சூழலியலில் பார்க்கப்படும் முக்கிய காரணிகள் தீ சார்பு, தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தழுவல், தீ வரலாறு, தீ ஆட்சி மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளில் தீயினால் ஏற்படும் விளைவுகள்.

**தீ சார்பு**

1930களில், அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் நெருப்பைச் சூழ்ந்துள்ள எதிர்மறையான கண்ணோட்டத்தோடு எல்லா நெருப்பும் கெட்டது என்று வாதிட்டனர்.

பெரிய அளவிலான தீயால் வரையப்பட்ட பேரழிவுப் படம் பொதுமக்களின் மனதில் (மற்றும் அரசியல்வாதிகள் மற்றும் விஞ்ஞானிகளிடையே) அச்சத்தை உருவாக்கியது. மேலும் காட்டுத் தீயினைப் போன்று எல்லாத் தீயும் தீங்கு விளைவிக்கும் என்பது உணரப்பட்டது.

மீளுருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்குச் சுற்றுச்சூழலை அதிகம் போற்ற, நெருப்பின் விளைவுகளை நம்பியிருக்கும் தாவர வகைகள் உள்ளன என்பதை இந்த ஆராய்ச்சியாளர்கள் அங்கீகரித்துள்ளனர்.

இந்தச் சூழல்களில் உள்ள நெருப்பு, திறந்த விதைப்பாதையை உருவாக்குவதன் மூலம் மண்ணை விதைப்பதற்குத் தயார்படுத்துகிறது. அதாவது மண்ணிற்கு அடியில் உள்ள தாதுக்கள் மற்றும் ஊட்டச்சத்துக்களை இவை இளகச் செய்து உறிஞ்சுவதற்கு அதிக அளவில் கிடைக்கச் செய்கிறது.

மேலும், பெரும்பாலும் வாழ்விடத்திற்குள் ஊடுருவி, பூர்வீக இனங்களுடன் போட்டியிடும் தாவரங்களை அழித்துவிடும்.

**தீ வரலாறு**

ஒரு புவியியல் பகுதியில் எத்தனை முறை தீ விபத்துகள் நிகழ்ந்தன என்பதைத் தீ வரலாறு விவரிக்கிறது.

பதிவுசெய்யப்பட்ட வரலாற்றின் மூலம், சமீபத்திய கடந்த காலத்தை நாம் பார்க்கலாம். ஆனால் தொலைதூரக் கடந்த காலத்தில் ஏற்பட்ட தீ பற்றிய தகவல்களின் ஆதாரமாக மரங்கள் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் மரங்களில் வளரும் வளையங்களின் அமைப்பு மூலம் மரங்கள் தங்கள் வரலாற்றைப் பதிவு செய்கின்றன. நெருப்பு ஒரு பகுதி வழியாகச் செல்லும்போது, அந்தக் குறிப்பிட்ட மரத்தின் வளர்ச்சி வளையங்கள் வடுவாக இருக்கலாம். உயிருள்ள மரங்களில் இது தீ வடு என்று அழைக்கப்படுகிறது. இறந்த மரங்களிலும் தீ வடுக்கள் காணப்படுகின்றன.

மரத்தின் தோற்றம் தேதிகள் (ஒட்டுமொத்த வளையங்களின் எண்ணிக்கையிலிருந்து கணக்கிடப்படுகிறது) தீ எப்போது ஏற்பட்டது என்பதையும் சொல்ல முடியும். அந்தத் தீ இந்தப் புதிய மரங்கள் உருவாக வழிவகுத்தது.

வளர்ச்சி வளையங்களைப் பற்றிய ஆய்வு டென்ட்ரோக்ரோனாலஜி என்று அழைக்கப்படுகிறது.

டென்ட்ரோக்ரோனாலஜியைப் பயன்படுத்தி, கடந்த காலத்தில் தீ எப்போது ஏற்பட்டது என்பதை நாம் தீர்மானிக்க முடியும். மேலும் சில சமயங்களில் அவற்றின் தீவிரம் மற்றும் திசை மற்றும் அந்தச் சகாப்தத்தின் வானிலை முறைகள் பற்றிய பிற தகவல்களைத் தீர்மானிக்க முடியும்.



**தீ ஆட்சி**

தீ ஆட்சி என்பது நீண்ட காலத்திற்கு ஏற்படும் தீயின் வடிவங்களையும், அது நிகழும் சுற்றுச்சூழல் அமைப்பில் ஏற்படும் தீயின் உடனடி விளைவுகளையும் குறிக்கிறது.

தீ ஆட்சியை வரையறுக்க பல வழிகள் உள்ளன. தீ ஆட்சி என்பது தீ நிகழ்வுகளின் அதிர்வெண், தீயின் தீவிரம் மற்றும் நுகரப்படும் எரிபொருளின் அளவு ஆகியவற்றின் செயல்பாடாகும்.

அதிர்வெண் பெரும்பாலும் சுற்றுச்சூழலின் பண்புகள், காலநிலை மற்றும் காலநிலையின் தன்மை (பருவம் இயல்பை விட வறண்டதாக இருந்தாலும் அல்லது ஈரமாக இருந்தாலும் சரி) மற்றும் பற்றவைப்பு மூலங்களால் தீர்மானிக்கப்படுகிறது.

தீயின் தீவிரம் கிடைக்கக்கூடிய எரிபொருளின் அளவு, எரிபொருளின் எரிப்பு விகிதம் மற்றும் தற்போதுள்ள வானிலை நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகிறது. அதிர்வெண் மற்றும் தீவிரத்தன்மைக்கு இடையிலான தொடர்புகள் காற்று, நிலப்பரப்பு மற்றும் தீ வரலாறு ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன.

தீ ஆட்சிகளைப் பற்றிப் பேசும்போது பல காரணிகள் செயல்படக்கூடும். இருப்பினும் இந்த எளிய வரையறை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வேலை செய்யும்.

### தீக்கான காரணங்கள்

சில வானிலை தானாகவே காட்டுத் தீயை ஏற்படுத்துகிறது. ஆனால் மனித நடவடிக்கைகள் நிலைமையை இன்னும் மோசமாக்குகின்றன.

எடுத்துக்காட்டாக, காடுகளுக்குத் தீ வைக்கும் வழக்கமான இயற்கை சக்திகள் பின்வருமாறு:

அதிக வெப்பநிலை உலர்ந்த புல், இலைகள், டிரங்குகள் அல்லது பைன் தார் ஆகியவற்றின் எரியக்கூடிய தன்மையை உயர்த்துகிறது.

பலத்த காற்று காட்டுத்தீ பரவுவதை வேகப்படுத்துகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் வறட்சிகள் தீவிரமடைந்து காட்டுத் தீ பருவங்களை நீடிக்கின்றன, குறிப்பாக அமேசான் படுகையில்.

மின்னல் உலர்ந்த காடுகளில் பற்றவைப்பைத் தூண்டுகிறது.

கடந்த தசாப்தத்தில் ஏறத்தாழ 90% தீ விபத்துகள், அலட்சியம், விபத்து அல்லது வேண்டுமென்றே தீ வைப்பதன் மூலம் மனிதனால் ஏற்பட்டவை. விபத்துகள் மற்றும் கவனக்குறைவான செயல்களால் ஏற்படும் தீ விபத்துகளில் சில, கவனிக்கப்படாத தீப்பொறிகள், பொறுப்பற்ற முறையில் தூக்கி எறியப்பட்ட சிகரெட்டுகள் மற்றும் எரியும் குப்பைகள். மீதமுள்ள 10% தீ மின்னல் தாக்குதல்களால் ஏற்படுகிறது.

எனவே, காட்டுத்தீயைத் தடுப்பதில், இயற்கைக் காரணிகளால் ஏற்படும் காட்டுத்தீ அபாயங்களை அறிந்துகொள்வது அவசியம். வழக்கமான நடவடிக்கைகளைத் திட்டமிடும்போது மற்றும் காட்டுத்தீ ஏற்படுவதைத் தடுப்பது எப்படி என்று சிந்திக்கும்போது, தற்போதைய மற்றும் வரவிருக்கும் வானிலை மற்றும் காடுகளுக்கு அவற்றின் ஆபத்தை வனத்துறையினர் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதிக வெப்பம் அல்லது காற்று வீசும்போது, வேலை செய்யும் கருவிகள் அல்லது வாகனங்களில் இருந்து வரும் பிரகாசங்கள், காய்ந்த புல் அல்லது இலைகளைப் பற்றவைத்து, காற்றின் காரணமாகப் பெரிய பிரதேசங்களுக்குத் தாவலாம். இதனால் காட்டுத் தீ ஏற்படுகிறது. காட்டுத்தீயின் சிக்கல் என்னவென்றால், அவற்றைக் கண்டறிவது, நோக்கத்தைப் புரிந்துகொள்வது மற்றும் தொலைநிலை உணர்திறனைத் தவிர மற்ற நடவடிக்கைகளை எடுப்பது எப்போதும் சாத்தியமில்லை. ரிமோட் சென்சிங் போன்ற தொழில்நுட்பங்கள் இதற்கு உதவக்கூடும்.

## காட்டுத் தீயின் நன்மைகள்/தீமைகள்

### பலன்கள்:

காட்டுத் தீயின் சுற்றுச்சூழல் நன்மைகள் பெரும்பாலும் அவற்றின் எதிர்மறை விளைவுகளை விட அதிகமாக இருக்கும்.

வழக்கமான தீ விபத்துகள், எரிபொருளின் அளவைக் குறைக்கலாம். இதனால் பெரிய காட்டுத் தீ ஏற்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கலாம்.

நெருப்புகள் பெரும்பாலும் ஊட்டச்சத்துக்கள் மற்றும் இடத்திற்காகப் பூர்வீக இனங்களுடன் போட்டியிடும் அந்நிய தாவரங்களை அகற்றுகின்றன. மேலும் சூரிய ஒளியை வனப்பகுதியை அடைய அனுமதிக்கும் அடிவளர்ச்சிகளை நீக்குகிறது. இதன் மூலம் பூர்வீக உயிரினங்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

நெருப்புக்குப் பிறகு எஞ்சியிருக்கும் சாம்பல் மரங்கள் மற்றும் பிற தாவரங்களுக்கு

மண்ணில் பழைய தாவரங்களில் பூட்டப்பட்ட ஊட்டச்சத்துக்களைச் சேர்க்கிறது.

வயதான அல்லது நோயுற்ற மரங்களை அழித்து, இளைய ஆரோக்கியமான மரங்களை விட்டுவிடுவதன் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழியையும் தீ வழங்கலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நன்மைகளுக்கும் கூடுதலாக, எரிந்த மரங்கள் பறவைகள் கூடு கட்டுவதற்கான வாழ்விடத்தையும், பாலூட்டிகளுக்கான வீடுகளையும், புதிய தாவரங்களுக்கான ஊட்டச்சத்துத் தளத்தையும் வழங்குகிறது.

இந்த மரங்கள் அழுகும்போது, அவை இன்னும் அதிகமான ஊட்டச்சத்துக்களை மண்ணுக்குத் திருப்பித் தருகின்றன. ஒட்டுமொத்தமாக, உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கு நெருப்பு ஒரு ஊக்கியாக உள்ளது.

இது புதிய தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கிறது மற்றும் வனவிலங்குகளின் மக்கள்தொகை பெரும்பாலும் இதன் விளைவாக விரிவடைகிறது.

**தீமைகள்:**

நெருப்பு மண் சேதத்தை ஏற்படுத்தும். குறிப்பாக குப்பை அடுக்கில் எரிப்பு மற்றும் மண்ணில் உள்ள கரிமப் பொருட்கள்.

இந்தக் கரிமப் பொருள் மண் அரிப்பிலிருந்து பாதுகாக்க உதவுகிறது. கரிமப் பொருட்கள் தீவிரமான தீயினால் அகற்றப்படும்போது, அரிப்பு ஏற்படலாம். கடுமையான தீயினால் ஏற்படும் வெப்பம் மண் துகள்களை ஹைட்ரோபோபிக் ஆகவும் ஏற்படுத்தலாம்.

மழைநீர் ஊடுருவுவது குறைந்து மேல்பரப்பு நீராக ஓடுகிறது. இதுவும் மண் அரிப்பை ஏற்படுத்தும். உண்மையில், மண்ணில் ஏற்படும் தீயினால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகள் பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்டவை. மேலும் மேற்கு அமெரிக்கக் காடுகளில் ஏற்படும் பல தீவிரமான தீயினால் சிறிய மண் சேதம் ஏற்படுகிறது.

முன்னர் பாதிக்கப்படாத பகுதிகளில் தீப்பிடித்த பிறகு அந்நிய தாவரங்கள் விளையும் சாத்தியமும் உள்ளது.

**தீயை அடக்குதல்/விலக்குக் கொள்கைகள்**

தாவரங்களின் கலவை மற்றும் கட்டமைப்பில் தீ-விலக்குக் கொள்கைகளின் விளைவு கணிசமாக வேறுபடுகிறது (ஸ்மித் மற்றும் பிஷ்ஷர் 1997).

சில காடுகளில் சிறிய மரங்களின் அடர்ந்த காலுறைகளை (stocking) வளர்ப்பதற்கும், அந்தப் பகுதிகளில் தற்போதைய தீ தீவிரத்திற்கு அதன் பங்களிப்பு குறித்தும் கணிசமான அளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வறண்ட தாவரச் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு இது பொதுவாக உண்மையாக இருந்தாலும், பல ஈரமான மற்றும் குளிர்ந்த காடுகளுக்கு இது எப்போதும் பொருந்தாது.

காடு இல்லாத பகுதிகளுக்கும் இது பொருந்தாது. தீயின் அதிர்வெண் வரலாற்று ரீதியாக ஒரு குறிப்பிட்ட சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள தாவர வகையைப் பொறுத்து கணிசமாக மாறுபடும். 1911இல் நிறுவப்பட்ட காட்டுத்தீயை அடக்கும் கொள்கைகளின் சூழலியல் விளைவுகளும் தாவர வகையைப் பொறுத்து வேறுபடுகின்றன.

காட்டுத்தீயைக் கட்டுப்படுத்துவது எப்படி?

அடுத்த பகுதியில் காண்போம். ■

அம்மையார் ஹைறுநான் பீவி
சிறுகதைப் போட்டி

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

நெய்வேலி பாரதிகுமார்
ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்



# குருத்து அகம் விரித்து

'பூம்' என்று ஒரு சத்தம் கேட்டதே தவிர என்ன நடக்கிறது என்பதை யோசிக்கும் முன் தீயின் நாக்குகள் எழும்பித் தற்காலிகக் கூரையைத் தொடுவதற்காக சினம் கொண்ட பாம்பின் சீற்றம் போல ஆங்காரத்துடன் ஆடின. மேல் துண்டும் வேட்டியும் பற்றி எரிவதைக் கூட சற்று தாமதமாகவே உணர்ந்துகொண்ட முருகேசனை என்ன ஏது என்று யோசிப்பதற்குள் கையில் அகப்பட்ட படுதாவை எடுத்து அவன் மேல் போர்த்தித் தரையோடு தரையாக உருட்டினான் கோவிந்து. அதற்குள்ளாக நெருப்பின் நீள்கரங்கள் முருகேசன் உடலில் பெரும்பகுதியைக் கருக்கி இருந்தன. முருகேசன் மூர்ச்சையாகினான்.

அதிகாலை மூன்று மணி என்பதால் கூட்டம் எதுவும் சேரவில்லை. சமையலுக்காகக் கூட இருந்த ஆட்கள் திபுதிபுவென முருகேசனைச் சுற்றிக் குழுமினர். கொஞ்சம் பேர் நெருப்பை அவசரம் அவசரமாக அணைக்கப் போராடினர். பரிமாறுவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஆட்கள் சமையல் கூடத்தை விட்டுத் தள்ளி வெகு தூரத்தில் படுதா விரித்து அசந்து தூங்கிக்கொண்டிருந்தனர். சமையல் கூடத்துக்கு வெளியே நாற்காலிகளை வரிசை கட்டிப்

போட்டு அதில் கண்ணசந்து இருந்த தம்பண்ணா நெருப்பு எரிவதைப் பார்த்துப் பதட்டத்துடன் எழுந்து சமையலறைக்கு ஓடி வந்து கல்லையும் மண்ணையும் அள்ளிப்போட்டுத் தீயை அணைக்க முயற்சித்தார்.

"என்னடா ஆச்சு?" எதிர்பட்டவனைக் கேட்டார்.

"எலை முருகேசனுக்குத் தீ புடிச்சிக்கிச்சு.. அங்க போங்கண்ணே."

பெரும் சரீரத்தை தூக்கிக்கொண்டு நெருப்பில் பட்டுவிடாமல் ஜாக்கிரதையாக நடந்து முருகேசன் அருகே மூச்சிரைக்க வந்து நின்றார். நெருப்பு அணைக்கப்பட்டாலும் அவனது தீய்ந்த தோலும் வெந்து சிவந்த காயங்களும் தம்பண்ணாவை உலுக்கின.

"டேய் முருகேசா என்னடா ஆச்சு.. எப்படிடா ஆச்சு.. "

பொலபொலவெனக் கண்ணீர் விட்டு அழுதார் தம்பண்ணா.

"தள்ளிப் போங்கண்ணே.. அழுதா ஆறிடுமா நவுந்து நில்லுங்க.. கோயிந்து போயி 407ஐ வரச்சொல்லு.. தனசேகரு வண்டிக்கு உள்ளதான் தூங்கிக்கிட்டு இருப்பான்.. ஃபோன் கெடைக்கலை.. போவும்போது ரெண்டு பெட்ஷீட்டை எடுத்துட்டுப் போயி பின்னால விரிச்சுப் போடு."

பரபரவென மேற்கூரையையும் பக்கவாட்டில் கட்டி இருந்த ஷாமியானா துணிகளையும் அகற்றினான் பத்து.

"எலை முருகேசனுக்கு எண்ணெய் சட்டியிலே என்னடா வேலை? டேய் தாஸ் ஒன்னைத்தானடா வடை சட்டி போடச் சொன்னேன்?"

"நான்தாண்ணே போட்டுக்கிட்டு இருந்தேன்.. எத்தனை நாளைக்கு எலை முருகேசனாவே இருக்கிறது.. இன்னிக்கு நா வடை போடறேன். நீ நவுருன்னு வம்படியா என்னை நவுத்திட்டான்."

"இப்ப போன கதை எதுக்கு? விடுங்கண்ணே.. யாரும் அவசரப்பட்டு இப்ப அவனைத் தூக்க வேணாம். வண்டி வந்துரட்டும். பின்னாலே பெட்ஷீட், வேஷ்டியை எல்லாம் போட்டுட்டு அப்புறமா நெதானமா தூக்கி அதுல படுக்க வச்சிக்கலாம். நவுருங்க.. நவுருங்க.. அவனுக்குக் காத்து வரட்டும்.. செல்ராசு ஓடிப்போயி மளிகை சாமான் பொட்டியிலே தேன் பாட்டில் இருக்கும் எடுத்துட்டு வா.. சும்மா பேக்காண்டி மாறி நிக்காதே.. ஓடு" பத்து பரபரப்பாகக் கட்டளைகளைப் பிறப்பித்தான்.

தெறித்து விழுந்திருந்த எண்ணெய், வாணல் துடுப்பு, மாவுச்சிதறல்கள் எல்லாவற்றையும் பெருமாள் எடுத்து இடத்தைச் சுத்தம் செய்துகொண்டு இருந்தான்.

"ஆம்புலன்ஸ்க்கு சொல்லிறலாம் பத்து."

"வேணாம் அது வரதுக்குள்ளே நாம 407லேயே போயிறலாம். ஆம்புலன்ஸ் அடப்பா இருக்கும். காத்து வராது.. நம்ம வண்டியிலேயே போயிறலாம்."

செல்வராஜ் தேன் பாட்டிலை எடுத்து வர அதை கையில் வாங்கி மிகக் கவனமாக முருகேசனின் உடலில் இருந்த தீக்காயங்கள் மீது தடவினான் பத்து.

"ஊணான் எறும்பு சுத்தீரும் உலாத்திக்கிட்டு இருக்கு. நீ பாட்டுக்குத் தேன் எடுத்துப் பூசுறே" பதறினான் பன்னீர்.

"அது பாக்கத்தான் ஆனை மாதிரி... அதும்பாட்டுக்கு பூனை கணக்கா போயிட்டே இருக்கும். ஒண்ணும் பண்ணாது," சொல்லியபடியே முருகேசனின் காயங்கள் மேலே இன்னும் தடவினான் பத்து.

லேசாகக் கண் விழித்து உடலை அசைத்தான் முருகேசன். சப்தம் வராமல் சூழலுக்குச் சற்றும் பொருந்தாமல் தீயே உனக்கொரு நாள் தீ மூட்டிப் பாரோமோ என்று எதையோ நினைத்துக்கொண்டு முருகேசனின் உதடுகள் முணுமுணுத்தது முருகேசனுக்கே சற்று வெறுப்பாகத்தான் இருந்தது. தீயின் உஷ்ணமோ, காயங்களின் எரிச்சலோ இன்னும் முருகேசனுக்கு உறைக்கவே இல்லை.. அவ்வப்போது தம்பண்ணா திட்டியது போலச்

சூடு சொரணையற்ற ஜென்மம்தானோ? என்று அவனுக்கே தோன்றியது.

பத்து அவன் வலியில் முனகுவதாக நினைத்து அவன் காதுக்கு அருகே குனிந்து "முருகேசா.. கொஞ்சம் பொறுத்துக்கோ.. அந்தோமா ஒருக்களிச்சுத் திரும்பிப் படு.. மொள்ள மொள்ள.. இந்தா வண்டி வந்துரும்.. வந்ததும் ஆசுவத்திரிக்குச் சட்னா போயிடலாம்.. ஒண்ணும் வெசனப்படாதே.. எல்லாம் செரியாயிடும்"என்று ஆசுவாசப்படுத்தினான்.

புல்லட் மணியின் வண்டிச்சத்தம் கேட்டது. தம்பண்ணாதான் போன் செய்து சொல்லி இருந்தார். தற்காலிகச் சமையல் கூடத்துக்கு அருகில்தான் மாநாட்டுப் பந்தலில் மணி இருந்தார். விடிந்தால் மாநில அளவிலான கட்சி மாநாடு. தில்லியில் இருந்து காசிராஜ் தாக்கர் கலந்துகொள்வதால் பெரிய அளவில் எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருந்தார் மணி என்கிற தெய்வசிகாமணி. எப்பொழுதும் காரில் செல்வதை விட அவருக்கு உவப்பான புல்லட்டில் எங்கும் பயணிப்பதால் 'புல்லட் மணி' என அவரது திருநாமம் பரவிவிட்டது.

"சிலிண்டர் ஏதாச்சும் வெடிச்சிடுச்சா?"

"இல்லை தலைவரே.. வடைக்கு எப்பவும் வெறகு அடுப்புதான் நாம வைக்கிறது. சிலிண்டர் ஓரமா அப்படி இருக்கு பாருங்க.. என்னாச்சுன்னு தெரியலை. எண்ணைச் சட்டி குப்புன்னு பிடிச்சிக்கிட்டுக் காடாத் துணிங்க பத்திகிச்சு.. அதுல இவனுக்குத் தீக்காயம்."

"இன்னும் எத்தனை பேருக்கு அடிபட்டிருக்கு?"

"நல்லவேளை பக்கத்துலே யாரும் இல்லை.. அதனால வேற யாருக்கும் அடிபடலை.."

"அப்பா.. நல்ல வேளை.. இவன் பேரு?"

"இலை முருகேசன்.. இலைங்கறது பட்டப்பேரு தலைவரே புல்லட் மணி மாதிரி."

புல்லட் மணி கடுப்பாகத் தம்பண்ணாவைப் பார்த்தார். வேறொரு சமயமாக இருந்தால் காய்ச்சி இருப்பார். புல்லட்டும் இலையும் ஒண்ணாய்யா அப்படின்னு விழுந்து பிடுங்கி இருப்பார். ஆனால் இப்ப நேரம் சரியில்லை. எதுவும் திட்ட முடியாது. 407 வண்டியைப் பின்னால் ஏற்றுவதற்கு வசதியாக தனசேகர் ரிவர்ஸில் எடுத்து வந்துகொண்டிருந்தான்.

"எதுக்கு உள்ளே இந்த வண்டி வருது?"

"பக்கத்துலே 24 மணிநேர ஹாஸ்பிட்டல் இருக்காமே, அங்கதான் போலாமுன்னு.."

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம்.. விஷயம் லீக் ஆயிடுச்சுன்னா அவ்வளவுதான். பத்திரிகைக்காரனுங்க ஊதி ஊருக்கெல்லாம் உலை வச்சிடுவானுங்க.. எவனாச்சும் கேமராவோட இங்க வந்தானா?"

"இல்லை தலைவரே.. ஆனா காயம் அதிகமா இருக்கு. ஹாஸ்பிட்டலுக்குப் போகலைன்னா பிரச்சினையா போயிடும்."

"மாநாடு முடியற வரைக்கும் ஒரு அசம்பாவிதமும் நடக்கக்கூடாதுன்னு ஊர்லே உள்ள சாமியை எல்லாம் வேண்டிக்கிட்டு இருக்கேன்.. அந்த ஆளு தாக்கர் வேற செண்டிமெண்ட்டுக்குப் பொறந்தவன்யா.. எங்க போனாலும் காரை வலப்பக்கமா நிறுத்தி எறங்கி அப்புறம் பார்க்கிங்லே கெழக்கு மேற்கா நிறுத்தச் சொல்வானாம்.. இந்த விஷயம் தெரிஞ்சுதுன்னு வச்சிக்க.. அப்புறம் சகுனம் சரியில்லை அது இதுன்னு மொறைச்சிக்கிட்டுப் போயிடுவான். தம்பு.. ஒங்ககிட்ட சொல்றதுக்கு என்ன? நேஷனல் லெவல்ல ஒரு பெரிய போஸ்ட் கெடைக்கும்னுதான் நம்ம ஊர்லே நடத்தறேன்னு வம்படியா கட்சியிலே கேட்டு வாங்கி சொந்தக்காசை எறைச்சி செலவு பண்ணிக்கிட்டு இருக்கேன்.. ஏதாச்சும் கொழப்பி வுட்றாதே."

"அதுக்காவ அடிபட்டவனுக்கு வைத்தியம் பண்ணாமே இருக்க முடியுமா?" கோபமாகக் கேட்டான் பத்து.

"தம்பி வைத்தியம் பண்ண வேணாம்னு யாரு சொன்னது? ஆஸ்பத்திரியிலே வேணாம்யா.. நம்ம பருப்பு மண்டிக்குக்

கொண்டுகிட்டுப் போங்க. அங்க டாக்டரை வர வைக்கறேன்.. டாக்டர் என்ன கேக்கறாரோ அது அங்க வரும். கவலைப்படாதே. ஆஸ்பத்திரி அது இதுன்னு களேபரம் வேணாம்னு சொல்றேன்.. புரியுதா?"

வெளியில் நின்றிருந்த நபரை அழைத்தார். "மாரி.. நீ இந்த வண்டியிலே இவங்க கூட போயி நம்ம பருப்பு மண்டி ஆபீஸ் ரூம் இருக்கில்லே அங்க கட்டிலைப் பிரிச்சிப்போட்டுப் படுக்கவை."

"தம்பு.. டாக்டர் அங்க வருவாரு. உங்க ஆளுங்களை இதுலே கூட்டிக்கிட்டு அங்க போகச்சொல்லு.. மிச்சத்தை அப்புறம் பேசிக்கலாம்.. விஷயம் வேற யாருக்கும் தெரியக்கூடாது.. கெளம்புங்க."

சொல்லிவிட்டு போனில் டாக்டரைத் தொடர்புகொண்டார். பின்னர் தம்பண்ணா காதில் ரகசியமாக... "சொந்தம் பந்தம்.. சாதிசனம்னு யாராச்சும் வந்தா.."

"அவனுக்கு எல்லாமே நாந்தான்."

"சரி பாத்துக்கங்க.. எவ்வளவு செலவானாலும் நான் தரேன். பாத்துக்கலாம்."

புல்லட் மணி சுபாவத்தில் நல்ல மனுஷன். சொன்னபடி செய்யக் கூடியவர். தம்பண்ணா கையில் கொஞ்சம் பணத்தைத் திணித்தார்.

தம்பண்ணாவுக்குச் சொந்த ஊர் பண்ருட்டிக்கு அருகில் திருவதிகை என்றாலும் கடலூர் மாவட்டம் முழுக்க எல்லோராலும் அறியப்பட்ட புகழ்பெற்ற சமையற்காரர். பக்கத்து மாவட்டங்களான விழுப்புரம், மயிலாடுதுறை, அரியலூர் வரை அவரது பெயர் பிரபலம். எத்தனை நபர்கள் கலந்துகொள்ளும் விழா என்றாலும் அவருக்குப் பொருட்டே இல்லை. அதைவிட அறிவிக்கப்படாத வேலைவாய்ப்பு அலுவலகம் அவருடையது. எப்பொழுது யார் போய்க் கேட்டாலும் அவரிடம் வேலை காலி இருக்கும். கல்யாணம், மாநாடு, கோயில் விசேஷம், யோகா வகுப்புகள் என்று எல்லா நிகழ்ச்சியிலும் நீக்கமற நிறைந்திருப்பார். ஆக ஆட்களின் தேவை அவருக்கு இருந்துகொண்டே இருக்கும். இதே கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் பல மாநாடுகள், பொதுக்கூட்டங்களுக்குப் பெரிய அளவில் சமைத்துப் போட்டிருக்கிறார்.


இப்பவெல்லாம் பிரியாணி குவாட்டர் இல்லாம எவன் கூட்டத்துக்கு வர்றான்? பந்தல் எப்படியோ அப்படியே பிரியாணியும் கட்டாயமாகிவிட்டது. அதுவும் புல்லட் மணி இருக்கும் கட்சிக்கு அதிகம் ஆள் பலம் கிடையாது. சோத்தைப் போட்டுத்தான் கூட்டம் கூட்டணும். அதனாலதான் வடை பாயாசம்னு திமிலோகம்...

முருகேசனுக்குச் சின்ன வயசிலேயே அப்பா இறந்துவிட தாய்மாமன் தயவில்தான் வளர்ந்ததும் படித்ததும். கல்லூரிக்குப் போகும் சமயத்தில் அம்மாவும் தவறிவிட மாமா நைசாக 'தபால்ல எல்லாம் படிக்கிறாங்களே. அப்படி படியேம்பா' என்று கைக்கழுவி விட்டார். அப்படியாகப் படித்ததுதான் எம்.ஏ டிகிரி. வேலைக்கு எல்லாம் உத்திரவாதம் இல்லாத படிப்பு.

தம்பண்ணாவிடம் வேலை கேட்டு வந்தபொழுது அவர் கேட்ட முதல் கேள்வியே 'என்ன படிச்சிருக்கே?' என்பதுதான். சொல்ல சங்கோஜப்பட்டு "அதிகம் ஒண்ணும் படிக்கலைங்கண்ணா.. எழுதப் படிக்கிற அளவுதான்.." என்றான்.

"எதுக்குக் கேக்கறேன்னா இங்க எல்லா வேலையும் செய்யவேண்டி வரும்.. உனக்கோ சமைக்கத் தெரியாது டிரைவிங் தெரியாதுங்கறே.. பரிமாற, சுமை தூக்க, இலை எடுக்க இதுக்கெல்லாம் யோசனை பண்ணக் கூடாது. மண்டபத்துல விசேஷம்னா இலை எடுக்க ஆளு இருக்கும். கட்சி மாநாடு, கோயில் திருவிழா இங்க எல்லாம் நாமதான் செய்யணும். பரவாயில்லைன்னா வா.. நாளைக்கே மேல்மலையனூர்ல ஒரு கோயில் ஃபங்க்ஷன்."

அப்படி ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி அவரிடம் சேர்ந்ததுதான். தங்கவும் திங்கவும் ஒரு பிரச்சினை இல்லை.. பெரும்பாலும் வேனில் இருந்து மளிகை, காய்கறி மூட்டைகளைச் சமையல் அறை அல்லது ஸ்டோர் ரூம்முக்குத் தூக்கிச் செல்வது,



அரிசி களைதல், காய்கறி கழுவுதல் என்கிற மாதிரிதான் அவனது வேலைகள் இருக்கும். சமயத்தில் காய்கறி வெட்டித் தருவான். ஆனால் எதிலும் அதிநிதானம். நேரத்துக்கு ஏத்த மாதிரி வேகமாக முடிக்க வராது. ஆனால் இலையைக் 'கட்டி'ல் இருந்து பிரித்துப் பதனமாக நறுக்கி காம்பு கிழித்து டிபன் இலை, சாப்பாட்டு இலை என நறுவிசாக அதிக சேதாரம் இல்லாமல் தரம் பிரித்து வைத்துவிடுவான். இலை வைக்கும்போதும் அதே நிதானம்.. கிழியாமல் கொள்ளாமல் பந்தியில் ஆள் பார்த்துப் போட்டுவிடுவான். அதனால் அந்த வேலைக்கு அவனை விட்டால் யாரையும் அதிகம் விடமாட்டார் தம்பண்ணா. அப்படித்தான் அவனுக்கு இலை முருகேசன் என்று பெயர் வந்தது. என்ன... இலை எடுப்பதும் அவன் வேலையாகிவிடும். அதுவும் பந்தி பரிமாறும்போது 'எலை .. எலை இங்க வாப்பா எலை'ன்னு நேத்து வேலைக்கு வந்த பய கூட கூப்பிடும்பொழுது எரிச்சலாகும். ஆனால் உள்ளுக்குள் ஏதாவது ஒரு வசனமோ பாட்டோ சம்பந்தமில்லாமல் ஓடிக்கொண்டே இருக்கும்.

இப்படித்தான் ஒரு விசேஷத்தில் ஒருத்தன் குடித்துவிட்டு 'ஏலேய்.. ஏலேய் எச்சக்கலை' என்று நக்கலாகக் கூப்பிட கடுப்பாக அவனருகே சென்று எதையோ சொல்ல முயற்சிக்க.. வார்த்தைகள்தான் வராமல் சதி செய்தன. ஆனால் உள்ளுக்குள் ஒரு குரல் அவனையே பார்த்து 'பச்சின்னு இருந்த தலை வாழை இலையை எச்சிலாக்குன எச்சக்கலை நீதாண்டா' அப்படின்னு திட்டிக்கொண்டே இருந்தது.

எச்சில் இலை எடுப்பது மாதிரி மகா கேவலமான வேலை உலகத்திலேயே இல்லை


என்று எல்லா வேலைக்காரனும் தன்னுடைய வேலையைக் கடினம் என்று சொல்வது போலச் சொல்லிக்கொள்வான். மூடாமல் போகும் எச்சில் இலை அப்படியே மனிதனின் அத்தனை விகாரங்களையும் கொட்டி வைத்தால் போலக் கிடக்கும். மெத்தப் படித்து நாகரீகமாக உடை அணிந்தவர்கள் கூட ஒரு தொழுநோயாளியின் உடல் போலச் சாப்பிட்ட இலையை விட்டுச் செல்லும்போது முருகேசனுக்குக் கோபமாக வரும். 'அகத்தின் அழகு, தின்ன இலையில்தான் தெரியும்' என்று அடிக்கடி சொல்லுவான். ஒரு சிலர் இலையைக் கழுவி வைத்தாற்போல அத்தனை கணக்காகச் சாப்பிட்டிருப்பார்கள்.

அவர்கள்தான் இலை எடுப்பவர்களுக்கு மிகப் பிடித்தமானவர்கள். அவர்கள் பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்து பல பந்திகளைக் காண வாழ்த்துவான். இன்னும் சிலர் இலை மீது காய்கறிகளை மென்று தின்று அத்தனை ஆங்காரத்துடன் காறித் துப்புவார்கள்.

தம்பண்ணாவிடம் சொல்லுவான், "அண்ணே இனும.. முருங்கைக்காய் சாம்பாருக்கு ஒத்துக்காதீங்கண்ணே."

"ஏண்டா?"

"அட என்னங்கண்ணே... எனுமோ சண்டைக்காரனுங்க வாயில எதிரிங்க கட்டை



வெரலு கெடைச்ச மாறி அப்படி கடிச்சுக் குதறி இலை மேல துப்புரானுங்க.”

“இலை எடுக்கறவன் சாப்பிடறவனைப் பாக்கக் கூடாதுடா.. அதுக்குத்தான் உன்னை இலை போடச் சொன்னா, திரும்பவும் எடுக்கத்தான் அனுப்புறது.. இடையிலே எந்தப் பதார்த்தத்துக்கும் பரிமாற அனுப்பறதில்லே..”

தம்பண்ணாவுக்குக் குடும்பம் குழந்தை குட்டி என்று எதுவுமில்லை.. ஆனாலும் ராப்பகலாக உழைக்கிறார்.

“எதுக்குண்ணே பேய் மாதிரி இப்படி ஒழைக்கறீங்க? மாசத்துக்கு நறுக்கா மூணு நாலு விசேஷம் ஒப்புத்துக்கிட்டு மிச்ச நாளு அக்கடான்னு வூட்டுல கெடக்காம..” என்று ஒருநாள் கேட்டான் முருகேசன்.

“நான் மட்டும் தின்னு, தூங்கி நாளைக் கழிச்சா போதுமாடா? ஒன்னை மாதிரி நாலு பேருக்குப் பொழப்புக்கு வழி செய்ய வேணாமா? அதுவுமில்லாம சாப்பிட்ட கை ஈரம் காயறதுக்குள்ள தேடி வந்து ‘அடடா பிரமாதம்’னு யாராச்சும் சொல்றப்ப கெடைக்கிற சொகம் இருக்கே அதுக்கு நாய் கணக்கா தேயலாம்டா” என்று அவர் சொன்னபோது மனதுக்குள் ஒரு பாடலின் ஒற்றை வரி செய்தித் தொலைக்காட்சியில் திரும்பத் திரும்ப ஓடும் பிரேக்கிங் நியூஸ் போல ஓடி இம்சை செய்தது.

அடுத்தவர்களுக்காக உழைக்கும் ரட்சகர் தம்பண்ணா என்று தோன்றியபோதுதான் அந்தப் பாடல் நினைவுக்கு வந்தது. கூடவே அந்த வரியை ஒலிக்கும் கரகரத்த குரல் யாருடையது என்று யோசித்து யோசித்துப் பார்த்தான். இன்னொரு இடியாப்பச் சிக்கலை அவன் முன் கொட்டிவிட்டு அந்தக் கேள்வி மட்டும் சிவனே என்று மனசுக்குள் உட்கார்ந்திருந்தது. ‘அன்ன மாட்சி அனையராகி’ என்கிற அந்த வரி அதற்கு மேல் நகர மறுத்து இம்சை செய்தது. இதுபோல் மறந்துபோன வரிகளை நினைவுபடுத்த வழக்கமாகப் பள்ளி படித்த காலத்தில் அமர்ந்திருந்த டெஸ்க்கின் மரச்சிம்பைப் பெயர்ப்பதில் இருந்து நினைவுபடுத்த முயற்சிப்பான். எப்படியாவது பிடிபட்டுவிடும். ஆனால் இந்த முறை ரொம்பச் சண்டித்தனம் செய்தது. ரெண்டு நாட்களாக அந்த ஒற்றை வரி பல் துலக்கும்போதும், கழிவறையில் அமர்ந்திருந்தபோதும் கூட குடைந்துகொண்டே இருந்தது.

கள்ளக்குறிச்சியில் ஒரு திருமண விழாவில் பந்தியில் இலை எடுத்துக்கொண்டிருக்கும்போது எதிர்பாராமல் அடுத்த வரிசையில் நாதமுனி அய்யாவைப் பார்த்தபொழுது ஒரு கணம் உலகமே தன் சுழற்சியை நிறுத்திவிட்டு அவனையே உற்றுப் பார்ப்பது போல இருந்தது. அதே சமயம் அவர் வகுப்பறையில் மண்டையில் நறுக்கெனக் குட்டி “முண்டம், முண்டம் (அது அவர் ட்ரேட் மார்க் வார்த்தை) அடுத்த வரி ஞாபகம் வரணும்னா முதல் வரியிலே கடைசி எழுத்து மெய்யெழுத்தா இருந்தா அதையும் சேர்த்துச் சொல்லிப் பழகணும்னு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்” என்று கரகரத்த குரலில் கோபத்துடன் முதுகிலும் குத்துவார் என்பது நினைவுக்கு வந்தது.

சட்டென அந்த வரி மெய்யெழுத்தோடு மின்னியது. ‘அன்ன மாட்சி அனைய ராகித்’ என்று தோன்றிய மறுகணம் ‘தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மை யானே’ என்று மிச்ச வரிகளும் பொறியில் மாட்டிய எலியை இரக்கமுள்ளவன் திறந்துவிட்டால் ஓடி வருவது போல ஓடி வந்தன. உள்ளுக்குள் ஒலித்துக்கொண்டிருந்தது அது நாதமுனி அய்யாவின் குரலேதான் என்று இன்னொரு குரல் ஆர்க்கிமிடீஸ் போல உள்ளுக்குள் துள்ளிக் குதித்தது. மிதமிஞ்சிய சந்தோஷத்தில் இலை எடுக்கும் அன்னக்கூடையுடன் அவர் முன் நின்றான்.

“அய்யா உங்களுக்கு என்னை நெனப்பு இருக்கா?” என்று கேட்டான். அவர் நிச்சயம் நினைவு வைத்திருப்பார் என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் நம்பினான்.

“யாருப்பா?” என்றார் கண்களைச் சுருக்கிக்கொண்டே.

“நான்தான் அய்யா முருகேசன்.. நைன்த் Fலே உங்ககிட்டேதான் படிச்சேன்.”

அவர் தாங்க முடியாத அவமானத்துடன் யாராவது பார்க்கிறார்களா என்று சுற்றிலும் திரும்பிப் பார்த்தார். சோதனையாக அவருக்குப் பக்கத்தில் இருந்தவன் அவர் என்ன சொல்லப்போகிறார் என்கிற ஆவலுடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பார்த்துக்கொண்டிருந்தது அவரது அவமானத்தின் ரேட்டிங்கை இன்னும் அதிகப்படுத்தியது.

நாதமுனி அய்யா சாமர்த்தியமாக “அந்த வத்தக்குழம்பை இங்க வரச் சொல்லு” என்றார்.

சாப்பிட்ட இலைகள் பாதி நிரம்பிய அன்னக்கூடை அப்பொழுதுதான் அவன் கையில் கனத்தது. ஒரு கலெக்டரோ, டாக்டரோ எதிர்பாராத இடத்தில் முன்னாள் மாணவன் என்று அறிமுகமானால் அவர் முகம் ஆனந்தத்தில் மலர்ந்திருக்கலாம். ஒரு இலை எடுப்பவனை எப்படி தன்னுடைய முன்னாள் மாணவன் என்று பெருமிதத்துடன் சொல்லிக்கொள்ள முடியும்? என்கிற ஞானம் தாமதமாகத்தான் உதித்தது. அங்கிருந்து அவன் மெல்ல நகர்ந்தபொழுது ‘பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே’ என்கிற வரியை மனக் குரல் ஜபித்தது. நிச்சயமாக அது நாதமுனி அய்யாவின் குரல் இல்லை. வலியும் எரிச்சலும் ஒன்றோடொன்று போட்டி போட்டு அவனை வதைத்துக்கொண்டிருந்தாலும்... நாதமுனி அய்யா, ஏதோ ஒரு மண்டபத்துச் சாப்பாட்டுக் கூடம், மக்களின் சலசலப்பு என்று மனக்கண்ணுக்குள் லஜ்ஜையின்றிக் காட்சிகள் ஓடிக்கொண்டுதான் இருந்தன.

வேனின் பின்பக்கம் அவனைக் கிடத்த தூக்கியபோதுதான் தீக்காயத்தின் எரிச்சல் உயிர்போவது போல வாட்டியது. “பெருமாள் பத்து பதினைஞ்சு வாழை இலையை எடுத்துட்டு வா. நல்லா இளசா, நீட்டா பார்த்து எடுத்துட்டு வா” என்று பத்து கத்தினான். அவன் குரலே அப்படித்தான். பெருமாள் ஓடிப்போயி ஒரு கட்டாகவே எடுத்து வந்தான். அதில் இருந்து இளசாக இருந்த இலைகளை எடுத்தான் பத்து. எண்ணெய் கிண்ணத்தை எடுத்துத் தளர அதில் ஊற்றினான். இலை முழுக்க சலும்பத் தடவினான். முருகேசனின் ஆடைகளை முழுமையாகக் களைந்துவிட்டு அந்த இலைகளில் கிடத்தினான். பிறகு மேலாக இரண்டு இலைகளை அழுத்தாமல் அப்படியே பாந்தமாக வைத்தான். கொஞ்சம் இதமாக இருப்பது போலத்தான் பட்டது.

“ஏண்டா ஆஸ்பத்திரிக்கே போயிடலாமா? எனக்கென்னவோ பயமா இருக்குடா.”

“ஒண்ணும் பயப்படத் தேவையில்லைண்ணா. காயம் அதிகமில்லே.. அவருதான் டாக்டரை அனுப்பறேன்னு சொல்றாரு இல்லே.. சொன்னபடி செய்ற ஆளுதான். அவரு நெனச்சா சென்னையிலேர்ந்து கூட டாக்டரை வரவச்சிடுவாரு.. இப்பம் அவனுக்குச் செலவு பண்ண யாரு இருக்கா.. நீ மட்டும் என்ன குதுருக்குள்ளயா காச குமிச்சு வச்சிருக்கே.. வந்ததை எல்லாம் கேட்டவங்களுக்குக் குடுத்துக் காசை வுட்டு ஒட்டி இருக்கே.. ஊரு நுப்பம் அறிஞ்சு உடும்பைத் தோளுல போட்டுக்கணும்.. புல்லட்டு பேரு கெட்டுடும்னு பயந்து கெடக்கான்.. அப்படியே மாட்டைத் தடவிக் கொடுத்து மடியைப் பிடிச்சிக்கணும்.. இவன் மாமன்காரன் எட்டிக்கூட பாக்கமாட்டான்.. கவலைப்படாதேண்ணே.. எல்லாம் செரியாயிடும்” என்று ஆறுதல்படுத்தினான் பத்து. அப்படி ஆறுதலாக பத்து சொன்னால் தம்பண்ணாவுக்கு மனம் நிம்மதியாகிவிடும்.

ஒரு கூட்டத்தில் ஏதாவது ஒரு குரல் இப்படி சப்தமாக இணக்கமாக ஒலித்தால் எல்லோருக்குமே மனம் லேசாகிவிடும். போர்த்திய வாழை இலை முருகேசனை ஒரு தாய் போல அணைத்துக்கொண்டிருந்தது போதுமாக இருந்தது முருகேசனுக்கு.. பந்தியில் இலை போடும்போது சில சமயம் தோன்றும் வரிகளை மனம் இப்பொழுது முணுமுணுத்தது.

“குமரி வாழையின் குருத்து அகம் விரித்து – ஈங்கு அமுதம் உண்க அடிகள்..”

■

கரிகாலன்

# தேநீர் சாலை




## தகவு - 50

~

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தகவு மின்னிதழில் ‘தேநீர் சாலை’ தொடர் எழுதுகிறேன். சங்க இலக்கியம், நவீன இலக்கியம், சினிமா பார்வைகள், அன்றாட வாழ்வின்வழி அடையும் தரிசனங்கள்.. இவையே தேநீர் சாலை உரையாடலின் உள்ளடக்கங்கள்.

இன்று பேசும்போது, ‘அடுத்து வெளியாகப்போகும் தகவு, 50வது இதழ்!’ என்றார் ஜின்னா.

இலக்கியம், எழுத்து சார்ந்த வேலைகளால் மனிதர்களால், தங்கள் மரணத்தைத் தள்ளிப்போட முடியும்.

‘ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இறப்பதில்லை, அவரால் முடியும்போதுதான் இறக்கிறார்!’ என்பார் கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ்.

தகவு இதழ் தன்னை வாசிப்பதன்வழி மனிதர்களின் இறுதியைத் தள்ளி வைக்கிறது.

‘அவர் இன்னும் வாழாததால், அவர் மரணத்திற்கு மிகவும் பயப்படுகிறார்!’ என்கிறார் காஃப்கா.

ஜின்னாவும் அவரது நண்பர்களும் தகவின் இயக்கமும் மனிதர்களின் படைப்புணர்வைத் தூண்டி அவர்களை வாழவைக்கிறது. மரணம் குறித்த அச்சத்தை விலக்குகிறது.

தகவு இதழுக்கு வாழ்த்துக்கள்!

•

## விக்ரம் - பேன் இந்தியா படங்களின் பின்னடைவு!

~

விக்ரம் பார்த்தேன். மிகச் சுமாரான படம்தான். இன்டர்வெல் வரை ஃபகத் பாசில் படம் பார்த்துக்கொண்டிருப்பது போல் தோன்றியது.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கமல் நடித்திருக்கிறார். இடையில் அரசியல் பயணம், பிக்பாஸ் என விலகியிருந்தார் என்பதால் எதிர்பார்ப்பு இருந்தது.

கைதியைப் போல் போதைப் பொருள் கடத்தலை மையமாகக் கொண்ட படம்தான் விக்ரமும். இருப்பினும், கைதியில் இருந்த டெம்போ விக்ரமில் இல்லை.

பேன் இந்தியா பெயரில் வருகிற படங்கள் பெரும்பாலும் ரெண்டுங்கெட்டானாகவே இருக்கின்றன.

போதைப் பொருளை வைத்து எடுக்கப்பட்ட கேங்ஸ்டர் படங்களுள் முக்கியமானது சிட்டி ஆஃப் காட். அது தனிமனிதர்களின் கதை மட்டுமில்லை. குற்ற நிலத்தின் கதையாகவும் இருந்தது.

ரியோடி ஜெனிராவை ஒட்டிய

சேரியொன்றில் புழங்கும் போதைப் பொருளால் எப்படி சிறார் குற்றவாளிகள் உருவாகிறார்கள்? என்பதை இயக்குநர் காட்டியிருப்பார்.

வறுமை, கல்வியறிவின்மை, சமத்துவமின்மை காரணமாக உருவாகும் சிறார் குற்றவாளிகளை வசீகரிக்கிறது போதை மருந்து கும்பல். இங்கு அன்பு, கருணை, இரக்கம், போதனை, தத்துவம் எதற்கும் இடமில்லை. இதன் விதிகள் துப்பாக்கி முனையில் எழுதப்படுகின்றன.

இத்தகைய பின்னணிகள் எதுவும் விக்ரம் படத்தில் இல்லை. இதிலும் போதைப்பொருள் மாஃபியாவான விஜய்சேதுபதியின் தோற்றத்தை ஒரு விளிம்புநிலைப் பாத்திரம்போல்தான் காட்டியிருக்கிறார்கள். ஆனால், கோகெய்ன் கடத்தலென்பதெல்லாம் தமிழ்நாட்டு விளிம்பு நிலை வாழ்வுக்குச் சம்பந்தமில்லாதது.

மேலும் பேன் இந்தியா படம் எடுக்கிறேன் பேர்வழியென்று சமீபகாலமாகத் தமிழ்ப்பட அடையாளத்தைத் தொலைத்துவிடுகிறார்கள்.

சினிமா போன்ற கலைவடிவங்கள் உணர்ச்சியோடு இணைந்து இயங்குபவை. அப்படி, விக்ரம் படத்தில் பார்வையாளர்களின் உணர்சியோடு இணைகிற காட்சிகள் எதுவும் இல்லை.

கைதி படத்தின் திரைக்கதை அமைதி விக்ரமில் இல்லை. ஒன்றரை மணி நேரத்தில் முடித்திருக்க வேண்டிய சிறிய கதையை ஜவ்வுபோல இழுக்கிறார்கள்.

எம்ஜிஆர், சினிமாவைத் தன் அரசியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார். நேற்று வந்த உதயநிதிகூட தமிழகத்தின் தலையாய பிரச்சனையான தீண்டாமையை மையப்படுத்தி நெஞ்சுக்கு நீதி எடுத்தார்.

ஆனால் கமலோ தமிழகத்துக்குச் சம்பந்தமில்லாத ஒரு பிரச்சனையைப் படமாக்கியிருக்கிறார். காரணம் எளிது. வியாபாரம்.

விக்ரம் படத்தில் கமல் நடித்திருக்கிறார். ஆனால், கமல் படமாக இல்லை. பகத் ஃபாசில் நடித்திருக்கிறார். பகத் ஃபாசில் படமாவும் இல்லை. விஜய் சேதுபதி நடித்திருக்கிறார். விஜய் சேதுபதி படமாகவும் இல்லை. படத்தை லோகேஷ் இயக்கியிருக்கிறார். லோகேஷ் படமாகவும் இல்லை.

எல்லாப் பாத்திரங்களும் தமிழ்தான் பேசுகின்றன. ஆனால் தமிழ்ப் படமாகவும் இல்லை.

தக்காளி கிலோ எண்பது ரூபாய் விற்கிறது. லோகேஷ் படத்தைப் பார்த்தால் தமிழ்நாட்டில் சர்வசாதாரணமாகப் பீரங்கிகள் கிடைப்பதைப்போல் தெரிகிறது.

இதில் சூர்யா வேறு. இன்னொரு விஜய்சேதுபதி போல அவரும் கஷ்டப்பட்டு, நம்மையும் கஷ்டப்படுத்துகிறார்.

தமிழ் சினிமா ரசிகர்களை நினைத்தால் பாவமாக இருக்கிறது. மணிரத்னம், கமல் படங்களைக் குறை சொன்னால், நம் ரசனையைக் குறைத்து மதிப்பிடுவார்களோ? என்றெண்ணுகிறார்கள் போலத் தோன்றுகிறது.

•

## அப்பாவின் சைக்கிள்!

~

மாடுகளுக்கு ஏன் சிரிக்கத் தெரியவில்லை? ஆகாயம் ஏன் நீலமாக இருக்கிறது? மீன்கள் தண்ணீருக்குள் எப்படி தூங்கும்? கடவுளுக்குப் பசியெடுக்குமா?

அப்பா சைக்கிள் மிதித்துக்கொண்டிருப்பார். காலை இளவெயில். அவரது வெள்ளைச் சட்டையின் முதுகுப் பக்கம் நனைந்திருக்கும். கேரியரில் உட்கார்ந்திருப்பேன். பள்ளிக்கூடம் வரும்வரை அவரிடம் ஏதாவது கேள்விகள் கேட்டபடி இருப்பேன்.

பக்கத்து ஊரான சி. கீரனூர் பள்ளியில் அவர் ஆசிரியர். நான் மாணவன்.

அப்பா என்னை சைக்கிளில் அழைத்துச் செல்லும் பாதை அழகானது. இரு மருங்குகளிலும் நெல், கரும்பு வயல்களைக் கொண்டது.

ரலே சைக்கிளை அவர் வாங்கி வந்த இரவு எனக்குச் சரியாகத் தூக்கம் பிடிக்கவில்லை.

நள்ளிரவு எழுந்து வந்து அதைத் தடவியபடி இருந்தேன். சைக்கிள் மணியை ஒலித்தபோது தூக்கம் கலைந்து அப்பா வந்தார். என்னைத் தோட்டத்துக்கு அழைத்துப்போய்ச்

சிறுநீர் கழிக்கவைத்து மீண்டும் உறங்க வைத்தார்.

எங்கள் சைக்கிளுக்கு சிறகு முளைத்திருந்தது. வானத்திலிருந்து சைக்கிளை அப்பா கீழே போட்டுவிடுவாரோ! நான் அஞ்சவில்லை.

அப்பாவின் சைக்கிள் கேரியரிலிருந்து பிள்ளைகள் விழமாட்டார்கள். அப்படியே விழுந்தாலும் ரத்தம் வராது. தக்காளி சட்னிதான் வரும். பிள்ளைகள் அதைத் தொட்டு நக்கிப் பார்ப்பார்கள்.

வானத்திலிருந்து எங்கள் வெள்ளாற்றைப் பார்த்தேன். அது ஒரு வெள்ளி அரைஞாண் கொடிபோல் தெரிந்தது.

பாராசூட்டைப்போல சைக்கிள் மெல்ல மெல்லத் தரையிறங்கியபோது, தோட்டத்தில் சேவல் கூவியது.

ஒருநாள் கேரியரில் உட்கார்ந்தபடியும் கனவுகண்டேன். வீலில் கால் மாட்டி 'அம்மா'வென அலறினேன். அப்பா வேட்டியைக் கிழித்துக் கட்டுபோட்டார். அந்தக் கிழிந்த வேட்டியோடு வகுப்பறையில் *article* நடத்தினார்.

எங்கள் பயணத்தின் இடையே சில நாட்கள் சைக்கிள் பஞ்சராகியிருக்கிறது. என்னை அமரவைத்து சைக்கிளைத் தள்ளியபடி வருவார்.

சில நாட்களில் செயின் கழன்றுவிடும். ஒரு வேப்பமர நிழலில் அப்பா என்னை அமர வைப்பார். செயினைப் பொருத்துவார். கைகளில் மசி இழும்பியிருக்கும். கைகளைப் பக்கத்தில் ஓடும் வாய்க்காலில் கழுவுவார்.

அப்பாவுடைய சைக்கிள் ஒரு ஜென் குரு. அது எங்களுக்கு அமைதியை, பொறுமையை, நிதானத்தை, சாத்வீகத்தைக் கற்றுக்கொடுத்தது.

ஒரு கல்யாண வீட்டின் இரவு. அப்பா களைத்து உறங்கிக்கொண்டிருந்தார். ஒருவர் அப்பாவை எழுப்பிச் சைக்கிள் சாவியைக் கேட்டார். அப்பா சாவியை எடுத்துக் கொடுத்தார். காலையெழுந்தபோது அப்பா யாரிடம் சாவியைக் கொடுத்தாரோ, அவரை உறவினர்கள் திருடர் என்றார்கள்.

எந்த வன்முறையும் செய்யாமல் திருட அனுமதிக்கும் பெரிய மனசு அப்பாவுக்கும் அவரது ரலே சைக்கிளுக்கும் இருந்தது.

அப்பா ஹெர்குலிஸ் வாங்கியபோது எனக்குக் குரல் உடைந்திருந்தது. மறைவிடங்களில் மயிர்க்கால்கள் எட்டிப்பார்த்தன.

எங்கள் ஊருக்கு சைக்கிள் வித்தை காட்டும் ஷாஜகான் வந்தார். அவரது மும்தாஜ் ரெகார்ட் டான்ஸ் ஆட, அவர் சைக்கிள் சீட்டில் நின்றார், படுத்தார், உருண்டார்.

அப்பாவுடைய ஹெர்குலிஸில் நான் ஷாஜகானளவு இல்லை. அஞ்சலை பார்க்கிறாளே! என்று ரெண்டு கைகளை மட்டும் ஹேண்டில் பேரிலிருந்து எடுத்தேன்.

என்னைப் பக்கத்து வாய்க்காலிலிருந்து தூக்கிவிட்டது மட்டுமில்லை. 'இதை யாரிடமும் சொல்லமாட்டேன்!' கமுக்கமாகச் சிரித்தபடி தலை துவட்டிவிட்டாள்.

ஒருநாள்கூட சைக்கிளில் அம்மாவை வைத்து ஓட்டியதே இல்லை அப்பா. அப்படி ஒரு சந்தர்ப்பமே அமையவில்லையா? நிலவுடைமைச் சமூகம் ஏற்படுத்திய தயக்கமா? தெரியவில்லை.

சிந்து, சுடர், கார்க்கி அனைவருக்குமே சைக்கிள் வாங்கிக் கொடுத்தோம். அவர்கள் பள்ளி முடித்தார்கள். தேவைப்படுகிறவர்களுக்கு அந்தச் சைக்கிள்களைக் கொடுத்துவிட்டோம்.

தான் போகும் பாதையில் கார்பனை எரிக்காமல், மறையும்வரை அப்பா வாழ்ந்தார்.


எங்கோ புழுதிக்காட்டில் இருந்த இரண்டு பிள்ளைகளை ஒரு சைக்கிளில் மிதித்தே சற்று வசதியான இடத்துக்கு அழைத்து வந்தார்.

எதிர் மேடுகளில் பெடலைச் சிரமப்பட்டு மிதித்தபோது அவர் இதயத் துடிப்பை நாங்கள் கேட்டோம். வேர்வையோடும் முனைப்போடும் உயரம் ஏறுவதை, அப்பாவிடமும் அவர் சைக்கிளிடமும் கற்றோம்.

அப்பா மட்டுமல்ல. அவர் சைக்கிளும் நீதிமான்! ■

வே.செவ்வந்தி

# ஒரு மிடறு அடர் வெண்மை கவிதையின் சுதந்திரம்




ஈழத்துக் கவிஞர் மிஸ்ரா ஜப்பார் அவர்கள் இயற்றிய கவிதை நூல் ஒரு மிடறு அடர் வெண்மை. "மிஸ்ராவின் கவிதைகள் நளினமாகவும் மென்மையும் நுண்மையும் கலந்த அனுபவங்களாகவும் உருவாகின்றன. இந்தத் தொகுப்பில் உள்ள கவிதைகளை வாசிக்கிறபோது அவர் தாகம் கொண்ட மீன் மட்டும் அல்லர், மறுப்புகளைத் தின்று வளரும் மீன் குஞ்சு எனச் சொல்லத் தோன்றுகிறது. விடுதலையையும் உள்நோக்கிய ஆன்மீகத் தேடலையும் புறவெளியின் அழகியலையும் தாபங்களையும் தவிப்புடன் இணைக்கின்றன அவர் கவிதைகள்" என்றும் "எழுத்தில் புதைந்து கிடக்கின்றன ரகசியங்கள், அவற்றை அடையாளம் காண முடியாதபடி ஏராளமான புனைவுகள் சூழ்ந்து கிடக்கின்றன" என்றும் சேரன் அவர்கள் இக்கவிதை குறித்துக் கருத்து கூறுகிறார்.

“வரையறைக்குள் கட்டுண்டு போகமறுக்கும் படிமங்களிலும் சிந்தனைகளிலும் உயிர் பெறுகின்றன என் வரிகள். அவை மௌனக் கோரிக்கைகளாகவும் அணைத்துத் தழுவும் பெருநீர்ச்சுனைகளாகவும் இத்தொகுப்பில் விரவிக் கிடக்கின்றன” என்று தன் கவிதை குறித்து ஆசிரியரே விளக்குகிறார். இதன் அடிப்படையில் நோக்கும்போது மிஸ்ராவின் கவிதைகள் பெரும்பாலும் படிமங்களாகக் காட்சி தருகின்றன என்பதனை அறியமுடிகிறது. இந்தப் படிமங்களை உணர்வது ஒவ்வொரு வாசகனின் மனநிலையைப் பொறுத்ததாகும். நான் இந்தப் படிமம் நிறைந்த கவிதைகளை இரண்டு பொருண்மையின் அடிப்படையில் நோக்குகிறேன்.

1. ஏதிலியின் நிலையிலிருந்து நோக்குதல்

2. பெண் உணர்வுகள்வழி நோக்குதல்

இந்த இரண்டின் அடிப்படையில் சமூகநிலையினை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தாகத்தின் நீளம் முடிவற்றது

எழுத்து பற்றி எழுதத் தொடங்கும் மிஸ்ரா அவர்கள் வானத்தைச் சுவராகவும் அதில் சுதந்திரமாகச் சுற்றித் திரியும் பறவையை எழுத்தாகவும் கருதுகிறார்.

எழுத்தென்பது

அங்கீகரிக்கப்பட்ட கிறுக்கல்

வானச் சுவர் விரிய

உன் பறவை வியாபிக்கிறது

அது பார்வையற்ற விளிம்பில்

கனவுகளை நிறம் தீட்டிக்கொண்டிருக்கிறது

என்று எழுத்தினை ஒரு அங்கீகரிக்கப்பட்ட கிறுக்கல் என்று ஆசிரியர் கூறுவது சிந்திக்கத்தக்கது. அப்படிப்பட்ட எழுத்தானது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கிறுக்கல். பரந்து விரிந்த ‘இந்த அண்ட வெளியில் மென்காற்றின் நூலிழையாய் எழுத்துக்கள் உருகத் தொடங்கின’ என்கிறார். ‘பார்வையற்ற விளிம்பில் கனவுகளை நிறம் தீட்டிக்கொண்டிருக்கிறது’ என்கிறார். பார்வையற்றவர்களுக்கு நிறம் எப்படித் தெரியும். கருப்பு, வெள்ளை நிறங்களை மட்டுமே அவர்கள் அறிவார்கள். இவ்விரண்டு நிறங்களைத் தவிர பிற நிறம் தெரியாதவர்கள் தன் கனவுகளை நிறம் தீட்டினால் எப்படி இருக்குமோ அப்படி அவர் தன் கவிதைகளைத் தீட்டிக்கொண்டிருப்பதாக விளக்கமளிக்கிறார். முடிவில் தாகத்தின் நீளம் முடிவற்றது என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் இவரை எழுத்தின் மீது தீராத தாகம் உடையவராக அடையாளம் காண முடிகிறது.

## உயிர்ப்பிக்கிறேன்

கதைகளுக்குள் ஒளிந்துகொள்கிறேன் என்று கூறுகிறார். அதாவது ஒரு கருத்தை வெளிப்படையாகக் கூறிவிட இயலாத நிலையில் அதனை ஓவியமாகவோ அல்லது கவிதையாகவோ கதையாகவோ ஏதோ ஒரு கலையின் மூலமாகச் சொல்லுவது என்பது பாதுகாப்பான ஓர் இடமாக அம்மாவின்பின் ஒளிந்துகொள்ளும் ஒரு குழந்தையின் மனநிலையைப் போன்றது என விவரிக்கிறார் ஆசிரியர். தொடர்ந்து கூறுகிறார்,

இருளோடு பிணைந்த

மென் வெளிச்சங்களில் எல்லாம்

என் பாதையை அளவெடுக்கிறேன்

ஒளியில் உனை வாங்கி

உயிர்ப்பிக்கிறேன்

இதனை ஓர் பெண் எழுத்தாகப் பார்க்கும்போது, பாதை தெரியாத இருளில் ஒரு பெண் இரவில் தனிமையில் நடப்பதென்பது எப்படிப்பட்ட பயத்தினை அவளுக்கு உருவாக்கும்? அப்படி பயந்து பயந்து நடக்கையில் அந்த இருளில் சிறு வெளிச்சம் தென்படும்போது அந்த வெளிச்சம் இருக்கும் தூரம் வரை அவள் பாதம் நடக்கும். ஒளி முற்றிலும் வந்த பிறகுதான் அவளுக்கு உயிரே வரும் என்பதனை உயிர்ப்பிக்கிறேன் என்கிறார். இந்தக் கண்ணோட்டத்திலும் பார்க்கலாம்.

இன்னொரு கண்ணோட்டம் இலங்கையில் நடக்கும் போர்ச்சூழலில் அவர்கள் பதுங்குக் குழிகளில் தஞ்சம் புகுந்தனர். அப்போது எந்த ஒளியும் இல்லாத அச்ச நிலையையும் சிறிது ஒளி தெரியும்பொழுது அவர்கள் தன் பாதையை அளவெடுத்து நகர்ந்தனர் என்ற வலியையும் பதிவு செய்யும் கண்ணோட்டத்திலும் இக்கவிதையை நோக்கமுடிகிறது.

**நிலவு ஓசை**

'கனவிலிருந்து அதிர்ந்து விழித்துக்கொள்கிறேன்' என்று துவங்குகிறார். அப்படியானால் கனவில் அவர் எதனையோ கண்டு பயந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. 'அறைக்கு வெளியே வீழ்ந்த நிலவு..' அந்த நிலவைப் பூந்தொட்டிகளுக்கு நடுவில் உள்ள கல் மேடையில் சிறை வைக்கிறார். தொடர்ந்து எழுதுகிறார்.

நிலவு

ஓசையை மூர்க்கத்தனமாய்

உறிஞ்சிக் குடிக்கின்றது

எல்லா அரவங்களும்

அடங்கும் வேளை

அவ்வோசை பாம்பென

என்னைக் கௌவிற்று

என்கிறார். நிலவுக்கு ஓசை உண்டா எனில் இல்லை. பின்பு ஏன் அவர் நிலவோசை தன்னைப் பாம்பாகக் கவ்விக்கொண்டது எனக் கூறுகிறார் என்றால் இலங்கைப் போர்ச்சூழலில் நாள் முழுவதும் போரின் ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும். இரவு போர் நடக்காத வேளைகளில்கூட அந்தப் போர்ச்சத்தம் (தன்னை விழுங்குவதாக) தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறது என்று படிமங்களாகப் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர்.

**கண்ணீர்**

எப்பொழுதுமே கண்களில் இருந்துதான் கண்ணீர் வரும். அந்தக் கண்ணீரை ஆசிரியர் பதிவுசெய்யும் விதம் வேறுபட்டது.

கண்களைத் தின்ற கண்ணீர்

என்றுமே ஓயாது

என்கிறார். கண்களையே தின்றுவிடும் அளவுக்குக் கண்ணீர் பெருகிக்கொண்டே இருக்கிறது. எதற்காக என்று நோக்குகையில் இறக்கும் வேளையில் என்று பதிவு செய்கிறார். இந்த இறந்துபடும் போர்ச்சூழலை மற்றொரு கவிதையில் கூறுகிறார்

நான் வரைந்த வானத்திலிருந்து

ஓர் கரிய நட்சத்திரம்

உதிர்கிறது

என்கிறார். நட்சத்திரம் கறுப்பாக இருக்குமா எனில் இல்லை. பிறகு ஏன் கரிய நட்சத்திரம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் என்ற கேள்வி எழுகிறதல்லவா. ரகர றகர வேற்றுமையைப் புரிந்துகொண்டால் இதனை அறிந்துகொள்ள முடியும். கறுமை என்றால் கறுப்பு நிறம் என்று பொருள். கரி, கருகுதல், கார்மேகம் என்பவற்றிற்கு சாம்பல் நிறம் பொருந்தும். எனவே கரிய என்பது சாம்பல் நிறத்தைக் குறிக்கும். அப்படியானால் கரிய நட்சத்திரம் என்பது போர்ச்சூழலில் எரிந்துகொண்டே வரும் குண்டு பாய்வதைக் குறிக்கிறது. மேலும் இந்த நிகழ்வை ஆசிரியர் பருவமழை என்கிறார்.

ஒருவனை ஒருவன் அடுதலும்,
தொலைதலும்

புதுவது அன்று; இவ்வுலகத்து இயற்கை;

\- புறநானூறு -76

என்று சங்க இலக்கியமானது போர் இயல்பாக நடக்கக்கூடிய ஒன்று என்று பதிவு செய்கிறது. இத்தகைய போரை ஆசிரியர் பருவமழையாகக் கருதியிருப்பது முற்றிலும் பொருந்தும். ஆனால் அந்தப் போர்ச்சூழல் வலியிலும் மனதைப் பக்குவப்படுத்தி ஒருவனை ஒருவன் அடித்துக்கொள்ளுதல் இயல்பு என்று பதிவுசெய்திருப்பது வியக்கத்தக்கதே. மேலும் பதிவு செய்கிறார்.

என் சவப் பெட்டிக்குள்

செத்து மடிந்த ஓர் மலர்

மரணம் திருடிய பருவத்தின்

நிசப்தச் செடியின்

ஆதி வேர்களையும் சூறையாடிற்று

என்கிறார். என் சவப்பெட்டிக்குள் செத்து மடிந்த ஓர் மலர் என்றால் என்ன பொருள்? கர்ப்பமாக இருந்த ஒரு பெண்ணைப் போர்ச்சூழலில் கற்பழித்துக் கொலை செய்யும் கொடுமை ஈழத்திலே நடந்தது. அப்போது தாய் இறந்துபட்டாள். எனவே அந்த உடம்பு சவப்பெட்டியாகவும் அந்தக் குழந்தை சவப்பெட்டிக்குள் செத்துக்கிடந்த மலராகவும் இருந்திருக்கக்கூடும். அத்தகைய அந்தப் பிறக்காத குழந்தைகளையும் ஆதி வேர்களையும் இந்தப் பருவமழை என்கிற போர்ச்சூழல் சூறையாடிப்போனதாகப் பதிவு செய்கிறார்.

## வன்மம்

'இரவு நிலவு குப்புறக்கிடக்கிறது' என்று துவங்குகிறது இந்தக் கவிதை. அதாவது நிலவு ஒரு பக்கம்தான் தெரியும். அந்த நிலவு கீழே விழுந்திருப்பது குப்புறக்கிடப்பது போல் தெரிகிறதாம். மேலும்

பாழடைந்த வீட்டைப் போல

சில நினைவுகளை

ஆழப் புதைத்து

மீண்டு கொண்டிருக்கிறேன்

வன்மம் சுமந்தலையும்

அவன் நாணிலிருந்து

விடுபட்ட அம்புகள்

இரைச்சல் அடங்கி

பின் அமைதி கொள்கின்றன

என்று கூறுகிறார். இன்று பலர் ஏதிலிகளாக வேறு இடம், வேறு நாடு சென்றிருப்பினும் அவர்கள் தன் தாய்நாடு திரும்பிச் சென்று பார்த்தபோது பல ஆண்டுகள் கழிந்ததால் அவர்கள் வாழ்ந்த வீடு பாழடைந்த வீடாக மாறிப்போயிருந்தது. இருப்பினும் அன்றோ அம்மக்கள் வாழ்ந்த வீடு அது. அந்தத் தெருக்களும் வீடுகளும் எத்தனை நிகழ்வுகளையும் நினைவுகளையும் தன்னுள்ளே சுமந்து கிடக்கும். இவை அத்தனையும் போர்ச்சூழலில் பாழாய்ப்போனது. எனது தாய் நாட்டில் என்னால் இருக்க இயலவில்லையே என்று தவிக்கும் மனநிலை அது. 'இந்த வன்மம் ஒரு பேர் இரைச்சலை எனக்குள் உண்டாக்குகிறது..' இங்கு இரைச்சல் என்ற சொல்லை ஆசிரியர் பயன்படுத்தியிருக்கிறார். ஓசை, சத்தம் என்றால் எப்படி இருந்தாலும் இனிமையானதாக இருக்கும். ஆனால் இரைச்சல் என்றால் அதற்குத் தேவையில்லாத ஒலி என்று பொருள். என்னால் வன்மத்தால் கத்த மட்டுமே முடிகிறது. புலம்ப மட்டுமே முடிகிறது. வேறு எதுவும் செய்ய முடியாது 'இறுதியில் அமைதி கொள்கிறேன்' என்று ஏதிலியாக தன் இயலாநிலையைப் பதிவு செய்கிறார் ஆசிரியர்.

## முடிவுரை

அவ்வளவு எளிதில் பொருள் புரிந்துகொள்ள இயலாத படிமங்களாகக் காணப்படும் கருத்துக்கள் நிறைந்த இந்தக் கவிதைகளை இலங்கையில் நடக்கும் போர்ச்சூழலைக் கொண்டு ஆராய்கையில் ஏதிலிகளின் நிலையினையும் பெண்ணின் மனச் செய்திகளைக் கூறுவதாகக் கொண்டும் நோக்குகையில் ஈழத்தில் உள்ள சமூக நிலையும் அங்கு பெண்களும் மக்களும் சொந்த வீடுகளை விட்டு விலகி ஏதிலிகளாகப் பிற நாடுகளைத் தேடிச் செல்லும் நிலையில் அவர்களின் மனதின் வலி எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்பதனையும் புரிந்துகொள்ள முடிகிறது. அந்தப் போர்ச்சூழலில் இருக்கவும் இயலாது, வெளியேறவும் இயலாது தவித்த மக்களின் தவிப்பு எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்பதனையும் உணர முடிகிறது. போர் முடிந்த சூழலிலும் பெண்களுக்கு இருக்கும் பாதுகாப்பற்ற தன்மை எப்படிப்பட்டது என்ற சமூகச்சிக்கல்களையும் இக்கவிதைகளின் வழியே அறியமுடிகிறது. ■

## பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

வாழ்த்துக்கள் என்றபடியே
வெளியே வந்தான்
அவன்

அழுதுகொண்டிருக்கிறேன் நான்...
இதற்கெல்லாம் கூட
நீ வாழ்த்து சொல்வாயா?
வெற்றி பெற்றால்தானே
வாழ்த்த வேண்டும்
என்றேன்
கண்களைத் துடைத்தபடி...

போட்டியில் வெற்றி பெற்றால் புன்னகை வரும்
அதுவே
வாழ்க்கையில் வெற்றி பெற்றால் கண்ணீர் வரும்
அதனால்தான்
உன்னை வாழ்த்தினேன்
என்றான்.

ஆனந்தத்தில் சிரிப்பதை விட
அழுவது எவ்வளவு ஆத்மார்த்தமானது
என்பதை அறிவாயா?
என்றான்



ஓ... மகிழ்ச்சியில் கூட
சிரிப்பதை விட்டுவிட்டு அழச்சொல்கிறாயா நீ
என்றேன்.

உனக்காக நான் சிரிக்கிறேன் என்றேன்.

பிறருக்காகச் சிரிப்பது
போலியாகிவிடும்
பிறருக்காக அழுவது புனிதமாகிவிடும் என்றான்

இப்போது அவனை உற்றுப்பார்த்தேன்..

கண்களின் மேன்மை
பார்வை மட்டுமே
என்று புரிந்துகொண்டதால்
கண்ணீரின் மகத்துவம்
உனக்குப் புரியவில்லை
அதனால்தான்
காலத்தின் வெற்றி
கண்ணீரே என்பதும்
உனக்குத் தெரியவில்லை
என்றான்.

எப்போதும் வெற்றிதானா?
எந்த இடத்திலும்
தோல்வி இல்லையா
கண்ணீருக்கு? என்றேன்.

மற்றவர்களை
சிரிக்கவைத்துப் பார்க்கலாம்
ஆனால்
மற்றவர்களை
அழ வைத்துப் பார்க்கும்
அந்த ஒரு இடத்தில்
உன்னால் தோல்வி அடையும்
கண்ணீர் என்றான்.
அவன் மேலும் சொன்னான்
மற்றவர்கள் உனக்காக அழும்முன்
மற்றவர்களுக்காக நீயும் அழுதுவிடு
அதுவே வானத்தில்
நீ விட்டுச்செல்லும்
விடிவெள்ளி
என்று சொல்லிவிட்டு
மறைந்தான்

– அவன் இன்னும் சொல்வான் ■

படைப்பு

சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..